கல்கி




குண்டு மல்லிகை அடுத்த இதழில் ஆரம்பமாகிறது

KALKI 28.7.1963 30 காசு



ஹார்லிக்ஸ் செய்யும் நன்மைக்கு
ஒரு உதாரணம் :
எங்கள் தாம்பத்ய வாழ்வு
கசந்தது
அசதியும் சலிப்பும் மேலிட
'வாழ்வாவது மாயம்'
என்று எண்ணத் தோன்றியது
இன்பம் பொங்கித் ததும்பிய எங்கள் இல்லற
வாழ்வு வெறிச்சோடிவிட்டது. எங்களைப் பிணைத்திருந்த
அன்புப் பாசம் தளர்ந்தது. என் அசதியின்
காரணமாக எதிலும் பிடிப்பில்லாமல் அவநம்பிக்கை
தலைதூக்கியது. என் போக்கைப் புரிந்துகொண்ட என் மனைவியும்
சலிப்புற்று ஒதுங்கி நின்றாள். இருவரும்
தனிமையை நாட ஆரம்பித்தோம்.
அதிர்ஷ்ட வசமாக நாங்கள் ஒரு டாக்டரைக் கலந்தாலோசித்தோம். உற்சாக மின்மையும் இனம் புரியாத கவலையும் பெரும்பாலும் சக்திக் குறைவின் அறிகுறிகள் என்றார் அவர். ஹார்லிக்ஸ் தினம் தவறாமல் பருகி வந்தால் இழந்த ஆரோக்கியத்தையும் சக்தியையும் மீண்டும் பெறலாம் என்றும் டாக்டர் சொன்னார்
ஆரம்பத்தில் குணம் சற்று சாவதானமாகத்தான் தெரிந்தது. பிறகு எங்கள் வாழ்வில் கவிந்திருந்த இருள் நீங்கி இன்பம் ஒளி பாய்ச்சியது. களிப்பும் கும்மாளமுமாகத் திகழ்ந்தது எங்கள் வீடு. ஹார்லிக்ஸ் அளிக்கும் உணர்ச்சியுள்ள நாங்கள் மீண்டும் அந்த அவல நிலைக்கு உள்ளாக மாட்டோம் என்று சொல்லவும் வேண்டுமா!
HORLICK
THE IDEAL FOOD DRIN
FOR ALL AGES
ஹார்லிக்ஸ் அதிக சக்தி யளிக்கிறது!

கல்கி




படவிளக்கம் 14ம் பக்கம் பார்க்க....

பொருளடக்கம்

சோபகிருது, ஆடி 12உ • ஜூலை, 28உ 1963

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே



" அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல் " — வள்ளுவர் பெருமான்



மலர் 22

தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

இதழ் 52

அறிவுக்கு அறுபது

'அறிவு' என்று மாத்திரம் குறிப்பிட்டால் பாரதப் பண்புப்படி அது மெய்ப் பொருள் அநுபவத்தையே குறிக்கும். மனிதர்களாக வாழ்ந்து அழிகிற நாம், அப்படி அழியாமல் ஆத்மாவாக அமரத்துவம் பெறுவதே அறிவு.

அறிவு அற்றம் காக்கும் கருவி

என்று இதனைத்தான் ரத்தினச் சுருக்கமாகக் கூறுகிறார் குறளாசிரியர்.

வேத, புராண, இதிஹாஸ நூல் அறிவினாலும், அவை கூறும் கர்மங்களை அநுஷ்டிப்பதாலும், பரமனை அன்பு நிறைந்து பக்தி புரிவதாலும், மக்களையெல்லாம் அந்தப் பரமனின் பிம்பமாகப் பாவித்து அன்பு செலுத்துவதாலும் இந்த அறிவாகிய ஆத்ம அநுபவத்தைப் பெறலாம். அறிவைப் பெற உதவும் வாழ்முறை எதுவோ அதுவே அறம் என்பது.

இவ்வாறு நூலறிவிலும், கர்மாநுஷ்டானத்திலும், பகவத் பக்தியிலும், ஜீவ தயையிலும் சிறந்து விளங்கி, அறத்திலிருந்து சிறிதும் பிறழாமல் அறிவைப் பெற்ற மகனீயர்கள் இந்தக் கலிகாலத்தில் அரிதிலும் அரிதானவர்கள் அல்லவா?

அப்படி அரிதிலும் அரிதான அறிஞர் பெருமக்களில் ஒருவர் உபந்நியாஸக சக்கரவர்த்தி சேங்காலிபுரம் பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்கள்.

இந்த ஜூலை முப்பத்தியோராம் தேதி பிரம்மஸ்ரீ தீக்ஷிதர் அவர்களுடைய பயனுள்ள புனித வாழ்க்கையில் அறுபதாண்டுகள் நிறைவு பெறுகின்றன என்னும் போது நம் நெஞ்சையும் பல படித்தான இன்ப நினைவுகள் நிறைவு செய்கின்றன.

ஆயிரம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வேதம் எந்த வாழ்க்கையை விதித்ததோ அதை இந்த 1963–ம் ஆண்டில் அணுவளவும் பிறழாமல் ஒருவர் வாழ்ந்து காட்டுகிறார் என்பதே ஓர் அற்புதம்தானே? அப்படி வாழ்வதனால் பிறரது பரிகாசத்துக்கு ஆளாகாமல் அவர்களின் பக்தியைப் பெற்று, அவர்களுக்கும் தர்ம வாழ்வில் ஈடுபாட்டை ஏற்படுத்துவது அதை விடப் பெரிய அற்புதம் அல்லவா? இப்படிப் பட்ட அற்புதத்தை நிகழ்த்தி, நாடெங்கும் ஆன்மிகமும், ஆஸ்திகமும், அநுஷ்டானமும் தழைப்பதற்கு அரும் தொண்டு புரியும் அறச் செல்வர் அனந்தராம தீக்ஷிதரவர்கள். சிந்தித்ததையே சொல்லி, சொன்னதையே செய்து காட்டும் சத்திய புருஷர் ஸ்ரீ தீக்ஷிதர்.

புலமையிலும், அந்தப் புலமையின் பயனைப் பிறருக்கெல்லாம் அளிக்கும் பிரவசனத் திறனிலும், தர்ம நம்பிக்கையிலும், பக்தியிலும் தலைசிறந்து விளங்கும் தீக்ஷிதரவர்கள் வளம் குன்றிய ஆன்ம வனத்தின் மறுமலர்ச்சிக்கு உரமிடுகிறார். பழுது பட்ட நமது பண்பு மாளிகையைப் புதுப்பித்துத் தரும் சிற்பிகளில் ஒருவர் அவர். நமது பக்திக்குகந்த ஆசாரியப் பெருந்தகைக்கு அடுத்தபடியாக, மிக அதிகமான மக்களை வெகு எளிதான முறையில் சநாதன தர்மத்தில் திருப்பி விடுபவர் தீக்ஷிதர் அவர்களே எனலாம். இதற்காக நாம் அவருக்குப் பட்டுள்ள நன்றிக் கடனை எழுதி முடியாது.

தீக்ஷிதரவர்களின் ஆத்மிக அறிவைப் பாராட்டி எழுதினேனும், அவரது மனிதாபிமானமோ அதை விடப் பாராட்டுக்குரியதாகும். பொறாமை, ஆசை, கோபம் இவற்றோடு

கதவு திறந்துவிடுமோ!



கடுஞ் சொல்லை ஒழிப்பதையும் அறத்தின் ஓர் அங்கமாகவே விதித்தார் வள்ளுவர் பெருமான். 'செம்பொருள் கண்டார் வாய்ச் சொல் இன்சொல்லே' என்கிறார் அவர். அதற்கு ஆதரிசமாக வாழ்ந்து வருபவர் ஸ்ரீ தீக்ஷிதர். மக்களைத் திருத்துவது என்ற பணிக்குத் தமது வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டு உடல்உபாதைகளைப் பொருட்படுத்தாமல் நாடு நகரமெல்லாம்சென்று பிரவசனமும், யாகாதி கர்மாக்களும் செய்து வருகிறார் ஸ்ரீ தீக்ஷிதர். 'திருத்துவது' என்கிற போதே, அதற்கு மக்களின் குறைகளைக் காண வேண்டிய திறன் அவசியம் என்றாகிறது. இப்படிக் குறைகளைக் காண்கிற ஒருவர் அதனால் சிறிதும் சீற்றமுறாமல், மக்களின் தினையளவு குணத்தையும் மலையாகக் கண்டு கொண்டாடும் பாங்கு வித்தையானது. தீக்ஷிதரவர்களால் 'திருத்தப்படுவது' ஒரு பாக்கியம். ஏனெனில், இங்கு கடுமையான பயிற்சிகளோ, தண்டனைகளோ கிடையாது. திருக்கவைக் கதைகளைத் திரம்பட உரைப்பதன் மூலமே மக்களைப் பரமசுகமாகத் தர்மவாழ்வுக்கு அழைத்துச் செல்கிறவர் பிரம்மஸ்ரீ தீக்ஷிதர் அவர்கள். கம்பீரம் நிறைந்த அமர பாஷை சுலோகங்களை தீக்ஷிதரின் தீர்க்கமான கோஷத்தில் செவி மடுக்கவும், நளினம் நிறைந்த பழகு தமிழில் எளிதாக அவர் கூறும் விளக்கத்தைக் கேட்கவும், பகவத் குணாநுபவத்தில் திளைத்து இன்பக் கண்ணீர் விடவும், கண்ணீரை மறந்து கருத்தைத் துலக்கும் நகைச் சுவையில் குலுங்கிச் சிரிக்கவும் - இந்த வருவான முறையில் நிரந்தர சுகத்தைத் தேண்டவும் - யார்தான் விரும்ப மாட்டார்கள் ?

தித்திக்கும் ஔஷதத்தால் தீவினை தீர்த்து வரும் தீக்ஷிதருக்கு நமது இதய பூர்வமான அஞ்சலிகளை அளிக்கிறோம். தீக்ஷிதரவர்கள் தீர்க்காயுசாக வாழ்ந்து இந்தத் திருப்பணியை நீண்ட நெடுங் காலம் செய்து வருவதற்கு அவர் நாளும் வழிபடும் குருவாயூரப்பனையும், குருபிரானையும் பிரார்த்திக்கிறோம்.

மகான் மறைந்தார்

தமது எண்ணற்ற சிஷ்யர்களை விட்டு விட்டுப் பரம்பொருளுடன் ஒன்றிவிட்ட ஸ்வாமி சிவாநந்தர் அவர்களின் வாழ்க்கை அன்பின் சரித்திரத்தில் ஒரு பொன் ஏடாகும்.


திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த குப்புஸ்வாமி மலேயா சென்று அங்கு வைத்தியப் பணி புரிந்தார். பெரும் பொருள் ஈட்டினார். பிறகு தாம் ஈட்டியிருந்த அவ்வளவு செல்வத்தையும் ஏழை எளியவர்களின் உடல் நலத்துக்காக அர்ப்பணித்தார். மக்களின் உடலுக்கு மருந்து அளித்த குப்புசுவாமிக்கு உள்ளத்துக்கு மருந்து அளிக்க வேண்டும் என்ற ஆர்வம் உண்டாயிற்று.



ஞானத்தின் வாழ்விடமாகிய ஹிமாலயச் சாரலுக்கு வந்தார். ஸ்வாமி விசுவாநந்தரிடம் துறவற தீக்ஷை பெற்றார். குப்புஸ்வாமி சிவாநந்தரானார். யோக வேதாந்த நுட்ப திட்பங்களைப் பரப்ப தெய்விக வாழ்க்கைச் சங்கம் (Divine Life Society) நிறுவினார். அவரது அந்தரங்க சுத்தம் உலகின் பல பகுதிகளிலுமிருந்து மக்களை இழுத்தது. சங்கத்துக்கு முந்நூற்றுக்கு மேற்பட்ட கிளைகள் தோன்றின. அவற்றின் தலைநகராகிய ரிஷிகேசம் உலகின் ஆத்மிக ராஜதானிகளில் ஒன்றாயிற்று. ஹிமாலயம் வருவோருக்கெல்லாம் அற்புதமான முறையில் உபசரணை புரியும் அன்புப் பண்ணையும் ஆயிற்று அது.

தவமும், தியானமும், பிரசங்கமும் போக எஞ்சிய வேளையில் இருநூற்றுக்கு மேற்பட்ட நூல்களை ஸ்ரீ சிவாநந்த சரஸ்வதி எழுதியுள்ளார். நாடு முழுவதும் அவர் பயணம் புரிந்து ஆத்மிகப் பிரசாரம் செய்தார். மக்களுக்குப் பலவித நற்பணிகள் புரிந்து விட்டுத் தமக்குரிய பேரிடம் சென்று சேர்ந்து விட்டார்.

சமீப காலத்தில் தோன்றிய ஹிந்து சமயத் தலைவர்களில் மிகவும் விசாலமான மனப்பான்மையுடன் சக்தி வாய்ந்த முறையில் பணி புரிந்தவர் சிவாநந்தர் என்கிறார் தலைவர் ராஜாஜி. சிவாநந்தரின் பூத உடல் மறைந்த போதிலும் அவர் புரிந்த திருப்பணி சக்தி குன்றாது தொடர்ந்து நடக்க வேணுமெனப் பிரார்த்திக்கிறோம்.



பிரியா விடையும் பிரியமான வரவேற்பும்



அமெரிக்காவும் இந்தியாவும் பரஸ்பரம் நல்லிணக்கம் பெறுவது இந்த நாடுகளுக்கு மட்டுமின்றி, உலகத்தில் ஜனநாயகம் நிலை பெறுவதற்கே அவசியமாகும். இந்த அவசியமான பணியில் இரு நாட்டு ஸ்தானிகர்களுக்கும் முக்கியமான பங்கு உண்டு. இந்தப் பங்கினைச் சிறப்புற ஆற்றி, நம் மக்கள் யாவருடைய அன்பையும் பெற்ற கால்பிரெய்த் அவர்கள் நம்மிடமிருந்து விடைபெற்றுக் கொள்கிறார்கள். தாய்நாடு திரும்பும் கால்பிரெய்த் அவர்களுடன் நமது நன்றியையும் அன்பையும் நினைவுப் பரிசுகளாக அனுப்பி வைக்கிறோம்.

இந்தியாவுக்கு அமெரிக்காவின் புதிய ஸ்தானிகராக வரும் செஸ்டர் பௌல்ஸ் அவர்கள் நமக்குத் தூதர் என்ற முறையில் நன்கு பரிசயமானவர்தான். 1951 லிருந்து இரண்டாண்டுகள் அவர் இங்கு அமெரிக்க ஸ்தானிகராக இருந்தார். ''செஸ்டர் பௌல்ஸைப் போல இந்தியாவை ஆழ்ந்த அநுதாபத்துடன் புரிந்து கொண்ட இன்னோர் அமெரிக்கர் கிடையாது'' என்று அவரைப் பதவி நியமனம் செய்துள்ள ஜனாதிபதி கென்னடி கூறியுள்ளார். ஸ்ரீமதி பௌல்ஸ் அவர்களோ இந்தியாவுக்கு வருவதைத் தமது இரண்டாவது பிறந்தகத்துக்கு வருவதாகவே கருதுகிறார். செஸ்டர் பௌல்ஸ் தம்பதியர் இரு தேச மக்களிடையேயும், அரசாங்கங்களிடையேயும் நேசப்பான்மை வளர உதவுவர் என்று நம்பி அவர்களை அன்போடு வரவேற்கிறோம்.



ஐம்பதும் அறுபதும்

சமீபத்தில் ஆந்திர முதன் மந்திரி திரு சஞ்சீவி ரெட்டி அவர்களின் ஐம்பதாவது ஆண்டுப் பூர்த்தி விழா ஹைதராபாத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ஆந்திர ராஜ்ய காங்கிரஸில் உட்பூசல் எவ்வளவு இருப்பினும் ஓரளவு நிலையான நிர்வாகத்தை வழங்கக் கூடியவர் சஞ்சீவி ரெட்டிதான் என்ற பெயரை எடுத்து விட்ட அன்னாருக்கு நமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அவர் தமிழர்களுக்குப் புதியவரல்ல. அவரது பதவிக் காலத்தில் இரு ராஜ்யங்களிடையே நெருக்கமான உறவு ஏற்பட்டுள்ளது. கிருஷ்ணா நதித் தண்ணீரைச் சென்னைக்கு வழங்கும் திட்டத்தையும் அவர் நிறைவேற்றித் தரவேண்டும் என்ற விருப்பத்தை இந்த ஐம்பத்தோராவது பிறந்ததின வாழ்த்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

சென்னை முதன்மந்திரி திரு காமராஜ் அவர்களுக்குச் சென்ற வாரம் அறுபத்தியோராவது பிறந்த தினம் கொண்டாடப்பட்டது. அப்போது ராஜாஜி அவர்கள், ''என்னுடைய ஆசீர்வாதமும் வாழ்த்தும் காமராஜருக்குப் பூரணமாக உண்டு. காமராஜருக்கு அறுபது ஆண்டுகள் பூர்த்தியாகிவிட்டன என்பதை நம்புவது கஷ்டம். அவரது வாலிபம் நீடூழி இருக்க வேண்டும்'' என்று வாழ்த்தியிருக்கிறார்.





ராஜாஜியின் குரல் மட்டுமல்ல, தமிழ் மக்களின் ஏகோபித்த பிரார்த்தனை இது! வாழ்க காமராஜ்!

அடுத்த இதழ்

கல்கி

ஆண்டு மலராக

வெளிவருகிறது



அரு. ராமநாதன்

எழுதும்

குண்டு மல்லிகை *

— புதிய தொடர்

நெடுங்கதைகள்:

அகிலன் எழுதும் **அந்த ஒருநாள்..**

கோமதி சுவாமிநாதன் எழுதும் **விஷவித்து**

சர்ஜன் வாசுக்குட்டி

— சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

ஆட்சிமொழி-கருத்தரங்கு :

இரா. நெடுஞ்செழியன், எல். கிருஷ்ணசாமி பாரதி

ஆகியோரது கட்டுரைகள்.

சிறப்பு அம்சம் : நீதிமன்ற நகைச்சுவைகள்

புகைப்படப் பகுதிகள் : அசையாது நிற்கும் அரண்

வீரத்தின் விளையாட்டு

ராஜம் கிருஷ்ணன், வி. எஸ். சுப்பையா, சூடாமணி

ஆகியோரின் சிறுகதைகள்

மாதர் உலகம் - அனுசுயா

கலை வளர்க்கும் கோயில்கள் — கால்நடை வைத்தியக் கல்லூரி

போகிற போக்கில்..!



ஹிட்லரின் பிரசார மந்திரி கெப்பல்ஸுக்கு ஒரு துணை மந்திரி இருந்தார். பெர்லின் ரேடியோவில் யுத்த சமயத்தில் இந்த மந்திரி தினமும் பேசுவார். ஒவ்வொரு நாள் பேச்சின்போதும் ரஷ்ய முனையில் நாஜித் துருப்புகள் படுவேகமாக முன்னேறுகின்றன என்று கூறுவார். அவர்கள் முன்னேறுகின்ற இடங்களிலெல்லாம் பொதுமக்கள் பெருந்திரளாக முன் வந்து மலர் மாலைகள் அணிவித்து நாஜிகளை வரவேற்கிறார்கள் எனவும் சொல்லுவார். இந்தத் துணை மந்திரி, கெப்பல்ஸின் பரிபூர்ண நம்பிக்கையைப் பெற்றவர். ஹிட்லருக்கும் இவரிடத்தில் அபாரப் பற்றுதல் இருந்தது.

இந்தத் துணை மந்திரியைப் போல் நமது மதிப்புக்குரிய நிதி அமைச்சர் மொரார்ஜி தேசாய் இருக்கிறார். தங்கக் கட்டுப்பாடு சட்டத்துக்கு மக்களிடையே பெருத்த ஆதரவு இருக்கிறதாம். இந்த ஆதரவைக் கொண்டு இன்னும் கடுமையான நடவடிக்கைகளை இந்த உத்தரவை மீறுவோர் மீது எடுக்கப் போவதாகத் திரு தேசாய் சொல்லுகிறார். ''சமுதாயத்தில் ஏராளமானோர் இச் சட்டத்தை வரவேற்கிற'' ரகசியம் திரு தேசாயைத் தவிர வேறு எவருக்கும் தெரியவில்லை. இருந்தாலும் திரு தேசாய் அந்த உதவி நாஜி மந்திரி மாதிரியே ரேடியோவில் பேசுகிறார்! ஏன் தேசாய் இப்படிச் சொல்லுகிறார் என்றால் விதி அவரை விளையாடச் செய்கிறது. இதன் முடிவைப் பற்றிக் கூற வேண்டியதில்லை.

ஃ ஃ ஃ

''விவசாயிகளின் துன்பம்தான் என்னை அரசியலில் பெரும் பங்கு பெறச் செய்தது'' என்று பிரதமர் நேரு அவர்கள் ஊதியானுவில் பேசியிருக்கிறார். நேருஜி சொல்வது முற்றிலும் உண்மை. அந்த நாளில் விவசாயி ஒருவன் துன்பப்பட்டால் நேருஜி உள்பட எல்லாத் தேசியத் தலைவர்களும் கண்ணீர் உகுத்தார்கள். சம்பரான் சத்தியாக்கிரகம் தான் ராஜன் பாபுவைத் தேசிய இயக்கத்தில் ஈடுபடுத்தியது. பர்தோலி விவசாயப் போராட்டம்தான் வல்லபபாய்க்குச் சர்தார் பட்டம் பெற்றுத் தந்தது. இவையெல்லாம் அக்காலத்தில் நடந்தவை. ஆனால் இன்றைய நிலைமை என்ன? விவசாயிகள் அனைவரும் கண்ணீர் சிந்துகிறார்கள். அவர்களது துன்பம் உர மூட்டையில் தொடங்கி, உடைமைப் பாத்தியதை வரை போய் நிற்கிறது. 17வது திருத்தம் எனச் சொல்லி இன்னொரு அரசியல் நிர்ணயச் சட்டத் திருத்தத்துக்கு ஏற்பாடு செய்கிறார்கள். இது அமலுக்கு வந்தால், ஒரு ஏக்கர், ஒன்றரை ஏக்கர் சொந்தக்காரன் பாடும் திண்டாட்டம்தான். இதை நேருஜி உணருவதாகத் தெரியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் உறுதியாகக் கூற முடியும். விவசாயிகளின் துன்பம் அவரை அரசியலில் ஈடுபடுத்தியது என்றால், அதே துன்பம்தான் இன்று காங்கிரஸை ஆட்சிப் பொறுப்பிலிருந்து வீட்டுக்கு அனுப்பப் போகிறது.

ஃ ஃ ஃ

கல்லூரியில் தமிழைப் போதனை மொழியாக ஏற்றுக் கொண்ட ஒரு மாணவர் தாம் படித்து முடித்தாகி விட்டது. அரசாங்கம் தமக்கு என்ன செய்யப் போகிறது எனக் கல்வி அமைச்சர் திரு பக்தவத்ஸலத்துக்குக் கடிதம் எழுதியிருக்கிறாராம். கடிதத்தைப் பார்த்துத் தாம் திகைப்படைந்ததாக மந்திரி கூறுகிறார். மந்திரிக்கு ஏற்பட்ட திகைப்பு மாதிரிதான் மாணவர்களுக்கும் ஏற்பட்டிருக்கும். அதன் விளைவாகவே இந்தக் கடிதம் எழுதப்பட்டிருக்க வேண்டும். படித்து முடித்த மாணவர் ''தமிழை மொழியாக ஏற்றேன்'' என்று விளம்பரத்தோடு வெளிவந்திருப்பார். விளம்பரத்துக்குத் தக்க வரவேற்பு இல்லாதிருக்கவே திகைப்படைந்து, அரசாங்கமாவது ஏதுவும் செய்யாதா எனக் கடிதம் போட்டிருப்பார். பாவம், வேறு என்ன செய்வார்?

ஃ ஃ ஃ

அதிகாரிகள் சுறுசுறுப்பாக இல்லாத காரணத்தினால் சர்க்கார் நடத்தும் தொழில் துறையில் ஏராளமான நஷ்டமும் உற்பத்திக் குறைவும் ஏற்பட்டு வருவதாகக் கனரகத் தொழில்மந்திரி திரு சி. சுப்பிரமணியம் வருத்தப்படுகிறார். திரு சுப்பிரமணியத்தினால் வருத்தப்படத்தான் முடியும். ஏனெனில் என்ன நஷ்டம் வந்தாலும் கவலை இல்லை; சர்க்கார் தொழில் துறையில் பிரவேசிக்க வேண்டும் என்று கருதும் கட்சியையும் அரசாங்கத்தையும் சேர்ந்தவர். அவர் அதிகாரிகளிடத்தில் வருத்தப்படுவதற்குப் பதில் தம் கட்சியாளர்களிடத்திலல்லவா வருத்தப்பட வேண்டும்?

தொழில் நடத்தும் அனுபவம் வேறு, சர்க்கார் நடத்தும் அனுபவம் வேறு. எனவே மந்திரி இதில் வருத்தப்படுவதில் பிரயோசனமே இல்லை. கொள்கையை மாற்றித் தனிப்பட்டவர் வசம் தொழில்களை ஒப்படைத்தால்தான் தொழில்கள் உருப்படும். தேசமும் சுபிட்சமடையும்.

ஃ ஃ ஃ

'வியாபாரிகள் மாதிரிக்காகக் காட்டும் பொருள்களை ஏற்றுமதி செய்யாமல் அவற்றுக்குப் பதிலாக மட்டரகச் சாக்குகளை அனுப்பி இந்தியாவின் ஏற்றுமதி வியாபாரத்தையும் தேச கௌரவத்தையும் பாழடிக்கிறார்கள்' என்று ரயில்வே உதவி மந்திரி திரு எஸ். வி. ராமசாமி நாகையில் பேசியிருக்கிறார். வியாபாரிகளின் இந்தச் செய்கை கண்டிக்கத் தக்கது. இதனால் நாது பொருளாதாரம் பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது.

இந்த வியாபாரிகளில் ஒருவரிடம் முன்னொரு சமயம் சிட்டுக் குருவி பேசியபோது அவர் ஒரு விசித்திரமான வியாக்கியானத்தைக் கூறினார். ''நாங்களெல்லாம் மந்திரிகளைப் பின்பற்றித்தான் இப்படிச் செய்கிறோம். ஒவ்வொரு தேர்தலுக்கு முன்பும் 'அதைச் செய்கிறோம் இதைச் செய்கிறோம்' என்று எப்படி மந்திரிகள் கூறிப் பின்னர் சொன்னபடி செய்யாது போகிறார்களோ, அதைப் பின்பற்றித்தான் நாங்களும் நடக்கிறோம்'' என்றாரே பார்க்கலாம்.

—சிட்டுக்குருவி

மக்ளீன்ஸ் பற்களை வெண்மையாக்குகிறது என்பதற்கான ஆதாரம்

1 அதை உணருங்கள்

பற்களில் கறை படிந்திருக்கிறதா? அது இயற்கையான வெண்மையை மறைக்கிறது. இப்போது மக்ளீன்ஸ் கொண்டு பல்துலக்கி அது கறையை எவ்வாறு அகற்றுகிறது என்று உணருங்கள்.

2 அதை ருசியுங்கள்

நீங்கள் அனுபவிக்கும் அந்த குளுமையான ருசிக்குக் காரணம் மக்ளீன்ஸில் இருக்கும் 3 கலவைப் பொருள்களும் திறம்பட வேலை செய்வதால்தான். அவை பற்களைச் சுத்தம் செய்து, வெண்மையாக்கி பாதுகாக்கின்றன.

3 அதைப் பாருங்கள்

உங்கள் புன்முறுவலில் காணும் வெண்மையைக் கண்டு நீங்களே வியப்படைவீர்கள். உங்கள் பற்களை முன்பிருந்ததைவிட மக்ளீன்ஸ் பற்பசை இன்னமும் வெண்மையாக்குகிறது. . நீங்களே இதைப் பரீட்சித்துப் பாருங்கள்.

வெண்மை
யான
பற்களுக்கு
மக்ளீன்ஸ்



MTP/1/P/I/61 TM

காஷ்மீர் பொக்கே டால்க் உபயோகித்து மணிக்கணக்காக சுகந்தத்துடனும் புதுமையுடனும் இருங்கள்



உன்னதமான காஷ்மீர் பொக்கேயின் தரம், ஒரு அழகுசாதன டால்க்... ஒரு குழந்தைக்கான பவுடர் இவ்விரண்டையும் அளிக்கிறது.

காஷ்மீர் பொக்கே டால்க்கின் குளுமையான, பூவிதழ்போன்ற மென்மையான ஸ்பரிசத்தை நீங்கள் உணரும்பொழுது ஒரு பூச்செண்டிற்குள் இருப்பது போலவே தோன்றும். உடல் முழுவதும் தடவிக்கொண்டு அதன் ஊற்றுப்பெருக்கென எழும் புதிய நறுமணத்தில் திளைத்து மகிழுங்கள்



குழந்தையை இதமுடனும் சுகமுடனும் வைத்திருங்கள். காஷ்மீர் பொக்கே, எந்த ஒரு விசேஷ குழந்தைக்கான பவுடரைப் போலவே, மிருதுவும் பட்டுப்போன்றதுமானது. நீங்கள் இருவருமே உபயோகிக்கக்கூடிய அவ்வளவு சௌகரியமான ஒரே பவுடர்!




காஷ்மீர் பொக்கே

டால்கம் பவுடர்—ஆடவர் விரும்பும் சுகந்தமுள்ளது!

முதல் மூவர்

ராஜாஜி·சோமு



16

எல்லா ஆழ்வார்களையும் போலவே பூதத்தாழ்வாரும் திருவேங்கடமலையைப் பாடுகிறார்:

பெருகு மதவேழம்
மாப்பிடிக்கு முன்னின்று

[பெருகு மதவேழம்-மதநீர் பெருகி வருகிற யானை. மா-சிறந்த. பிடிக்கு-பெண்யானைக்கு. முன்னின்று-முன்னே நின்று கொண்டு.]

ஆண் யானை பெண் யானையைக் கூட்டிக் கொண்டு வந்து அதன் முன்பு நின்று கொண்டு,

இருகண் இளமூங்கில்
வாங்கி —

[இருகண் இளமூங்கில்-இரண்டு கணுக்களையுடைய, இளம் மூங்கிலை. வாங்கி-வளைத்து.]

— அருகிருந்த
தேன்கலந்து நீட்டும்

அந்த மூங்கிலின் பக்கத்திலே உள்ள தேன் கூண்டில் தோய்த்து, அந்தத் தேனோடு சாப்பிடும்படி கொடுக்கிறதாம், பெண் யானைக்கு ஆண் யானை!

அந்தக் காலத்தில் திருவேங்கடமலையில் யானைகளும் மூங்கிற்காடும் தேனடைகளும் நிறைந்து கிடந்தன!

தேன்கலந்து நீட்டும்
திருவேங் கடம்கண்டீர்
வான்கலந்த வண்ணன்
வரை.

இப்படி ஆண் யானை தேனிலே மூங்கிலைத் தோய்த்துப் பெண் யானைக்கு நீட்டுகிற திருவேங்கட மலைதான்,

வான்கலந்த வண்ணன்
வரை

[வான்கலந்த வண்ணன் - மேக சியாமள வர்ணத் திருமாலின். வரை - மலை.]

வானமே கலந்து நின்றாற் போன்ற பெருமான் என்று வர்ணத்துக்கு விசாலம் தந்து பாடுகிறார். மூங்கிற் குழையைத் தேனிலே தோய்த்து வேழமானது பிடிக்குத் தருவதில், பக்தியின் இன்பம் அனுஸ்வரமாகத் தொனிக்கிறது!

பெருகு மதவேழம்
மாப்பிடிக்கு முன்னின்று
இருகண் இளமூங்கில்
வாங்கி — அருகிருந்த
தேன்கலந்து நீட்டும்
திருவேங் கடம்கண்டீர்
வான்கலந்த வண்ணன்
வரை.



கலைவளர கவினுறு மாளிகை

'**கா**ணி நிலம் வேண்டும்' என்று பிரார்த்தித்தார் பாரதியார். ஒரே ஒரு காணி நிலம் கேட்ட கவியின் ஆசையின்மையை அந்தக் காலத்தில் மிகவும் புகழ்ந்து பேசியவர்கள் உண்டு. ஆனால் இன்று, அதுவும் அண்டர் புகழும் பம்பாய் மாநகரில் காணி நிலம் வேண்டும் என்று கேட்கிறவர்களின் ஆசையைச் சாமானியமாகக் கருதிவிட முடியாது. இப்படி அசாமானியமாக ஆசைப்பட்ட ஒருவர் பம்பாய் ஷண்முகானந்த சபைத் தலைவர் ஸ்ரீ டி. வி. ராமானுஜம் அவர்கள். அதோடு அவர் ஆசை நின்றதா என்ன? காணி நிலத்திலே கானப் பெருமன்றம் ஒன்றினை எழுப்ப வேண்டும் என்றும் ஆசை கொண்டார் அவர். பெரு மன்றம் என்றாலும் அகில பாரதத்திலும் மிகப் பெரிதானதாக இருக்க வேண்டும் என்றும் மிகப் பெரிய ஆசைப் பட்டார் அவர். தங்களுக்காக இன்றி நல்ல பொது விஷயங்களுக்கு ஆசைப்படுவதுதான் மனிதனின் பொறுப்பு. அதனைப் பலிதமாக்குவது பகவானின் பொறுப்பல்லவா? கலை வளர்ச்சிக்காக நல்லதொரு ஆசையைப் பட்டு வைத்தார் ஷண்முகானந்த சபைத் தலைவர். அவரது ஆசையை நிறைவேற்றும் பொறுப்பை ஷண்முகானந்த சபையின் நாயகனான ஷண்முகன் இன்று நிறைவேற்றி விட்டான் — ஸ்ரீமான்கள் ஆர். எஸ். மணி, டி. வி. துரைசாமி, என். பாலகிருஷ்ணா, எஸ். சேஷாத்திரி, எஸ். ஆர். கஸ்தூரி, கே. எஸ். எஸ். மணி, என். ராமு, என். அண்ணாசாமி, எஸ். எம். ஒய். சாஸ்திரி, ஏ. எஸ். மணி போன்ற அன்பர்களை ஸ்ரீ ராமானுஜத்துக்குத் துணையாகக் காட்டி, தோன்றாத் துணையான முருகப் பெருமான் இன்று பம்பாய் ஸயானில் கிப்ளாங்க் சாலையில் தன் பெயர் கொண்ட சங்கீத சபைக்குக் கவினுறு கலை மன்றம் ஒன்றை எழுப்பிக் கொண்டு விட்டான்.

தமிழர்களின் கலைப் பண்பும், ஆசாரமும் பம்பாயில் கொண்டாடிய வெற்றி விழா






வாக இம்மாதம் 11-ந்தேதி ஷண்முகானந்த சபைக் கட்டடத்தில் கோலாகல கிருகப் பிரவேசம் நடைபெற்றது. (அது சரி, 'கிருஹம்' என்ற சொல்லில் பொது மண்டபங்கள் உட்படுமோ?)

விடியற் காலையிலிருந்து நாதஸ்வரமும், வேதஸ்வரமும் இழைந்து அந்தச் சூழலைப் பாவனப்படுத்தின. மதராஸி மாமாக்களும், மாமிகளும், குழந்தைகளும் கலியாண வீட்டுக்கு வந்தாற்போல் உற்சாகமாக அலங்கரித்துக்கொண்டு குழுமியிருந்தனர். தங்கள் ஊரில் இப்படித் தமிழர்கள் திமிலோகப் படுத்துவதைப் பம்பாய் மக்கள் அதிசயத்துடன் கண்டுமகிழ்ந்தனர். கணபதி ஹோமம், நவக்கிரக சாந்தி எல்லாம் சாஸ்திரீயமாக அநுஷ்டிக்கப்பட்டன. செவிக்கு உணவு தருகிற சபையின் கிருஹப்பிரவேசத்தில் உணவு மந்திரி ஸ்ரீ எஸ். கே. பாடீல் பங்கு கொண்டது செவிக்கு உணவு இல்லாத போது வயிற்றுக்கு ஈவதைப் பற்றி வள்ளுவர் பெருமான் பாடியதை நினைப்பூட்டியது.

சபையின் சாதனையைப் பெரிதும் பாராட்டினார் மந்திரி. இருபத்தைந்து லட்சம் ரூபாய் திரட்டி ஒரு மணி மண்டபம் எழுப்பியிருப்பது பாராட்டவேண்டிய சாதனைதானே? அதுவும் மண்டபத்தின் சிறப்புக்களைப் பார்க்கும்போது பாராட்டு பெருகும். மூவாயிரம் மக்கள் அமர்ந்து கலை நிகழ்ச்சிகளைக் காணக் கூடிய மன்றம் இது. காற்று இதமாகப் பதம் செய்யப்பட்ட மன்றம் இது. கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும் கலை எழிலுடன் கூடிய மன்றம் இது. விஸ்தாரமான மேடையும், கலைஞர்கள் தங்குவதற்காகப் பல அறைகளும், நூல் நிலையமும், இசை வாத்திய நிலையமும் கொண்ட மன்றம் இது. இந்தக் கலை மன்றத்தில் கோவில் விமானத்தைப் போல் அமைக்கப்பட்டுள்ள உச்சியில் நடராஜப் பிரான் அல்லது கலைவாணியின் திருவுருவை ஸ்தாபித்த பின் இதன் தெய்விகம் பூரணம் பெறும். தெய்வத்தின் அநுக்கிரகத்தையும், தமிழன்னையின் ஆசியையும், அங்கத்தினர்களின் ஆதரவையும், தமிழ்கூறும் நல்லுலகத்தினர் எல்லோருடைய அன்பையும் பெற்றுள்ள ஷண்முகானந்த சபை தனது புதிய மன்றத்தில் குன்றாத புகழுடன் வளரவேணுமென மனமார வாழ்த்துகிறோம்.







வியட்நாம் விநோதங்கள்

தென் வியட்நாமில் மலைப் பகுதிகளில் வாழும் எளிய மக்கள் வியட்காங் கொரில்லாக்களால் அடையும் துன்பம் கொஞ்ச நஞ்சமல்ல. தற்காப்புக்காகத் துப்பாக்கி பிடிக்கவும் கற்கிறார்கள். மேலே: கம்யூனிஸத் தளையிலிருந்து தப்பித் தென் வியட்நாமுக்கு வந்து சேர்ந்த அகதிப் பெண்.

ஜீப் ஒன்று வேகமாக வந்து கூடாரத்தின் வாசலில் ஒரு முறை குலுங்கி நிற்கிறது. அதிலிருந்து தென்வியட்நாமிய மேஜர் ஒருவர் அவசரமாகக் கீழே இறங்குகிறார். தென் வியட்நாமைச் சேர்ந்த ஒரு ராஜதானியின் கவர்னர் அவர். கவலையில் தோய்ந்த முகத்துடன் கூடாரத்தினுள் நுழைந்த அவர், அங்குள்ள அமெரிக்க ராணுவ காப்டனுடன் பேசுகிறார். விஷயம் இதுதான்: மேற்கே முப்பது மைல் தொலைவில் இரண்டு நதிகள் ஒன்று கூடுமிடத்துக்கு அருகில் வின்ருவாய் என்ற கிராமம் இருக்கிறது. இங்கிருந்து இரண்டு தடவைகளில் அனுப்பப்பட்ட ரேடியோச் செய்திகளுக்கு அந்தக் கிராமத்திலிருந்து பதில் ஏதும் கிடைக்கவில்லை. ஒன்று அந்தக் கிராமத்தில் உள்ள ஒலிபரப்பும் சாதனத்தில் ஏதேனும் பழுது ஏற்பட்டிருக்க வேண்டும், அல்லது....

''....வியட்காங் கம்யூனிஸ்டுகள் தங்கள் கைவரிசையைக் காட்டியிருக்க வேண்டும்'' என முடித்துவைக்கிறார் அமெரிக்கக் காப்டன்.

''ஆமாம்! நீங்கள் உடனே அங்கு போய் நிலைமை இன்னதென்று அறிந்து கொண்டு வர முடியுமா ?''

காப்டன் ஒரு நிமிஷம் யோசிக்கிறார். கான்ஹங் என்ற அந்த இடத்தின் விமானக் கூடத்தில் இரண்டே அமெரிக்க ஹெலிகாப்டர்கள் தான் இருந்தன. மற்றவை யெல்லாம் கம்யூனிஸ்டு ஐந்தாம் படையினரைச் சுற்றி வளைக்க வேறு பல இடங்களுக்குச் சென்றுள்ளன. இரண்டே ஹெலிகாப்டர்களுடன் வின்ருவாய் கிராமத்துக்குப் போவதா?

''என்ன யோசிக்கிறீர்கள்?''

''ஒன்றுமில்லை, இதோ கிளம்பிவிட்டேன்'' என்கிறார் அந்த அமெரிக்கக் காப்டன். துரித கதியில் சில தென் வியட்நாமிய சிப்பாய்களைத் திரட்டி இரண்டு ஹெலிகாப்டர்களுக்குள்ளும் ஏற்றுகிறார். தாமும் ஏறிக் கொள்கிறார். ஹெலிகாப்டரின் மேலே உள்ள விசிறிகள் சுழலுகின்றன. செங்குத்தாக வானில் உயர்கின்ற அந்த விமானம் பின்னர் முன்னோக்கிப் பறக்கிறது. ஒரு மணி நேரத்துக்குள்ளாகவே அவர்கள் வின்ருவாய் கிராமத்தை அணுகி விடுகிறார்கள்.

அங்கே ஒரே புகை மண்டலமாய் இருப்பதைக் காண்கிறார்கள். ஹெலிகாப்டர் ஓட்டி லாகவமாக அதனைச் செலுத்திப்போய்ப் புகையற்ற ஒரு சிறு பகுதியை அடைகிறார். அப்போது விமானத்திலிருப்போர் கீழே குனிந்து பார்க்கிறார்கள். என்ன பயங்கரம்! கிராமப் புறத்தில் உள்ள கூரை வீடுகள் அத்தனையும் பற்றி எரிகின்றன. செக்கச் சிவந்த தீ

இடதும் வலதும்: கம்யூனிஸ வியட்காங் கொரில்லாவைத் தென் வியட்நாம் சிப்பாய்கள் இருவர் கைப் பற்றுகிறார்கள். கைதி கரங்களைத் தூக்கிச் சரணடைகிறான். நடுவே: தென் வியட்நாம் கிராமங்களில் ஒன்று. கம்யூனிஸ அபாயத்திலிருந்து தப்பக் கிராமவாசிகள் தங்கள் கிராமத்துக்குத் தாங்களே தீ வைத்து விட்டு வேறு இடத்துக்குச் சென்று புதிய கிராமங்களை உருவாக்குவார்கள்.





நாக்குகள் வானை எட்டிப் பிடிக்க முயல்வது போல் மேலே மேலே தாவுகின்றன. கம்யூனிஸ்ட் கொரில்லாக்களின் அட்டூழியம் நடைபெற்றிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்வது கடினமாயில்லை விமானத்தி லிருப்போருக்கு. திடுமென



அமெரிக்க ராணுவ அதிகாரிக்குத் தென் வியட்நாம் குடியரசைச் சேர்ந்த ஒரு கிராமவாசி வியட்காங் கொரில்லாக்கள் மறைந்திருக்கும் திக்கைக் காட்டுகிறார்.

அவர்களில் ஒருவனது காதை ஒட்டினாற்போல் ஒரு குண்டு 'விர்'ரென்று பாய்ந்து வந்து விமானத்தின் சுவரில் பதிந்து கொள்கிறது. அடுத்து, விமானத்தி லிருக்கும் தென் வியட்நாமிய சிப்பாய்கள் திகைப்பதற்குக் கூட நேரமில்லை; அத்தனை வேகமாகக் கீழேயிருந்து விமானத்தை நோக்கிச் சுடப்படும் குண்டுகள் பாய்ந்து வருகின்றன. அறுவடைக்குத் தயாராக இருக்கும் வயல்வெளியில் ஆள் நடமாட்டத்தின் சலசலப்பைக் கவனித்து விடுகிறான் ஹெலிகாப்டரில் உள்ள சிப்பாய் ஒருவன். கம்யூனிஸ்டுகளின் மறைவிடம் தெரிந்து விடவே, அமெரிக்கக் காப்டனின் அனுமதியை எதிர்நோக்கி அவரை ஏறிட்டுப் பார்க்கிறான். அவர் தலையசைத்துச் சரி என்றதும் ஹெலிகாப்டரில் இருந்தபடியே மிஷின்கன் ஒன்றினை இயக்குகிறான். அசுர வேகத்தில் அது குண்டுகளைப் பொழிந்து தள்ளுகிறது. வயல்வெளியில் பதுங்கியிருந்த வியட்காங் கொரில்லாக்கள் ஓட்டம் எடுக்கிறார்கள். சுமார் இருநூறு பேர்கள் இருக்கும் என்று மதிப்பிடுகிறார் அமெரிக்கக் காப்டன்.



கம்யூனிஸ்டுகளை எதிர்த்துப் போராடத் தென் வியட்நாம் பெண்களும் தயங்குவதில்லை.



தென் வியட்நாமைச் சேர்ந்த கிராமப்புறங்களில் உள்ள குழந்தைகளுக்குக் கல்வியறிவு புகட்டுவதில் அரசாங்கம் விசேஷ சிரத்தை எடுத்துக் கொண்டுள்ளது.

இந்த இரண்டு ஹெலிகாப்டர்களைக் கண்டதால் விண்குவாய் கிராமப்புறத்தில் நடைபெற்ற கொலையும் கொள்ளையும் சற்று நேரத்துக்கேனும் தடைப்பட்டு நிற்கும். எனினும் விமானத்தைக் கீழே இறக்குவது ராணுவ தந்திரமாகாது; தற்கொலைக்கொப்பாகும் என்பது புரிகிறது. இங்கிருந்து தலைமைக் காரியாலயத்துக்குத் திரும்பிப் போய்த் தக்க துணையுடனும் ஆயுத பலத்துடனும் மீண்டும் வரவேண்டியதுதான். ஹெலிகாப்டர்கள் திரும்புகின்றன. அதில் உள்ளோர் பற்களை வேதனையுடன் 'நற நற' வென்று கடிக்கிறார்கள். கிராமவாசிகளை — தங்கள் நண்பர்களை — கம்யூனிஸ்டுக் கொரில்லாக்களிடம் அகப்

பட்டுத் தவிக்குமாறு விட்டுச் செல்ல வேண்டியிருக்கிறதே என்ற மனத் துயர் அவர்களுக்கு. எனினும், விரல் விட்டு எண்ணி விடக் கூடிய தங்களால் நூற்றுக்கணக்கானோருடன்நேருக்கு நேராய் நின்று எப்படிப் போராட முடியும்?

இரண்டு மணி நேரத்துக்குப் பிறகு அந்தத் தென் வியட்நாமிய சிப்பாய்கள் தங்கள் சகோதரச் சிப்பாய்கள் பலருடன் பன்னிரண்டுக்கு மேற்பட்ட ஹெலிகாப்டர்களில் வின்ருவாய் கிராமத்தில் வந்து இறங்குகிறார்கள். ஆனால் அதற்குள் கம்யூனிஸ்ட் வியட்காங் கொரில்லாக்கள் தங்கள் வேலைகளை முடித்துக் கொண்டு கிளம்பிப் போய் விட்டிருக்கிறார்கள். தென்வியட்நாமிய சிப்பாய்கள், பற்றி எரிகிற குடிசைகளுக்கிடையில், கிராமவாசிகளில் விடு

குழந்தை ஒன்றினை, தன் ஒரே குழந்தையை அவள் மார்புறத் தழுவியிருக்கிறாள்.

இங்குமங்குமாய் எவ்வளவோ தேடியும் ஒரு கம்யூனிஸ்ட் கொரில்லாவைத்தான் தென் வியட்நாம் சிப்பாய்களால் கைப்பற்ற முடிகிறது. மற்ற அனைவரும் ஹெலிகாப்டர்களின் ஓசையைக் கேட்டதுமே தப்பிச் சென்றுவிட்டிருக்கிறார்கள். அந்த ஒரே ஒரு கம்யூனிஸ்ட் கொரில்லாவைக் கைதாக்கிக் காப்டனுக்கு எதிரே கொண்டு வந்து நிறுத்தும் போது தொப்பியைக் கழற்றுமாறு உத்தரவிடுகிறான் சிப்பாய். அப்போதுதான் அந்தக் கம்யூனிஸ்டு ஒரு பெண்மணி என்பது தெரிகிறது. வியட்காங் கூட்டத்தினருக்கு அவள் நர்ஸாகப் பயன்பட்டிருக்கிறாள்.

கிராமிய மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் வேலை தொடங்குகிறது. ஆதரவின்றி விடப்பட்ட குழந்தைகளை அநாதை ஆசிரமத்துக்குக் கொண்டு போகிறார்கள். அபலைப் பெண்களைத் தொலைவில் உள்ள ஊர்களில் வசிக்கும் உறவினர்களிடம் அழைத்துப் போகிறார்கள். பலத்த காயம் அடைந்தோருக்கு முதல் சிகிச்சை செய்து ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கிறார்கள். தென் வியட்நாமிய வீரர்களை ஏற்றி வந்த ஹெலிகாப்டர் விமானங்கள் இந்த அன்புப் பணிகளுக்கெல்லாம் இப்போது உபயோகமாகின்றன.



அமெரிக்க ஹெலிகாப்டர்கள் வந்த பிறகு தென் வியட்நாமில் வியட்காங் கொரில்லாக்களுடன் நடத்தும் போர் முறைகளில் விநோதமான பல மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன.



வியட்காங் கம்யூனிஸ்டுகளை வளைத்துப் பிடிக்கச் செல்லும் வியட்நாம் குடியரசின் சிப்பாய்கள் நதிகளைக் கடக்க உதவுகிறாள் படகோட்டிப் பெண்.

இறந்தோர் தொள்ளாயிரம் பேர்களையும், காயமடைந்தோர் இருபத்து மூவரையும், உயிரிழந்தோர் இருபத்து ஏழு பேர்களையும் பார்க்கிறார்கள். அவர்கள் நெஞ்சம் பக்கத்தில் பற்றி எரிகிற குடிசைத் தீயில் வாட்டி எடுக்கப்பட்டது போல் வெந்து புண்ணாகிறது.

எங்கு திரும்பினாலும் சோக மயமான காட்சிகளே கண்களுக்குத் தென்படுகின்றன. கருகிப் போன தங்கள் வீட்டின் சாம்பற் குவியலிலிருந்து அகப்பட்ட பொருள்களை அப்புறப்படுத்த முயலுகிறார்கள் இரு பெண்கள். இரண்டு தகர டப்பாக்கள் ஓர் ஓலைப் பாய் இவைதான் அவர்களுக்குக் கிடைக்கின்றன. மறுபுறத்தில் உயிரிழந்த கணவனருகே மண்டியிட்டு உட்கார்ந்து கதறுகிறாள் மனைவி. கைக்

வின்ருவாய் கிராமத்தின் ஒரு நாளையக் கதை இது. இத்தகைய ஆபத்தும் துயரமும் நிறைந்த வாழ்க்கையைத்தான் நடத்தி வருகிறார்கள் தென் வியட்நாமிய மக்கள்.

இரண்டாம் உலக யுத்தம் முடிந்த பிறகு பிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழிருந்த இந்தோசைனா சுதந்திரத்துக்காகப் போராடியது. அப்போது தேசிய நோக்கம் கொண்டவர்களும் கம்யூனிஸ்டுகளும் கைகோர்த்துக் கொண்டு அந்நிய ஆதிக்கத்தை விரட்டுவதில் முனைந்

இருந்தார்கள். ஒரு வழியாக இந்தோ—சைனாவுக்குச் சுதந்திரமும் கிடைத்தது. ஆனால் அதே நேரத்தில் இந்தோ—சைனா நான்கு தனி தேசங்களாகப் பிரிந்தது. லாவோஸ், கம்போடியா, வடக்கு வியட்நாம், தெற்கு வியட்நாம் ஆகிய தனித் தனி நாடுகள் உருவாயின. (பொருளடக்கப் பகுதியில் உள்ள தேசப் படத்தைக் காண்க.)

இவற்றில் தொழில் வளம் மிக்கதான வடக்கு வியட்நாமில் மட்டுமே கம்யூனிஸ்ட் ஆட்சி உருவாயிற்று. சீக்கிரத்திலேயே கம்யூனிஸ்ட் கொரில்லாக்கள் வடக்கு வியட்நாம் அரசாங்கத்தின் ஆதரவுடன் விவசாயம்செழிக்கும் தென் வியட்நாமுக்குள் பரவலாக ஊடுருவி ஐந்தாம்படை வேலைகளில் இறங்கினார்கள். தென் வியட்நாம் ஜனாதிபதி டையெம் தமது போர்ப் படைகளின் துணையுடன் இவர்களுடன் போராடினார். மேலை நாடுகளின் குறிப்பாக அமெரிக்கர்களின் உதவியையும் கோரிப் பெற்றார். பொருளாதாரத் துறையிலும் ராணுவத் துறையிலும் ஏராளமான உதவிகளை அமெரிக்க அரசாங்கம் தென் வியட்நாமில் கொண்டு வந்து கொட்டியது.

எனினும் தென் வியட்நாமுக்குள் புகுந்த கம்யூனிஸ்டுக் கொரில்லாக்களை வளைத்துப் பிடிப்பது என்பது அவ்வளவு எளிதாக இல்லை. ஏனெனில் அமெரிக்க ஜனாதிபதி கென்னடி

மலைகளிலும் வனங்களிலும் நாணல் புதர்களுக்கிடையிலும் ஒளிந்திருக்கும் வியட்காங் கொரில்லாக்களைத் தேடிப் படகிலும் கால்நடையாகவும் போகும் தென் வியட்நாமியச் சிப்பாய்கள்.



கூறியது போல, மறைமுகமாக வாழ்ந்தும், சாமர்த்தியமான பிரசார முறைகளைக் கையாண்டும், யாரும் அறியாமல் ஊடுருவியும், கொலைகள் செய்தும், நேருக்கு நேர் போராடாமல் ஒளிந்திருந்து தாக்கியும் வியட்காங் கம்யூனிஸ்டுகள் புரிந்த கொரில்லா யுத்தத்தைச் சமாளித்து வெற்றி பெற வழக்கமான போர்முறைகள் பயன்படவில்லை. அதற்கு முற்றிலும் வேறுபட்ட சாதனங்களும் விசேஷப் பயிற்சிகளைப் பெற்ற வீரர்களும் தேவைப்பட்டனர்.

கம்யூனிஸ்டு இயந்திரத்துக்கு அடிமையாகாமல் சுதந்திரமாக வாழ வேண்டும் என்கிற தென் வியட்நாமிய மக்களின் எண்ணத்துக்கு மதிப்புக் கொடுத்த அமெரிக்க அரசாங்கம், கம்யூனிஸ்டுக் கொரில்லாக்களை வளைத்துக் கைப்பற்ற உதவுவதற்காகத் தென் வியட்நாமுக்கு ஏராளமான ஹெலிகாப்டர்களை அனுப்பி வைத்தது. இவை வந்து சேர்ந்த பிறகு போர் முறையே மாறி விட்டது. துப்பாக்கிகளை ஒளித்துக் கொண்டு, சாமானிய விவசாயிகள் போல் உடையணிந்து அந்த வேஷத்துடன் கூட்டத்தோடு கூட்டமாய்க் கலந்து முன்னேறி, தென் வியட்நாமிய துருப்பினரைச் சற்றும் எதிர்பாராத தருணத்தில் தாக்கி விட்டு ஓடுவதையே அது வரை தொழிலாகக் கொண்டிருந்த வியட்காங் கொரில்லாக்கள், இப்போது ஹெலிகாப்டர்களில் அரசாங்கத் துருப்புக்கள் தங்களைத் துரத்தி வருவதைக் கண்டு மிரண்டார்கள். அவர்களின் ஒளிவிடங்களைக் கண்டுபிடிக்கவும் ஹெலிகாப்டர்விமானங்கள் பெரிதும் உதவின. மரங்கடர்ந்த பிரதேசமானாலும், சாலைகள் இல்லையானாலும், சதுப்பு நிலமானாலும், வயல் வெளிகளானாலும் ஹெலிகாப்டருக்கு ஒன்றுதான். அது உயரவும் செல்லும், நில மட்டத்தினருகே தாழ்வாகவும் பறக்கும்; எந்தத் திக்கிலும் போகும். அமெரிக்க ஹெலிகாப்டர்கள் வியட்நாமில் நடைபெற்று வந்த போர் முறையில் ஒரு பெரிய திருப்பத்தையே உண்டு பண்ணி விட்டன. உலகின் வேறு எந்தப் பாகத்திலும் எக்காலத்திலும் இது போன்ற விநோத யுத்தம் நடந்ததில்லை.

சாதாரணமாக இந்த ஹெலி காப்டர்கள் பறக்கும் ஒவ்வொரு மணி நேரத்துக்கும் ஈடாகப் பத்து முதல் பன்னிரண்டு மணி நேரம் வரை அவற்றுக்கு ஓய்வுகொடுத்து விடவேண்டும் என்பது நியதி. அந்தச் சமயத்



அவசர உதவி தேவை என்பதை ரேடியோ டெலிபோன் மூலம் தலைமைக் காரியாலயத்துக்குத்தெரிவிக்கிறார் வியட்நாம் குடியரசின் ராணுவ அதிகாரி ஒருவர்.

திக் பொறி இயல் நிபுணர்கள் இயந்திரங்கள் எல்லாம் சரியாயுள்ளனவா என்று கவனித்துப் பழுது பார்க்க வேண்டியவற்றைச் செப்பனிட்டு விமானங்களை நல்ல நிலையில் வைத்திருப்பார்கள். ஆபத்தின்றி விமானம் பறக்க இந்த ஏற்பாடு. ஆனால் தென் வியட்நாமுக்கு வந்து சேர்ந்த அமெரிக்க ஹெலிகாப்டர்கள் பெரும்பாலும் தரையில் தங்குவதே அபூர்வம்! அத்தனை வேலைகள் இருக்கின்றன அவற்றுக்கு!

அத்துடன் அமெரிக்க ராணுவ காப்டன்கள் தென் வியட்நாமிய சிப்பாய்களுக்கு கம்யூனிஸ்ட் தந்திரங்களை முறியடிக்கவும் கொரில்லாப் போர் முறையையும் கற்றுத் தருகிறார்கள். கிராமவாசிகளில் பெண் மணிகள் கூட இப்போது துப்பாக்கி ஏந்தி அணிவகுத்து நடந்து தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்கிறார்கள். கிராமத்தைச் சுற்றிக் கோட்டை மதில் போல் உறுதியான மண் சுவர் எழுப்பி அதிலே மூங்கில்களைக் கூரிய ஈட்டிகளாய்ச் சீவிச் செருகி வைக்கிறார்கள். இத்தகைய மதில்களில் துப்பாக்கி முனைகள் வெளியே எட்டிப் பார்க்க மட்டும் துவாரங்கள் இருக்கும். உயரமான காவல் நிலையம் ஒன்றினையும் கிராமத்தில் அமைக்கிறார்கள். இதன் உச்சியில் இருபத்தி நாலு மணி நேரமும் யாரேனும் ஒருவர் நின்று சுற்றுப்புறத்தில் கண்ணோட்டம் செலுத்தியபடியே இருப்பார்.

இவ்வாறு தென் வியட்நாமியருக்கு உதவும் அமெரிக்க ராணுவ உத்தியோகஸ்தர்களை உயிருடனோ பிணமாகவோ பிடித்துக் கொடுப்போருக்கு ஒரு லட்சம் ரூபாய் வரை சன்மானம் அளிப்பதாகக் கம்யூனிஸ்டுகள் அறிவித்திருக்கிறார்கள். அப்படியிருந்தும் அந்த ராணுவத் தலைவர்கள் அச்சமின்றித் தங்கள் வீரப் பணியையும் அன்புப் பணியையும் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள்.

இந்தோசீனா யுத்தம் 1954ல் முடிவதற்குக் காரணமான ஜெனிவா உடன்படிக்கையின் படி ஹோசிமின்னிடம் உண்மையான பற்றுதல் கொண்டவர்களும் கம்யூனிஸ சார்புள்ளவர்களுமான பெரும்பாலான வியட்நாமியத் துருப்பினர் வடக்கு வியட்நாமுக்கு அனுப்பப்பட்டனர். ஆனால் கொரில்லாப் போர் முறையில் தேர்ச்சி பெற்ற வேறு பல கம்யூனிஸ மனப்பான்மைகொண்ட சிப்பாய்கள் தங்கள் தலைவர்களின் முன்னேற்பாடான உத்தரவுப்படி தென் வியட்நாமில் பரவலாகக் காடு மலைப் பிரதேசங்களில் மறைந்து கொண்டார்கள். பின்னால் வடக்கே இருந்து ஊடுருவியவர்களுடன் இவர்களும் சேர்ந்துகொண்டு தென்வியட்நாமிய மக்களைக் கிராமப்புறங்களில் சொல்லி முடியாத அளவுக்குச் சித்திரவதை செய்து துன்பப் படுத்தினார்கள்.

1955ல் வியட்நாம் உருவானதும் கம்யூனிஸ ஆதிக்கத்தின் கீழ் வாழப் பிடிக்காமல், 900,000 மக்கள் தெற்கு நோக்கி அகதிகளாக வந்து சேர்ந்தார்கள். இத்தனை பெரிய ஒரு மக்கட் சமூகம் இடம் பெயர்ந்தது உலக சரித்திரத்தில் மிக அபூர்வமாகவே நடக்கக் கூடிய விஷயமாகும். அந்நாளில் வியட்நாமின் பொருளாதாரம் பல வருஷங்களாக அடிமை வாழ்க்கை நடத்தியதாலும் பல யுத்த முனைகளைக் கண்டதாலும் சீர்குலைந்திருந்தது. தென் வியட்நாம் ஆறு மாதங்கள்கூட நிலைக்காது என்று அதன் தலைநகரான சைகானிலேயே அந்நாளில் கருதப்பட்டது. தென் வியட்நாமிய மக்கள் விடா முயற்சியுடன் தங்கள் நிலையை உயர்த்திக்கொண்டு சுதந்திரமாய் வாழப் பாடுபட்டு வெற்றி கண்டது மணல் மேட்டிலிருந்து மாளிகை எழுந்தது போன்ற ஓர் அரிய சாதனை.

இன்றைய தினம் வடக்கு வியட்நாம் துருப்பினர் தென் கிழக்கு லாவோஸிலும் ஏராளமாய் வந்து குவிந்துள்ளனர் என்ற தகவல் தென் வியட்நாமியருக்கு மிகுந்த கவலையை அளிக்கிறது.

வேறு ஒரு புதிய சிக்கலும் இப்போது தென் வியட்நாமைச் சூழ்ந்துள்ளது. அது தான் மத சம்பந்தமான தகராறுகள். தென் வியட்நாமிய ஜனாதிபதி டையெம் கதோலிக்க மதத்தைச் சேர்ந்தவர். தென் வியட்நாமில் பௌத்த மதத்தவர் ஏராளம். பௌத்த பிக்ஷுக்கள் தென் வியட்நாமில் எல்லா மதங்களுக்கும் சம அந்தஸ்து தரப்படவில்லையென்றும் பௌத்த மதம் தாழ்த்தப்படுவதாகவும் கருதினார்கள். இதற்காக அமைதியான முறையில் போராடத் துணிந்தார்கள். பௌத்த பிக்ஷு ஒருவர் நாற்சந்தியில் அமர்ந்து தம் மீது பெட்ரோலை ஊற்றிக் கொண்டு தமக்குத் தாமே தீவைத்துக் கொள்ளவும் செய்தார்; வெந்து மடிந்தார்.

இதற்குப் பின் அமெரிக்கத் தூதராலயத் தவரும் தென் வியட்நாமிய சர்க்காரை எச்சரிக்க வேண்டியதாயிற்று. தென் வியட்நாம் சர்க்காரின் போக்கிலும் மாறுதல் ஏற்பட்டு வருவதாய்த் தோன்றுகிறது. உள் நாட்டில் அமைதியும் ஒற்றுமையும் நிலவினாலன்றி வடக்கே இருந்து வரும் பகைவனைச் சமாளிப்பது கடினம் என்பதை உணர்ந்திருக்கிறார்கள்.

கம்யூனிஸ்ட் கொரில்லாக்களுடன் போராடத் தென் வியட்நாமியத் துருப்புக்களை அமெரிக்க ஹெலிகாப்டர் விமானங்கள் ஏற்றிச் சென்றன என்று நாம் பத்திரிகைகளில் படிக்கும்போது எங்கோ நடக்கும் ஏதோ நமக்குச் சம்பந்தமில்லாத விஷயம் என்பதாக எண்ணுதல் கூடாது. 'அமெரிக்கா எங்கே உள்ளது, வியட்நாம் எங்கிருக்கிறது: எதற்காக அத்தனை தூரம் இவர்கள் வந்து போராட வேண்டும்?' என்பதை யோசித்தால் இன்று தென் வியட்நாமையும் தென் கிழக்கு லாவோஸையும் ஊடுருவி நிலைக்கப் பார்க்கின்ற கம்யூனிஸத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்காமல் வாளாவிருந்தால் அதன் விஷ நாக்குகள் தென் கிழக்கு ஆசியா முழுவதுமே பரவி மக்களை அடிமைப்படுத்த அதிக நாளாகாது என்பது புரியும். நம் நாட்டின் வடக்கெல்லையில் உட்புகுந்து நின்று கொக்கரிக்கும் செஞ்சீனராயினும் சரி, வியட்காங் கொரில்லாக்களாயினும் சரி, அவர்கள் கையாள்கிற யுத்த தந்திரங்களில் ஒற்றுமை உண்டு; அவர்களுடைய அடிப்படை நோக்கமும் ஒன்றுதான்.


எடையிலும் ஏக்கமா?
எடை
குறைந்து
எடுப்பாய்
விளங்க
லிமிகல்
Limical
உங்கள் டாக்டரும்
லிமிகல்
அருந்தும்படிதான் சிபாரிசு செய்வார்.
'ஸ்லிம்மிங் கன் ஸிம்பிள்' என்னும் இலவச புத்தகத்தைப் பெற எழுதுங்கள்: ஸாராபாய் கெமிகல்ஸ், தபால் பெட்டி எண் 1668, பம்பாய்-1.



தூங்கும் அழகி

வானவில்லின் வர்ண ஜாலங்கள், வண்ண மலர்கள் நிறைந்த நந்தவனங்கள், உதய பானுவின் பொற்கிரணங்கள் படிந்த மலைச் சிகரங்கள், பசுமை போர்த்திய பச்சைக் குன்றுகளெனத் தோன்றும் பலவித மரங்கள், பாதிமதியின் பால் நிலவு, அசைந்தாடும் கொடிகளோடு ஆடிவரும் ஆரணங்குகள், வார்த்தைகளால் விவரிக்க இயலாத வண்ணச் சிறகுகளை விரித்துப் பறக்கும் பலவிதமான பறவை இனங்கள் என்று நான் எழுதிக் கொண்டே போனால், ஏதோ இயற்கை வர்ணனை என்று நினைப்பீர்கள். ஆனால் நான் இவ்வளவையும் நேரில் கண்டேன் என்று சொன்னால் நம்ப மாட்டீர்கள். என்னைப் பைத்தியம் என்பீர்கள்.

அகில உலகப் புகழ் பெற்று விளங்கும் 'வால்ட் டிஸ்னி'யின் அற்புத சிருஷ்டிகளில் தான் அத்தகைய ஆனந்த அனுபவத்தைப் பெற முடியும். வால்ட் டிஸ்னியை அறிந்தவர்களெல்லாம் அவரது அபூர்வ சிருஷ்டியான 'மிக்கி மௌஸை' அறிவார்கள். 'பனியழகியும் ஏழு குள்ளர்களும்'' என்ற டிஸ்னியின் படம் உலகப் பிரசித்தி பெற்றது.

அருங்கலை விநோதரான வால்ட் டிஸ்னி சித்திர விசித்திரங்கள் நிறைந்த தமது ஸ்டுடியோவை ஒரு தனி நகரமாகவே சிருஷ்டித்திருக்கிறார். மிகப் பெரிய நிலப் பரப்பைக் கொண்ட அந்த ஸ்டுடியோவின் பெயர் 'டிஸ்னி லாண்ட்' அங்கு கண்டு களிக்கவும், பார்த்துப் பரவசமடையவும் எத்தனையோ விசித்திரக் காட்சிகள் இருக்கின்றன. உலகத்துப் பிரமுகர்களெல்லாம் 'டிஸ்னி லாண்டு'க்கு வருகிறார்கள். பிரதம மந்திரி நேருஜியும், ஜனாதிபதி டாக்டர் ராதா கிருஷ்ணனும் டிஸ்னிலாண்டுக்கு விஜயம் செய்து அதைப் பாராட்டிப் பேசியிருக்கின்றனர்.

டிஸ்னியின் உன்னத சித்திரங்களுள் ஒன்றான ''தூங்கும் அழகி'' (Sleeping beauty) அனைத்துலகச் சிறுவர் சிறுமியர்களும் பெரிதும் விரும்பும் சுவை மிகுந்த தேவதைக் கதை. எழுபத்தைந்து நிமிஷங்களுக்குள் அது விறுவிறுப்பாக முடிந்து விடுகிறது.

எழில் அரசியாக விளங்கிய இளவரசி அரோராவைப் பொறாமை பிடித்த ஒரு மந்திரக்காரி நெடுந் துயிலில் ஆழ்ந்து போகும் படி சபித்து விடுகிறாள். பிலிப்ஸ் என்னும் இளவரசனின் ஸ்பரிசம் பட்டதும் சாபம் விலகி விடுகிறது. பிறகு கலியாணம் நடக்கிறது. இளவரசிக்குத் துணையாயிருக்கும் மூன்று வனதேவதைகளின் சாகஸங்களும், திறமையும் பிரமாதம். அவர்களுடைய மந்திரக் கோல் செய்யாத ஜாலமே இல்லை. மந்திரக்காரியின் கோர சாகஸங்கள் வியப்பை உண்டாக்குகின்றன. படத்தின் வண்ண எழில் கண்ணைப் பறிக்கிறது; அற்புதமான கானம் உள்ளத்தை உருக்குகிறது; கதை இதயத்தைத் தொடுகிறது. இன்னும் என்ன வேண்டும்?

''தூங்கும் அழகி''க்கு முன்பு ஒரு குட்டி வண்ணப் படம். (Mathemagic land) என்று பெயர். கணக்கு என்றாலே கஷ்டம் எனக் கருதும் மாணவர்கள் ரஸிக்கும்படி, எல்லாப் பொருள்களும், எல்லாக் கலைகளும் கணக்கில் அடங்கி விடுகின்றன என்பதை 'போர்' அடிக்காமல் எழில் வண்ண வடிவில் எடுத்துக் காட்டியிருப்பது பலே ஜோர்!

இவ்வதிசய வண்ணப் படத்தைத் தயாரிக்க ஆறு ஆண்டுகளை பிடித்தன என்றால் ஆச்சரியப்படாமல் இருக்க முடியவில்லை. ஒன்றும் இல்லாத நம் தமிழ்ப் படங்களைத் தயாரிக்க ஏழெட்டு ஆண்டுகள் ஆகிவிடுகின்றனவே! அப்படியிருக்க அடிக்கு ஓர் அதிசயமும்,— விநாடிக்கு ஒரு விசித்திரமும், நொடிக்கு நூறு விநோதங்களும் கொண்ட டிஸ்னியின் படங்களைத் தயாரிப்பதற்கு எத்தனை ஆண்டுகள் வேண்டுமானாலும் ஆகலாமே!



பார் மகளே பார்

ஒரு ஜமீந்தாருக்கு வெகு நாட்களாகக் குழந்தை யில்லாமலிருந்து கடைசியில் ஒரு பெண் குழந்தை பிறந்தது. அத்துடன் இன்னொரு பெண் குழந்தை — ஊர்பேர் தெரியாதது — ஜமீன்தாரிணியிடம் ஒப்படைக்கப்படுகிறது. அவள் எந்தக் குழந்தை தன்னுடையது என்று நிர்ணயிக்க முடியாத நிலையில், இரண்டையும் தான் பெற்ற செல்வங்களாகப் பாவித்து வளர்க்கிறாள். ஜமீன்தாருக்கு இந்த உண்மை தெரியாது. இதுதான் படத்தின் 'சஸ்பென்ஸ்.'

அந்தஸ்தையும், கௌரவத்தையும் பெரிதாக நினைத்துத் தம்மையும் அல்லற்படுத்திக் கொண்டு பிறரையும் அவதிக்குள்ளாக்கும் ஜமீன்தாராகச் சிவாஜி கணேசன் வருகிறார். முற்பகுதியில் குடும்பத்தினரிடம் அன்பைச் சொரிந்தவர் பிற்பகுதியில் தீயைப் பொழிந்து எரிமலை வெடித்தது போன்று பொங்கிக் குமுறிப் பாய்ந்து உதறுகிறார். கடைசியில் கண்ணீருக்கு இடையில் கதறிக் கரைந்து திருந்துகிறார். மமதை, வெறுப்பு, கோபம், துயரம், அன்பு, வேதனை முதலிய பல்வேறு உணர்ச்சிகளைக் கொட்டி நடிக்கும் சந்தர்ப்பங்கள் கிடைத்து விட்டால் சிவாஜி கணேசன் விட்டு விடுவாரா? தம் சொந்த மகள் யாரென்று தெரியாத நிலையில் தவித்து, வெய்துயிர்த்து, ஸ்தம்பித்து நின்று நடிப்பின் சிகரத்தைத் தொட்டுக் காட்டுகிறார். இறந்து போனதாகக் கூறப்படும் மகளின் படத்தை வேலைக்காரனிடம் கேட்டு வாங்கி நெட்டுயிர்த்து நெகிழ்ந்து போகும் கட்டம் கண்ணெதிரில் நிற்கிறது. ''பார் மகளே பார்'' என்று துயரத்தோடு பாடிக் கொண்டு மனைவியோடு துக்கத்தைப் பகிர்ந்து கொள்ளுகிற காட்சி மிகவும் உருக்கமாக இருக்கிறது.

சௌகார் ஜானகி ஜமீன்தாரிணி. பதிக்கேற்ற பத்தினியாகவும், மகப் பேற்றில் மகிழும் தாயாகவும், தான் பெற்ற குழந்தையைத் தானே அறிந்து கொள்ள இயலாத நிலையில் தவிக்கும் அபலையாகவும் வந்து நடிப்பில் சிவாஜிக்கு ஈடு கொடுக்கிறார். சௌகார் ஜானகி ஏற்கும் பாத்திரங்கள் அநேகமாக வைதவ்யம் அடைவது வழக்கம். இந்தப் படத்தில் அந்தக் கண்ணராவிக் காட்சி இல்லாதது ஒரு மாறுதல்தான். ஜமீன்தார் கையில் துப்பாக்கியிருந்தும் யாரும் அதற்கு இரையாகாமல் தப்பியதும் ஒரு மாறுதல் தான். (அது இருந்திருந்தால் நீதி மன்றம், விசாரணை ஆகிய காட்சிகளையும் சேர்த்துத் தொலைத்திருப்பார்களே!)

விஜயகுமாரி நன்றாய் நடிக்கிறார். நிதானமாகவும் உணர்ச்சிக் கொந்தளிப்போடும் அவர் பேசும் அழகே போதும். காதலனைக் கண்டும், நேருக்கு நேர் சந்தித்துப் பேச முடியாத நிலையில் அவர் விம்மிக் குமுறியது சிறந்த நடிப்புக்கு எடுத்துக்காட்டு.

விஜயகுமாரியின் சகோதரியாக நடிக்கும் புஷ்பலதா எடுப்பாகத் தோன்றி எல்லோரையும் கவருகிறார். முத்துராமன் விஜயகுமாரியோடு நடனமாடுகிறார்!


ஆரூர் தாஸ் எழுதியிருக்கும் வசனம் மிகவும் சுவையா யிருக்கிறது.

எம். ஆர். ராதா நல்லவனாக வந்து நன்றாய் நடிக்கிறார். சிறந்த நாடக நடிகராகிய 'சோ'வின் தமாஷ் பாத்திரம் மிகவும் அருமையானது. பெரிய நடிகர்களுக்குச் சிறிதும் 'ஜகா' வாங்காமல் நடிக்கிறார். ஆனால் அவர் பேச்சு கிணற்றுக்குள்ளிருந்து பேசுவது போல் கேட்கிறதே!

விஜயகுமாரியும், புஷ்பலதாவும் பரத நாட்டியம் என்ற பெயரில் குதிக்கும் காட்சியைக் கத்திரித்து விடலாம்.

ஹிந்திப் படக் கதையிலிருந்து தமிழ் நாடகமாகி, பிறகு தமிழ்ப் படமாகி யிருக்கிறது. உணர்ச்சி மயமான சம்பவங்களுடன் நல்ல நடிப்பும் சேர்ந்திருப்பதனால் படம் பிரமாதமா யிருக்கிறது.

— காந்தன்



இமயத்தில் நாங்கள்



குமாரி உஷா


[பல்கலைக் கழகப் பேராசிரியரின் புதல்வியாகிய உஷா லார்பேஷ்கார் பிரசித்தி பெற்ற பங்களூர் கார்மெல் பெண்கள் கல்லூரியில் படித்துச் சென்ற வருஷம் பி.எஸ்ஸி தேறியவர். பலவங்குடி பள்ளியில் படிக்கும் போதே சாரணர் இயக்கத்தில் மிகுந்த ஆர்வம் காட்டிய குமாரி உஷாவுக்கு மூன்று தமக்கைகளும் ஒரு தங்கையும் இருக்கிறார்கள். இவ்வருஷம் ஏப்ரல் மாதத்தில், மைசூர் ராஜ்ய பெண் சாரணர்களின் பிரதிநிதியாக டார்ஜிலிங்கில் உள்ள 'ஹிமாலய மலையேறும் பயிற்சிப் பள்ளி'க்கு அனுப்பி வைக்கப் பட்டார் குமாரி உஷா. ஷெர்பா டென்ஸிங் முதல்வராக இருந்து நடத்தும் இப்பள்ளிக்கு வேறு பல ராஜ்யங்களிலிருந்தும் உஷாவைப் போலவே பல பெண்கள் வந்து கூடியிருந்தார்கள். இவர்களில் காஞ்சன கங்கை மலைத் தொடரில் பாஹுங் சிகரத்தை அடையும் முயற்சியில் 17,700 அடி உயரம்வரை சென்று திரும்பிய ஒன்பது பேர்களில் ஒருவராக விளங்கினர். இருபத்தோரு வயதே நிரம்பிய குமாரி உஷா. மைசூர் ராஜ்யத்தைப் பொறுத்த வரையில் மலையேறுவதில் இத்தகைய ஒரு வியக்கத்தக்க சாதனையைப் புரிந்த முதல் பெண்மணி குமாரி உஷாதான். அவர் அனுபவங்களைப் பற்றிய கட்டுரையையும் புகைப் படங்களையும்தான் இப்பக்கங்களில் காண்கிறீர்கள்.

—ஆசிரியர்


1953 மே மாதம் 29-ந் தேதியன்று முதன் முதலாக டென்ஸிங் நார்க்கேயும் எட்மண்டு ஹிலரியும் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி நின்றார்கள். டென்ஸிங்கின் வெற்றியைக் கொண்டாடுகிற முறையில் மேற்கு வங்காள சர்க்கார் மலை ஏறுவதில் பயிற்சி அளிக்கும் பள்ளியொன்றை டார்ஜிலிங்கில் நிறுவத் தீர்மானித்தார்கள். 1954 நவம்பர் நாலாந் தேதியன்று பிரதமர் நேரு இந்த இமாலய மலையேறும் பயிற்சிப் பள்ளியைச் சம்பிரதாயமாகத் தொடங்கி வைத்ததிலிருந்து இப்பள்ளி செயல் புரிய ஆரம்பித்தது.

'பிர்ச்ஹில்' என்று பெயர் பெற்ற அடர்ந்த காடுகளைக் கொண்ட ஒரு குன்றில் இந்தப் பள்ளி அமைந்திருக்கிறது. இதற்கெனத் தனியே ஹாஸ்டலும் நூலகமும் பொருட்காட்சிச் சாலையும் விசாலமான மைய்க் கூடமும் உள்ளன. இவற்றைத் தவிர பலவிதமான மிருகங்கள் தங்களுடைய இயற்கைச் சூழலில் உலவி வருகிற பெரிய வனமும் இந்தப் பள்ளியைச் சேர்ந்ததாக விளங்குகிறது.

இந்த வருஷம் முதன் முறையாகப் பாரதப் பெண் சாரணர்களின் (Girl guides) தலைமை அலுவலகம் சில பெண் சாரணர்களை இந்த மலையேறும் பயிற்சிப் பள்ளிக்கு அனுப்பிவைத்தது. அஸ்ஸாம், டில்லி, ஆந்திரா, மைசூர் ஆகிய ராஜ்யங்களிலிருந்து ஒவ்வொருவரும் பம்பாயிலிருந்து இருவரும் ஆக நாங்கள் மொத்தம் ஆறு சாரணர்கள் இருந்தோம். இந்தப் பயிற்சிப் பள்ளி வருஷத்தில் நான்கு தடவைகளில் மலையேறுவது பற்றிய அடிப்படைக் கல்வி புகட்டுகிறது. நாங்கள் ஏப்ரல் 24-ந் தேதி முதல் ஜூன் 4-ந் தேதி வரை பெண்களுக்கு மட்டுமே நடந்த ஆரம்ப வகுப்புக்களுக்குச் சென்றோம். நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பல கல்லூரிகள், ஸ்தாபனங்களின் சார்பாக, மொத்தம் முப்பத்திரண்டு பெண்கள் அங்கே கூடியிருந்தார்கள்.







பயிற்சிப் பள்ளிக்கு வந்ததும் மிக உயரமான சிகரங்களில் நிலவும் சூழ்நிலைக்குத் தேவைப்படக்கூடிய துணிமணிகளும் மற்ற உபகரணங்களும்எங்களுக்கு வழங்கப்பட்டன. முதல் பத்து நாட்கள் டார்ஜிலிங்கிலேயே கழிந்தன. அப்போது பல சுவையான விஷயங்களைப் பற்றிய சொற்பொழிவுகளைக் கேட்டுப் பயனடைந்தோம். உடற்கூறு சாஸ்திரத்தையும், பூமிசாஸ்திரத்தையும், மலைப் பிரதேசங்களில் புகைப்படமெடுக்கும் விதத்தையும், ஹிமாலயச் சரிவில் காணப்படும் தாவரங்கள், மிருகங்கள், பட்சிகள் ஆகியவற்றைப் பற்றியும், மலைச் சிகரங்களுக்கு ஏறிச் செல்கையில் வழியில் திடுமென ஏற்படக் கூடிய ஆபத்துக்களைப் பற்றியும் நிறையக் கற்றறிந்து கொண்டோம். எவரெஸ்ட் வெற்றி வீரர் டென்ஸிங்கின் ஒரு பேச்சைக் கேட்கும் வாய்ப்பு, நல்லதிர்ஷ்டம் எங்களுக்குக் கிடைத்தது. எவரெஸ்டிலும் மேல்நாடுகளிலும் மலை ஏறுவதில் தமக்கு ஏற்பட்ட அனுபவங்களைப்பற்றி அவர் சொற்பொழிவாற்றினர். உடலும் உள்ளமும் உறுதிப்பட வேண்டும் என்பதற்காகத் தினந்தோறும் நீண்ட தூரம் எங்களை நடந்து போய் வரச் செய்தார்.





ஒரு நாள் காலை நாங்கள் டார்ஜிலிங்கை விட்டுப் புறப்பட்டோம். தலைக்கு இருபது, இருபத்தைந்து பவுண்டு எடையுள்ள மூட்டை முடிச்சுகளைத் தூக்கிக் கொண்டு கிளம்பினோம். மேற்கு சிக்கிமிலுள்ள சௌரி கியாங் என்ற இடம்தான் எங்களுக்குப் பயிற்சி அளிக்கப்படவிருந்த பிரதேசம். அந்தப் பகுதியைச் சென்றடைய ஏழு நாட்கள் நடக்க வேண்டும். அனைவருக்கும் தேவையான உணவுப் பொருட்கள், கூடாரங்கள், மலை ஏறுவதற்கான இதர உபகரணங்கள் போன்ற கனமான சாமான்களை ஷெர்பாக் கூலிகள் பெண்களும் ஆண்களுமாய்க் குதூகலமாய்ச் சுமந்து வந்தார்கள். பக்கிம் செல்லும் பாதையில் ஏராளமான அட்டைகள் உள்ளன. ரத்தத்தை உறிஞ்சி விடக் கூடிய அந்த ராட்சத ஜந்துக்களைப் பார்த்த மாத்திரத்தில் அருவருப்பாலும், பயத்தாலும் எங்களில் பலர் வீறிட்டு அலறினோம். நல்ல வேளையாக முன்னெச்சரிக்கையுடன் நாங்கள் புகையிலையும் உப்பும் அடங்கிய பைகளை உடன் எடுத்து வந்திருந்தோம்.*


பக்கிம்முக்குப் பிறகு பாதை செங்குத்தாக உயர்கிறது. நடந்து போவதாய் இராமல் ஏறிச் செல்வதாய் உள்ளது. காற்றின் குளுமை அதிகரித்துக் கொண்டே போகிறது. டிஸாங்ரி என்னுமிடத்தில்தான் முதன் முதலாக வெண்பனி மூடிய காஞ்சனகங்கை மலைத் தொடரின் கம்பீரமானதும் அழகானதுமான தோற்றத்தைக் கண்டோம்.


மலை ஏறுவதில் எங்களுக்குத் தீவிரப் பயிற்சி தொடங்கவிருந்த பிரதேசமாகிய சௌரி கியாங் 14,000 அடி உயரத்திலிருந்தது. அங்கே மலையடிவார முகாம் போட்டுவிட்டுப் பின் இன்னும் உயரே செல்லவிருந்தோம்.

பயணத்தின் கடைசி நாட்கள் பெரும் பரபரப்பை எங்களிடையே ஏற்படுத்தின. ஏனெனில் எங்களில் பலர் அப்போதுதான் முதன் முதலாக வெண் பனி மீது நடக்கும் வாய்ப்பையும் அனுபவத்தையும் பெற்றோம்.

---

* உப்பும் புகையிலையும் அட்டைகளுக்கு ஒத்துக் கொள்ளாது. ஆகவே, இமயமலைச் சாரலில் நடப்போர் அட்டைகளிடமிருந்து தப்ப ஸாக்ஸுகளுக்குள் உப்பையும், பூட்ஸுகளுக்குள் புகையிலையையும் திணித்துக் கொள்வர்.





இப்படி நடந்து சென்ற தினங்களில், அன்றாட அலுவல்கள் விடிவதற்கு முன்பே சுறுசுறுப்பாகத் தொடங்கிவிடும். நாங்கள் உடலைச் சுத்தம் செய்துகொள்ளுவதற்கு முன்னரே ஷெர்பாக்கள் தங்கள் சாப்பாட்டையெல்லாம் முடித்துக் கொண்டு எங்களுடைய கனமான சாமான்களைத் தூக்கிச் செல்லத் தயாராக இருப்பார்கள். நாங்கள் கூடாரங்களை மடக்கிச் சுருட்டி வைப்போம். மாஸ்டருடைய விசில் சத்தம் கேட்கும். காலை உணவை முடித்துக் கொள்ள விரைவோம்.

இதன் பிறகு நாங்கள் முகாமிட வேண்டிய அடுத்த இடத்தை நோக்கி நடப்போம். எங்களுக்கு அளிக்கப்பட்ட பயிற்சித் திட்டத்தில் இப்படி நாட்கணக்கில் நடந்து செல்கின்ற பகுதியே மிகவும் சந்தோஷத்துடன் அனுபவிக்கக்கூடியதாய் இருந்தது. ஏனெனில் இப்படி மெல்ல மெல்ல நடந்து முன்னேறுகையில் அழகான கிராமப் புறங்களையும், அடர்ந்த வனங்களையும், அவற்றில் பூக்கும் ரோடோடென்டிரான், மக்னோலியா, ஆர்கிட் போன்ற விதம் விதமான மலர்களையும், பர்ன், மாஸ் போன்ற பசுமையான தாவர இனங்களையும், மரத்துக்கு மரம் சிறகடித்துப் பாய்கின்ற வண்ண வண்ணப் பறவைகளையும் பார்த்து மனம் குளிர ரசிக்க முடிந்தது. ஆங்காங்கே நிதானமாக நின்று ஓய்வெடுத்துக் கொண்டு இந்தக் கண்ணுக்கினிய காட்சிகளைக் கண்டு மகிழ்ந்தோம். அடுத்த முகாமைச் சென்றடைவதற்கு யாருமே அவசரப்படவில்லை.

எனினும் உச்சிப் பொழுதுக்குள் சாதாரணமாக எல்லாப் பெண்களுமே முகாமுக்கு வந்து சேர்ந்து விடுவார்கள். சூடான ஒரு 'கப்' டீ எங்களை முகாமில் வரவேற்கும். பின்னர் நாங்கள் கூடாரங்களை அமைப்போம். பின்னோடு கட்டி எடுத்துக்கொண்டு வந்திருக்கிற மதிய உணவை அருந்துவோம். இதற்குப் பின் மத்தியானம் முழுதும் ஓய்வுதான். சிலர் 'டயரி'களில் தங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களை எழுதிக்கொள்வார்கள். சிலர் துணிமணிகளைத் துவைத்து உலர்த்துவார்கள். வேறு சிலர் தோழிகளுடன் உட்கார்ந்து குதூகலமாய் வம்பளந்து கொண்டிருப்பார்கள்.

இரவு உணவைச் சீக்கிரமே முடித்துக் கொண்டு விடுவோம். ஏற்கனவே பொறுக்கி எடுத்து வைத்திருந்த சுள்ளிகளைக் குவித்துத் தீமூட்டி அதைச் சுற்றிலும் அமர்ந்து குளிர் காய்ந்தபடியே ஆனந்தமாய்ப் பாடுவோம். அல்லது டிரான்ஸிஸ்டர் ரேடியோவைப் பொருத்திக் கேட்போம்.

சௌரிகியாங்கில் எங்களுக்குப் பயிற்சி ஆரம்பமாயிற்று. முதலில் மலை ஏறுவதற்கு அவசியத் தேவையான உறுதியான கயிற்றில் பல்வேறு முடிச்சுக்களைப் போடக் கற்றுக் கொண்டோம்.† செங்குத்தான பாறைகளில் ஏறுவதற்குப் பயின்றோம். 'ராப்பெல்லிங்' ‡ என்ற முறையில் கீழே இறங்கவும் கற்றுக்கொண்டோம்.

சில தினங்களில் பயிற்சி, 15,500 அடி உயரத்தில் ராடாங் எனப்படும் பனிக்கட்டி மலையில் (glacier) நடைபெற்றது. இங்கே பனிக்கட்டியில் இடுக்கிகளைப் பயன்படுத்தவும், படிகளை வெட்டி அமைக்கவும், பனிக்கட்டியில் தோன்றக்கூடிய பெரிய வெடிப்புகளுக்கிடையில் விழுந்து விட்டோரைக் காப்பாற்றும் நுணுக்கங்களையும் இன்னும் இது போன்ற வேறு பல விஷயங்களையும் கற்றுக் கொண்டோம். கடைசி தினத்தன்று உச்சியில் இரண்டு முலைகளாகப் பிளந்து நிற்கும் பாலூரங் மலைச் சிகரத்தை (18,700 அடி) அடைய முயன்றோம். எங்களில் ஒன்பது பேர்கள் 17,700 அடி உயரம்வரை சென்றோம். அதற்குப் பிறகு சீதோஷ்ண நிலை மிகவும் மோசமாகிவிட்டதால் திரும்ப வேண்டியதாகி விட்டது.

மலை ஏறிச் செல்கையில் நாங்கள் அடைந்த அனுபவங்களையெல்லாம் திரும்பும்போது மீண்டும் பெற்றோம். டார்ஜிலிங்கில் ஒரு வார காலம் நாங்கள் கற்றுணர்ந்த பாடங்களை மறுபடியும் நினைவுக்குக் கொணர்ந்து பயனடைந்தோம்.

கடைசித் தினம் பட்டமளிப்பு விழா. பனிப் பாறைகளுக்கிடையில் பயன்படும் கோடரிகளைப் போன்ற அமைப்புக் கொண்ட அழகிய சின்னஞ் சிறியதான வெள்ளிப் பதக்கங்களை மத்திய சர்க்கார் பாதுகாப்பு மந்திரி சாவன் எங்களுக்கு அணிவித்தார்.

இப்படியாக எங்கள் கல்வித் திட்டம் முடிவுற்றது. மலை ஏறும் நுணுக்கங்களில் மட்டும் நாங்கள் தேர்ச்சி பெறவில்லை; மலைகளிடமிருந்து மட்டுமே கற்றுக்கொள்ளக்கூடிய வேறு எத்தனையோ பாடங்களையும் நாங்கள் கற்றுக் கொண்டோம்.


---

† இந்த முடிச்சுக்களில் பல விதங்கள் உள்ளன. செங்குத்தான பாறைகளில் ஏறுபவனுடைய உயிர், அந்தப் பாறைகளில் அவன் பொருத்துகிற வளையங்கள், திருகாணிகள் அவற்றில் கொடுத்து வாங்கித் தன் உடலைச் சுற்றி ஓட விடுகிற கயிறு, அதில் போடப்படும் முடிச்சுக்கள், நூலேணிகள் இன்னும் இதர சாதனங்களிடம் அடைக்கலம் புகுந்துவிடுகிறது. இவற்றில் ஏதேனும் ஒன்றில் பிசகு நேர்ந்தாலும் அவன் உயிருக்கே ஆபத்துத்தான்.

‡ ராப்பெல்லிங் என்பது செங்குத்தான பாறைச் சுவரினை நோக்கியபடி உடலின் முன்புறம் இருக்கப் பின்நோக்கித் தாவிக் கீழே குதித்து இறங்குவதாகும். ஒரேயடியாக அதள பாதாளத்துக்குக் கீழ் நோக்கிப் பயணப்பட்டு மண்டை உடையாதிருக்கப் பாறையில் பொருத்தப்பட்டுள்ள வளையங்களில் நுழைந்து வந்து தோள்களைச் சுற்றியுள்ள கயிறு உடலைத் தாங்கிக் கொள்ளும். ஓரளவுக்குக் கீழே குதித்து இறங்கியதும் பாறைச் சரிவில் காலூன்றிக் கொண்டு வேறு கயிற்றுக்கு உடலை மாற்றிக் கொள்ள வேண்டும். முன் போலவே பின் நோக்கித் தாவ வேண்டும். இப்படிப் படிப்படியாகக் கீழே இறங்குவார்கள். (16-6-63 கல்கி இதழில் இமயத்தை வென்றவர்கள் என்ற கட்டுரையில் வெளியாகியுள்ள ஷெர்பா டென்ஸிங்கின் படத்தைப் பார்க்க.) ராப்பெல்லிங் என்னும் இம்முறையில் கீழே இறங்குவது மலை ஏறுவதைக் காட்டிலும் கடினமானதும், ஆபத்து நிறைந்ததுமாகும்.


பெண்டிரின்
மேனியெழில் இரகசியம்!
மலபார் க்ளோரி சோப் •
உங்களுக்கு இப்போது எவ்வாறு எழிலுடனிருப்பது என்று தெரியும். மலபார் க்ளோரி சோப் உங்கள் சருமத்திற்கு இதமாக இருக்கிறது. அதன் மென்மையான, வழவழப்பான நுரையும் அதன் நறுமணமும் உங்கள் சருமத்திற்கு ஒரு பளபளப்பை அளிக்கின்றன.
MALABAR GLORY SOAP
VEGETABLE SOAP WORKS
வெஜிடபிள் சோப ஒர்க்ஸ், கோழிக்கோடு
மற்றும் தபால் பெட்டி நெ. 3254, பம்பாய்—3.

கலை வளர்க்கும் கோயில்கள்



சிறந்த ராஜதந்திரியும் போர்வீரருமான பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் ஒரு நாள் ரயிலில் பிரயாணம் செய்துகொண்டிருந்தார். அவர் அமர்ந்திருந்த ஆசனத்துக்கு எதிர் ஆசனத்தில் மற்றொரு முதியவர் கையிலிருந்த சஞ்சிகையில் லயித்தவாறு உட்கார்ந்திருந்தார்.

நீண்ட நேரத்துக்குப் பின் ''நீங்கள்.... மிஸ்டர் சர்ச்சில்....அப்படித்தானே?'' என்றார் சஞ்சிகை ஆசாமி முகவாய்க் கட்டையைத் தடவியவாறு.

சர்ச்சில் தலையை ஆட்டினார்.

''அதாவது... வின்ஸ்டன் சர்ச்சில்...... இல்லையா?'' என்று தொடர்ந்தார் சஞ்சிகையார்.

சர்ச்சில் மீண்டும் தலையை ஆட்டினார். முதியவர் முகத்தில் மகிழ்ச்சி உணர்ச்சி பரவ ஆரம்பித்தது.

''நீங்கள் அறுபது வருடங்களுக்கு முன் 'ஹாரோ' கல்லூரியில் படித்தீர்களல்லவா?''

''ஆம்'' என்றார் சர்ச்சில்.

''ஹா! இப்போது உம்மை அடையாளம் கண்டு பிடித்துவிட்டேன்! நானும் ஒரு ஹாரோ மாணவன்! நீங்கள் அப்போது என்னுடன் படித்த வின்ஸ்டன் சர்ச்சில்!.... மகிழ்ச்சி! இப்போது என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்?'' என்று ஆனந்தம் ததும்பக் கைகளை நீட்டினாராம் குலுக்க!

நாட்டின் பிரதமராக இருந்தவர், உலகப் புகழ் பெற்றவர், ராஜதந்திர நிபுணர் என்ற காரணங்களுக்காகவெல்லாம் அவரை அடையாளம் கண்டு பிடித்துக்கொண்டு அந்த முதியவர் மகிழவில்லை. ஆனால் தாம் படித்த கல்லூரியில் படித்த மாணவன் என்ற முறையில்தான் அவர் அடையாளம் கண்டு மகிழ்ந்தார்!


இன்னும் பல வருஷங்கள் கழிந்தால் சென்னை ராயப்பேட்டைப் பகுதியில் உள்ள புதுக் கல்லூரியின் பழைய மாணவர்கள் இந்த ரீதியில் வயோதிக காலத்தில் சந்தித்து அடையாளம் கண்டு கல்லூரி நாட்களின் இணைப்பை நினைத்து மகிழலாம். அந்த வருங்கால இன்பத்துக்கு இன்று வித்திட்டுக் கொண்டிருப்பவர் இந்தக் கல்லூரியின் இன்றைய முதல்வர் சையத் அப்துல் வஹாப் சாகிப் புகாரி ஆவர்.

''நான் காண்பதும் மதிப்பதும் ஒரே சமூகம் தான். அதுதான் மாணவர் சமூகம். ஒவ்வொரு மாணவனும் வாழ்க்கையில் ஒரு கனவானாகத் திகழ வேண்டும். அது என் இலட்சியம். அதுதான் இந்தக் கல்லூரியின் லட்சியமும்கூட'' என்று பெருமிதத்துடன் அவர் கூறிய போது கேட்பவர்களுக்கு உடல் சிலிர்த்தது.

முதல்வர் புகாரி சாகிப் வெறும் லட்சியவாதியல்ல. அவர் இலட்சியத்தைச் செயலாக மாற்றிக் காண்பிக்கக் கூடிய காரியவாதியும்கூட என்பதற்கு உயர் கல்வித் துறையில் அவருக்கு இருக்கும் அநுபவமே சான்றாகும்.

அவருடைய இந்த அநுபவத்தைப் பாராட்டும் வகையில்சென்ற ஆண்டு பாக்தாத் நகரத்தில் நடந்த இலக்கிய மகாநாட்டுக்கு இந்தியாவின் பிரதிநிதியாக அழைக்கப்பட்டிருந்தார். ஆற்றல் மிகுந்த சொற்பொழிவுகளினால் பாரதத்துக்கும் புதுக் கல்லூரிக்கும் பெருமை தேடித் தந்தார்.

முதல்வர் புகாரி சாகிபின் இந்த மத்திய கிழக்கு நாட்டுச் சுற்றுப் பிரயாணத்தின் பலனை அவரைவிடப் பன்மடங்கு அதிகமாக அடையப் போகிறவர்கள் அவரிடம் சரித்திரப் பாடம் கற்கும் மாணவர்கள்தான். கல்லூரியில் அவர் மத்திய கிழக்கு நாடுகளின் சரித்திரத்தைத்தான் போதிக்கிறார்.




1902ம் ஆண்டிலிருந்தே சென்னையில் இயங்கி வரும் இஸ்லாமியக் கல்விக் கழகத்தின் உறுப்பினர்களுக்கு ஒரு கல்லூரியை ஸ்தாபிக்க வேண்டும் என்ற அவா வெகு நாட்களாக இருந்தது. அந்த அவாவும் அவர்களுடைய தீவிர முயற்சியும் மற்றும் இஸ்லாமிய சமூகத்தைச் சேர்ந்த பெருந்தனக்காரர்களின் தாராள நிதி உதவி

யும் ஒன்று சேர்ந்து இந்தக் கல்லூரியை உருவாக்கின.

1951ம் ஆண்டு ஜூலை மாதம் 2ம் தேதி இந்தக் கல்லூரியைத் திறந்து வைத்தவர் மதிப்புக்குரிய நம் ராஜாஜியாவர்.

இஸ்லாமிய கல்விக் கழகத்தைச் சேர்ந்த தீர்க்கதரிசிகள் தொடங்கிய இந்தக் கல்லூரி இன்று நாட்டின் எல்லாச் சமூகத்தினருக்கும் இன்முகம் காட்டி வரவேற்று, தேசிய, இன ஒருமைப்பாட்டுக்கு வழி காண்பித்துக்கொண்டிருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது.



ஏறத்தாழ ஆயிரம் மாணவர்களுக்கு இங்கு இடவசதியுண்டு. சென்ற ஆண்டு புகு முக வகுப்புக்கு மாத்திரம் 560 இடங்கள் ஒதுக்கப்பட்டன. இந்த ஆண்டிலோ இந்த வகுப்புக்கான கிராக்கி சொல்லி முடியாது. ஓரளவு நெருக்கடியைச் சமாளிக்கச் சர்வகலாசாலை, மேலும் சுமார் நாற்பது இடங்களை ஒதுக்க அங்கீகாரம் அளிக்கலாம் என்று சொல்லப்படுகிறது. இந்த ஆண்டு இறுதிப் பரீட்சையில் புகு முக வகுப்பு மாணவர்கள் கணிசமான அளவில் வெற்றி கண்டு கல்லூரியின் பெருமையைக் காப்பாற்றியிருக்கிறார்கள் என்று முதல்வர் குறிப்பிட்டார்.

ஏறத்தாழ இருநூறு மாணவர்களுக்கான இட வசதி இப்போது இந்தக் கல்லூரியின் ஹாஸ்டலில் கிடைக்கின்றது.

இந்தக் கல்லூரியில் படிக்கும் ஐம்பது சைவ மாணவர்களுக்கான ஹாஸ்டல் வசதியை முன் ஏற்பாட்டின்படி திருவல்லிக்கேணி நெடுஞ் சாலையில் உள்ள வெங்கடேசுவரா ஹாஸ்டலில் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

ஹாஸ்டல் உதவி வார்டனுடன் பேசிக்கொண்டிருந்த போது அவர் சுவையான விஷயங்களைச் சொன்னார்.

இந்தக் கல்லூரி ஹாஸ்டலில் சாப்பாட்டுக்காக ஆகும் மாதாந்தரச் செலவு மற்ற ஹாஸ்டல்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது வெகு குறைவுதானாம். வெளியூர்களிலிருந்து பல ஏழை மாணவர்கள் வருகிறார்கள். அவர்கள் கல்விக்காகும் செலவைக் கண்டு மிரண்டு கல்லூரிப் படிப்பின் ஆசையையே விட்டு விடாமல் இருக்க இந்த வகையில் பெரிய சௌகரியத்தைத் தோற்றுவித்திருக்கிறார்கள்.

'நான்' என்னும் சொல்லே அகங்காரத்தின் சின்னம், ஆணவத்தின் அறிகுறி என்று வேதாந்திகள் கூறுகிறார்கள். 'அந்த அகங்கார உணர்ச்சி எப்போது மறைந்து ஒன்றுமில்லாமல் இல்லை என்று போகிறதோ அப்போது மனிதன் ஞானியாகிறான்' என்றும் சொல்கிறார்கள்.

இந்தத் தத்துவத்தை உள்ளடக்கித்தானோ என்னவோ, ஆங்கில பாஷையில் 'நான்' (Non) என்ற பதத்துக்கு 'இல்லை' என்ற பொருளைக் கற்பித்திருக்கிறார்கள். இந்தத் தமிழ் 'நானும்' ஆங்கில 'நானும்' ஒன்று சேர்ந்து ஒரு புது மாணவனைப் பெரிய குழப்பத்துக்குள்ளாக்கிவிட்டது.

விஷயம் இதுதான்! மாணவன் ஹாஸ்டலில் சேர விரும்பி உதவி வார்டன் முன்வந்து நின்றான். மாணவனை எந்த ஹாஸ்டலுக்கு அனுப்புவது என்பதைத் தீர்மானிக்க அந்த நிர்வாகி 'நீ வெஜிடேரியனா? நான் வெஜிடேரியனா?' என்று கேட்டிருக்கிறார்.

மாணவன் 'நான் வெஜிடேரியன்' என்று பளிச்சென்று கூறினான். அவனுக்குக் கல்லூரிக் கட்டடத்தை ஒட்டியிருக்கும் ஹாஸ்டல் கட்டிக் காண்பிக்கப்பட்டது. பையன் விரைந்து சென்றான். சில நிமிடங்களுக்கெல்லாம் அவன் முகத்தில் பரபரப்புத் தோன்ற மீண்டும் அந்த நிர்வாகி முன் வந்து நின்றான்.

''சார்! நான் சுத்த சைவம் சார்! என்னை அங்கு போகச் சொல்லி விட்டீர்களே! என்னென்னவெல்லாமோ பரிமாறுகிறார்களே!'' என்று அழமாட்டாக்குறையாகச் சொன்னான்!

ஒரு சமயம் சில புது மாணவர்கள் 'சீனியர்' மாணவர்கள் ஏகோபித்த குரல்களைக் கட்டளையாக எடுத்துக் கொண்டு அரைப் பட்டினியாகச் சாப்பாட்டு ஹாலிலிருந்து வெளியேறிய சம்பவமும் சுவாரசியமாக இருந்தது.

சாப்பாட்டு வேளை. சமையலறையை ஒட்டிச் சில 'சீனியர்' மாணவர்கள் அமர்ந்திருந்தார்கள். அவர்களை ஒட்டிப் புதிதாகச் சேர்ந்த 'ஜூனியர்' மாணவர்களும் உட்



நவயுகப் புலவர் ஒருவர் தம் நண்பருடன் நகரைச் சுற்றிப் பார்க்கப் போய்க் கொண்டிருந்தார். ஒரு வீட்டின் வாசலில் "இங்கே குறிப்பிட்ட புலவர் வசித்து வந்தார். அவரது நினைவுச் சின்னமாக இந்த வீடு ஆட்சியினரால் வாங்கப்பெற்றுப் பொது மன்றமாக்கப் பட்டிருக்கிறது" என்னும் பொருள் படச் சலவைக் கல்லின்மேல் பொறிக்கப் பட்டிருந்தது.



அதைக் கண்ணுற்ற புலவர் "நான் இறந்துவிட்டால் என் வீட்டு வாசலிலும் இப்படி....." என்று தொடங்கினார்.

அவர் பேச்சை முடிக்கவிடவில்லை அவரது நண்பர். "'இந்த வீடு குடிக்கூலிக்கு விடப்படும்' என்ற விளம்பரப் பலகை எழுதித் தொங்கவிடப் பட்டிருக்கலாம்" என்றார்.

கார்த்திருந்தார்கள். பரிமாறும் சிப்பந்திகள் தங்கள் வேலையில் ஈடுபட்டிருந்தார்கள்.

ஒரு கட்டத்தில், உள்ளே சாதம் எடுக்கப் போன சிப்பந்தி சீக்கிரமாகத் திரும்பி வரும் வழியைக் காணோம். உள்ளே ஏதோ வம்பு பேசிக் கொண்டிருந்து விட்டான் போல் இருக்கிறது!

முன்னால் காத்திருந்த மாணவர்களுக்குக் கை உலர்ந்ததுபோல் பொறுமையும் உலர்ந்து விட்டது. "ரைஸ்! ரைஸ்!" என்று கோபக் குரல் எழுப்பினார்கள். 'ரைஸ்' என்ற ஆங்கில பதத்தின் ஒலிதான் 'சாதம்' என்ற பெயர்ச் சொல்லையும் 'எழுந்திரு' என்ற வினைச் சொல்லையும் ஏககாலத்தில் குறிக்குமே!

பக்கத்தில் அமர்ந்திருந்த 'ஜூனியர்' மாணவர்கள், அநுபவமிக்க தங்கள் தோழர்கள், ஏதோ ஹாஸ்டல் புரட்சியில் ஈடுபட்டுத் திடீர் ஆக்ஞைகள் பிறப்பிக்கிறார்கள் என்று நினைத்துக் கொண்டு எழுந்து வெளியேறி விட்டனர்!

'நயா சேவக் சமாஜ்' என்ற பெயருடன் சமூக சேவைக்கான ஒரு சங்கத்தை ஆரம்பித்து இந்தக் கல்லூரி மாணவர்கள் அதில் தீவிர ஆர்வம் காட்டுகிறார்கள்.

வழக்கமான மற்றச் சேவைகளை யெல்லாம் விட அவர்கள் 'மாணவர்கள் புத்தக தான உதவி' சேவையை ஆரம்பித்திருப்பது வரவேற்கத் தக்கது. கல்லூரிப் படிப்புக்கான புத்தகங்களையும், அதற்கான நிதியையும் சேகரித்து, விலையுயர்ந்த புத்தகங்களை வாங்கிப் படிக்க இயலாத ஏழை மாணவர்களுக்கு அந்தப் புத்தகங்களைப் படிக்கக் கொடுத்து வாங்கும் இந்தச் சேவை பாராட்டத்தக்கது.

சென்ற ஆண்டு இறுதியில் எல்லைப்புறத் தகராறினால் தேசிய நெருக்கடி தோன்றிய போது இந்தக் கல்லூரி மாணவர்கள் நாட்டைக் காக்கத் தாங்கள் எந்தவித தியாகத்துக்கும் தயார் என்பதைப் புது முறையில், பெருமைப்படத் தக்க முறையில் வெளிப் படுத்தினார்கள்.

நூற்றுக்கும் அதிகமான மாணவர்கள் உறுதிப் பத்திரத்தில் தங்கள் குருதியாலேயே கையெழுத்திட்டுக் கொடுத்தார்களாம். கல்லூரி மாணவர்களும், ஆசிரியர்களும், ஸ்தாபகர்களும் சுமார் ஆறாயிரம் ரூபாய் வரை சேர்த்துத் தேசியப் பாதுகாப்பு நிதிக்கு அளித்திருக்கிறார்கள்.

கிராமாந்தரத் தந்தை ஒருவர், தம் பையனை அழைத்து வந்து, கல்லூரி திறக்கப் பட்ட ஆரம்ப தினங்களில், அவனைச் சேர்த்து விட்டு ஊருக்குப் போய் விட்டார். ரொம்ப அப்பாவி மனிதர். நகர நாகரிகத்துக்கு அடிமையாகாதவர்.

சுமார் இரண்டு மாத காலம் கழிந்து ஏதோ விவசாய சம்பந்தமான சாமான்கள் வாங்க வந்தவர், பையனையும் பார்த்து விட்டுப் போகலாமே என்று நினைத்து மாலை வேளையில் ஹாஸ்டல் அறைக்கு வந்து சேர்ந்தார். அவர் மகன் அப்பொழுது அங்கு இல்லை. ஆனால் அவனுடைய சக அறை வாசி இருந்தான். தம் பையன் பெயரைச் சொல்லி 'அவன் எங்கே?' என்று விசாரித்தார்.

"கோர்ட்டுக்குப் போயிருக்கிறான்" என்ற பதில் வந்தது. அவ்வளவுதான் அந்தக் கிராமத் தந்தை தலையில் அடித்துக் கொண்டு, "அடா, பாவிப்பய மகனே! ஒரு வம்புதும்புக்கும் போகாமல் படிப்பாய் என்றுதானே இங்கே சேர்த்தேன்! என்ன தப்பு தண்டா செய்து கோர்ட்டுக்குப் போயிருக்கியோ தெரியலியே? இந்த ஊரிலே ஒரு வக்கிலைப் பிடிக்கிறதும் சுலபமான காரியமில்லையே!" என்று பிரலாபிக்க ஆரம்பித்தார்.

"ஐயா! நீங்க ஏன் இப்படிப் புலம்பறீங்கன்னு தெரியலே! உங்க பையன் ரொம்ப சாது! மட்டை பிடிச்சு விளையாட டென்னிஸ் கோர்ட்டுக்குப் போயிருக்கிறான். அதோ இருக்கிறது அந்த இடம்" என்ற பதில் வந்த பிறகுதான் அந்தக் கிராமவாசி நல்ல மூச்சு விட்டாராம்.

இப்படி எத்தனையோ சுவையான நிகழ்ச்சிகளைப் பற்றி இந்தக் கல்லூரி மாணவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது கேட்க நேர்ந்தது.

இன்னும் ஒன்றிரண்டு ஆண்டுகளுக்குள் இந்தக் கல்லூரி பூரணப் பொலிவு பெற்று விடும். கல்லூரிக்கான அரங்கமும், விஞ்ஞானப் பகுதிக் கட்டடமும், ஹாஸ்டலில் ஒரு பகுதியும் கட்டி முடியும் தறுவாயில் இருக்கின்றன.


இந்தக் கல்லூரியில், எம். ஏ., எம்.எஸ்ஸி. பாடங்களையும் சீக்கிரம் தொடங்கிப் புதுக் கல்லூரியை ஒரு முழுக் கல்லூரியாக்க இதன் நிர்வாகிகள் தீவிர ஆர்வம் காட்டி வருகிறார்கள். அந்த ஆர்வம் சீக்கிரமே வெற்றி பெறும் என்றும் நம்பலாம்.



சென்னை ஹிக்கின்பாதம்ஸ் (பிரைவேட்) லிமிடெட் சூப்பிரண்டெண்ட் ஸ்ரீ வி. சுப்ரமணியம் அவர்கள் குமாரி சௌபாக்கியவதி ஸ்ரீ பி. எஸ்லி.க்கும், ஓய்வுபெற்ற கொச்சின் துறைமுக நிர்வாக அதிகாரி ஸ்ரீ எம். எஸ். வெங்கடராமன் அவர்கள் குமாரர் சிரஞ்சீவி V. விஸ்வநாதன், பி. ஈ. (டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிட்.) அவர்களுக்கும் சென்னையில் 14-6-63ல் திருமணம் நடைபெற்றது.

வாழ்க மணமக்கள் !

திருமணம்



பம்பாய் ஸ்ரீ வி. ஜி. கிருஷ்ணா அவர்கள் குமாரி சௌபாக்கியவதி லலிதாவுக்கும் ஸ்ரீ கே. மகாதேவன் அவர்கள் குமாரன் சிரஞ்சீவி பி. எம். கே. மூர்த்தி அவர்களுக்கும் திருமணம் சமீபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள் !

உறைபனி மூடிய உலகத்தின் வடகோடி

தூந்தரப் பிரதேசம் என்று படித்திருப்பீர்களா? கனடாவின் வடகோடி, கிரீன்லாந்து, ஐரோப்பாவின் வடக்குக் கோடி ஆகியவைதான் இந்தத் தூந்தரப் பிரதேசம். மரம் செடி கொடிகள் இல்லாத, வருடம் முழுதும் பனி மூடிய பிரதேசம்தான் தூந்தரப் பிரதேசம். ஆர்க்டிக் கோடை என்று சொல்லப்படும் மிகக் குறுகிய பருவத்தில்தான் இங்குள்ள பனி கொஞ்சம் உருகும். இந்தக் காலங்களில் இங்கு உதயமான சூரியன் அஸ்தமிக்கவே மாட்டான். அதாவது இருபத்து நாலு மணி நேரமும் பகல்தான். மலை வாயிலில் விழாத சூரியன் தோன்றும் இந்தப் பருவத்தில் தான் சிறுசிறு தாவரங்கள் தலை தூக்கிப் பார்க்கும். இந்தப் பனிப் பொட்டலில் சுற்றித் திரியும் ரெயின்டீயர், கரிபோ ஆகிய மிருகங்களின் ஆகாரமாக இந்தப் புல், பாசி, பூக்கள் ஆகியவை உதவுகின்றன. தூந்தராவில் வாழும் மனிதர்களுக்கு இந்த மிருகங்கள் உணவாகின்றன.

தூந்தரப் பிரதேசத்தில் வசிப்பவர்கள் பழங்காலக் குடிகள். பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு இவர்களது மூதாதையர்கள் எப்படி வாழ்ந்தார்களோ அப்படியே இன்றைக்கும் இவர்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

கிரீன்லாந்து, கானடா ஆகிய பிரதேசங்களில் வாழும் எஸ்கிமோக்கள் வேட்டைக்காரர்கள். பின்லாந்து, நார்வே, ஸ்வீடன் ஆகிய இடங்களில் வாழும் லாப்ஸ், ரஷ்ய தூந்தரப் பிரதேசத்தில் வாழும் யாகுட்ஸ் ஆகியவர்கள் ரெயின்டீர் மான்களை மேய்க்கும் மானிடையர்கள்.

இந்த மானிடையர்கள் நாடோடிகள். தங்கள் மான் மந்தைகளோடு எங்கெங்கு மேய்ச்சல் பிரதேசமிருக்கிறதோ அங்கு போய்க் குடியேறி விடுவார்கள். வேட்டைக்கார எஸ்கிமோக்களும் கூட இப்படித்தான். கரிபோ, சீல், துருவக்கரடி இவைகளைத் தேடி வேட்டையாடப் போகும் போது தங்கள் கிராமங்களையே பெயர்த்துக்கொண்டு போய் விடுவார்கள். தூந்தரப் பிரதேசவாசிகளுக்கு இங்கு வாழும் மிருகங்கள் உணவாகப் பயன்படுவதோடு அவைகளின் தோல் ஆடையாகவும், கூரைத் துணியாகவும், கொழுப்பு விளக்கெரிக்கும் எண்ணெயாகவும், எலும்பு ஈட்டி முனை ஆயுதமாகவும் பயன்படுகின்றன.

தூந்தரப் பிரதேசத்து மிருகங்களில் பல பருவத்துக்கு ஏற்றபடி நிறம் மாறக் கூடியன. மாரிக் காலத்தில் பூமி முழுதும் வெண் பனி மூடி இருக்கும்போது இவைகளின் நிறமும் வெண்மையாக இருக்கும். கோடையில் பாசி, புல் பூண்டு, பூக்கள் ஆகியவைகளின் வண்ணங்களுக்கு ஏற்ப இம்மிருகங்களின் நிறம் பழுப்பாக மாறுகின்றன. இந்த நிற மாற்றத்தால் இவைகள் விரோதிகளிடமிருந்து தங்களைக் காத்துக் கொள்கின்றன.

சமீபகால ஆராய்ச்சி மூலம் இந்தத் தூந்தரப் பிரதேசத்திலும் தங்கம், இரும்பு, யுரேனியம் ஆகியவை ஏராளமாக இருக்கின்றன என்று தெரிய வந்திருக்கிறது.





உங்கள் ஆல்பத்துக்கு

மழை பெய்யாவிடில் நமது முன்னோர்கள் வருண ஜபம் செய்வார்களாம். அதேபோல் ஆப்பிரிக்கா தேசத்து உகாண்டா பிரதேசத்து வாசியான இவர் ஒரு பூசாரி. மழைக் கடவுளுக்குத் தண்ணீரைத் தெளித்துப் பூஜை போடுகிருர்.

பெரியது எது?

உலகத்திலேயே (1) மிகப் பெரிய மரம் எது? (2) மிகப் பெரிய அரண்மனை எங்கே உள்ளது? (3) மிகப் பெரிய வைரச் சுரங்கம் எது? (4) மிக உயரமான சிலை எது? (5) மிக நீளமான ரயில்வே பிளாட்பாரம் எது? (6) மிகப் பெரிய மியூஸியம் எங்கே இருக்கிறது? (7) மிகப் பெரிய ரயில்வே ஸ்டேஷன் எது? (8) மிக உயரத்தில் உள்ள ஏரி எது? (9) மிக நீளமான அணை எது? (10) மிகப் பெரிய ஹோட்டல் எங்கேயுள்ளது? (11) மிக உயரமான நீர்வீழ்ச்சி எது?

விடைகள்: (1) கலிபோர்னியாவிலுள்ள 'ரெட்வுட்' என்ற மரம். (2) ரோமிலுள்ள வாட்டிகன் அரண்மனை. (3) கிம்பர்லி சுரங்கம்—தென் ஆப்பிரிக்கா. (4) நியூயார்க் சுதந்திர தேவதையின் சிலை. (5) ஸ்வீடனில் ஸ்டார்வீக் என்ற ஸ்டேஷனில் உள்ளது. (6) பிரிட்டிஷ் மியூஸியம்—லண்டன். (7) நியூ யார்க்கிலுள்ள கிராண்ட் சென்ட்ரல் டெர்மினல். (8) பொலிவியாவில் கடல் மட்டத்திலிருந்து 12500 அடி உயரத்தில் உள்ள டிட்டிகாகா ஏரி. (9) இந்தியாவிலுள்ள ஹிராகுட் அணை. (10) சிகாகோ நகரில் உள்ள கொன்ராட் ஹில்டன் ஹோட்டல். (11) வெனிஜுலாவில் உள்ள ஏஞ்சல் நீர் வீழ்ச்சி.


— அ. வசந்தா

மாறு பெயர்கள்

திபெத் பீடபூமி, 'உலகத்தின் கூரை' என்னும் மாறு பெயராலும் வழங்கப்படுகிறதல்லவா, அது போல் பின்வரும் பெயர்கள் எவற்றைக் குறிக்கின்றன, சொல்லுங்கள்!

1. இந்தியாவின் வாசல்
2. பஞ்சநதிகளின் நாடு
3. அரண்மனை நகரம்
4. வெப்பு வண்ண நகரம்
5. ஐரோப்பாவின் விளையாட்டு ஸ்தலம்
6. புனித நாடு
7. நடுப்பகல் சூரியனின் நாடு
8. உதய சூரியனின் நாடு
9. ஏழு குன்று நகரம்
10. உலகின் சர்க்கரைக் கோப்பை
11. தங்க வாசல் நகரம்
12. மரகதத் தீவு

விடைகள்: 1. பம்பாய் 2. பஞ்சாப் 3. கல்கத்தா 4. ஜெய்ப்பூர் 5. ஸ்விட்ஸர்லாந்து 6. பாலஸ்தீனம் 7. நார்வே 8. ஜப்பான் 9. ரோம் 10. க்யூபா தீவு 11. சான்பிரான்ஸிஸ்கோ 12. அயர்லாந்து






உங்கள் ஆல்பத்துக்கு:

ஆப்பிரிக்கா தேசத்தில் கடிதங்களைக் கொண்டு செல்லும் தபால்காரர்தான் இவர். நல்ல சாலைகள் வாகன வசதிகள் இல்லையாதாகையால் கவட்டைக் குச்சியில் கடிதங்களையெல்லாம் வைத்துக் கொண்டு கால்நடையாகவே போவார் இவர்.


GOLDEN B.B.Co PUFF
பிரிட்டானியா
கோல்டன் பவ்ப்
பிரிட்டானியாவினுல் பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்ட கோல்டன் பவ்ப் பிஸ்கட்டுகள், புத்தம் புதியவை, முறுகலானவை, புஷ்டிச் சத்தும் உள்ளவை. டீ அல்லது காபி அருந்தும்போது, ஜாம், வெண்ணெ, அல்லது பாற்கட்டியுடனே தின்பதற்கு மிகச் சிறந்தவை. அவற்றை பரீட்சை செய்து பாருங்கள்—வாயில் போட்டதும் கரைந்து போகின்றன. இன்றே கொஞ்சம்வாங்கி, பிரிட்டானியா கோல்டன் பவ்ப் பிஸ்கட்டுகளின் புத்தம் புதிய சுவையின்பத்தை அனுபவியுங்கள்.
GOLDEN PUFF
BRITA
பிரிட்டானியா
பிஸ்கட்டுகள்
JWT BCS/10A



வழிகாட்டும் மகான்

ராஜாஜி

நாடு சென்று கொண்டிருக்கும் போக்கைப் பார்த்தால் தருமம் அழிந்து போகுமோ என்று பயமாகத்தான் இருக்கிறது. அசத்தியம் வளர்ந்து கொண்டு போவதைக் கண்ணால் பார்க்கிறோம். மக்கள் அன்றன்றைக்கு அடையக்கூடிய சிறு லாபங்களைக் கவனித்து பகவானை மறந்து விட்டோ அல்லது எப்படியாவது காப்பாற்றுவான் என்று எண்ணியோ நடந்துகொண்டு வருகிறார்கள்.


இதற்கு விமோசனம் மக்களை தருமத்தை நோக்கிச் செல்லச் செய்வது ஒன்றே. மக்களுக்கு மனம் தெளிவடையும் வழியில் உபதேசித்து வழி காட்டக் கூடிய மகான்கள் சிலர்தான். அந்தக் கணக்கில் ஒருவர் பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர்வாள். அவர்கள் பல ஆண்டுகளாகப் பல இடங்களில் செய்து வரும் பெருந் தொண்டைக் கண்டு மகிழ்ச்சியும் அளவற்ற அன்பும் பக்தியும் அடைந்தவர்கள் கணக்கில் நானும் ஒருவன்.

படிப்பில் மிகப் பெரியவர். ஆனபடியால் அவர்களுக்கு நான் ஆசிர்வதிப்பது மரியாதையல்ல. ஆயினும் அவருக்கு அறுபது ஆண்டு நிறைந்து பக்தர்கள் மகிழ்ந்து அதற்கென்று சாந்தி ஹோமமும் திருவிழாவும் நடத்தும்போது வருஷக் கணக்கில் நான் பெரியவனாகக் கருதி ஆசிர்வாதத்தையும் தந்து பெரியோர்களுடன் நானும் பகவானை அவர்களுக்குத் தீர்க்காயுளும் தேக திடமும் எல்லா பகவதருளும் தருமாறு பிரார்த்தித்துக் கொள்கிறேன்.


மேலே : தீக்ஷிதர் அவர்களின் பிரவசனபாணியில் லயித்திருக்கிறார் சென்னை கவர்னர் மேதி.

கீழே : கல்கி காரியாலயத்தில் சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர் அவர்களின் பிரவசனம் நடந்தபொழுது ராஜாஜி, காஸா சுப்பாராவ், கல்கி அதிபர் ஸ்ரீ சதாசிவம் ஆகியோர் தீக்ஷிதரை மகிழ்ச்சியோடு முகமன் கூறி வரவேற்கின்றனர்.





துள்ளி
விளையாடும்
பொழுதோ



ஓய்வு பெறும்
பொழுதோ...
அவர்கள்
எப்பொழுதும்
வளர்ந்து
கொண்டே
இருக்கிறார்
கள்!



கல்ஸானு-டி

வைட்டமின் தீவிரச் சேர்க்கையுடைய கால்சியம்

கர்ப்பிணிகள், குழந்தைகளை அமுதூட்டும் அன்னைகள்
மற்றும் வளரும் குழந்தைகள் இவர்களுக்கு ஏற்றது

GR.AD.60 TAM

அமுத வாக்கினர்

கி.வா. ஜகந்நாதன்

கம்பன் தான் இயற்றிய இராமாயணத்தின் அவையடக்கத்தில் ஒரு கருத்தைச் சொல்கிறான். "நான் எவ்வளவு எளிய முறையில் இராமாயணத்தை இயற்றத் தொடங்கியிருக்கிறேன்! வால்மீகி பகவான் அருமையாக இயற்றிய இராமாயணம் நிலைபெற்றிருக்கும் இந்த நாட்டில் நான் இதைச் செய்வது பேதைமை" என்ற கருத்துப் புலப்படும்படி ஒரு பாட்டுப் பாடியிருக்கிறான்.

"நொய்தின் நொய்யசொல் நூற்கலுற் றேன்எனை!
வைத கைவின் மராமரம் ஏழ்துளை
எய்த எய்தவற்கு எய்திய மாக்கதை
செய்த செய்தவன் சொல்நின்ற தேயத்தே."

'ஏழு மராமரங்களை ஓர் அம்பில் துளை செய்த வீரனாகிய இராகவனுக்கு ஒரு மகா காவியத்தைச் செய்து போற்றிய மா முனிவராகிய வால்மீகியின் திருவாக்கு நிலை பெற்றுள்ள இந்த நாட்டில் நான் கனம் இல்லாத சொற்களைச் சொல்லத் தொடங்குகிறேன்' என்று அவையடக்கம் கூறுகிறான்.

இதிலிருந்து கம்பநாடன் காலத்திலேயே தமிழ் நாட்டில் வால்மீகி இராமாயணத்துக்கு அதிகப் பெருமை இருந்து வந்தது என்று தெரிய வருகிறது.

"சொல் நின்ற தேயத்தே"

என்பதைக் கவனித்தால் இந்த நாட்டில் இராமாயணம் நிலைகொண்டது என்ற கருத்துப் புலனாகிறது. வட மொழி வல்லுநர்களும், வடமொழி பயில்கின்ற மாணவர்களுமே வால்மீகி இராமாயணத்தைப் படித்து இன்புற்றார்கள் என்பதை மட்டும் எண்ணிக் கம்பன் இப்படிப் பாடவில்லை. தமிழ் நாடு முழுவதுமே வால்மீகி இராமாயணக் கதையில் ஈடுபட்டு மக்கள் அதைப் பற்றி அடிக்கடி பேசிக் கொண்டிருந்திருக்க வேண்டும். அவ்வாறு பொதுமக்கள் அடிக்கடி பேசிக்கொண்டிருக்கும் வரையில் வால்மீகி இராமாயணம் பரவியது. அதற்குக் காரணம் என்ன?



புராணப் பிரவசனம் செய்யும் பெரியவர்கள் தமிழ் நாட்டின் மூலை முடுக்குகளில் எல்லாம் வால்மீகி இராமாயணத்தைப் படித்துப் பொருள் விரித்து வந்தார்கள். வால்மீகியின் காலத்திலேயே லவகுசர்கள் இராமாயணத்தைக் கானம் பண்ணினார்கள் என்றும், அதை இராமனே தன்னுடைய பீடத்தில் இருந்து கேட்டான் என்றும், வரவர அதிலிருந்து மெல்ல இறங்கி வந்து கேட்டு மகிழ்ந்தான் என்றும் வரலாறு இருக்கிறது. இராமாயணம் முதலிய இதிகாசங்களும், புராணங்களும் இந்த நாட்டில் சிறந்த கேள்விச் செல்வங்கள் ஆகி விட்டன. புத்தகத்தைப் படிக்க அறியாதவர்கள் கேள்விச் சிறப்பினால் பல நூற் பொருள்களை நன்கு தெரிந்துகொண்டார்கள். இராமாயணக் கதையை நன்றாகத் தெரிந்துகொண்டவர்கள் தமிழ் நாட்டில் பலர் இருந்தார்கள். இராமாயணக் கதை தெரியாதவர்கள் இல்லையென்றே சொல்லி விடலாம்.

இவ்வாறு இராமாயணம் எல்லோருடைய இதயத்திலும் இடம் கொள்ளும்படி செய்தவர்கள் புராணப் பிரசங்கிகள். பழங் காலத்தில் அவர்கள் செய்துவந்த அந்த அருமையான தொண்டு பரம்பரை பரம்பரையாக இந்த நாட்டில் நடந்து வருகிறது. எத்தனையோ கலைகள் நாளடைவில் மாறிவிட்டன. பழங் காலத்தில் இருந்த கதா காலட்சேபம் முதலியன இப்போது வர வர மங்கிப் போயின. ஆயினும் இந்தப் புராணப் பிரவசனம் என்னும் அரிய தொண்டு நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு வருகிறது. இது பெருமைப்படத் தக்க செயல். அதுவும் ஒரே சமயத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கேட்கும்படியாக ஒலிபெருக்கி என்னும் கருவியை விஞ்ஞானம் நமக்குத் தந்த பிறகு எங்கும் கூட்டம் கூட்டமாகப் புராணப் பிரவசனங்களை மக்கள் கேட்டு வருவதைப் பார்க்கிறோம். விஞ்ஞானம் மெய்ஞ்ஞானத்துக்கு உதவி செய்கிறது.

புராணப் பிரவசனம் செய்வது ஒரு தனிக் கலை. கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம் எல்லாம் சிறந்து இருக்கிறவர்கள்தான் அந்தக் கலையை வளர்க்கத் தகுதி பெற்றவர்கள். இந்த நாட்டுப் பண்பாட்டில் ஊறிச் சமய தத்துவங்களை யெல்லாம் நன்கு உணர்ந்து நல்ல அநுஷ்டானங்களைச் செய்து, பக்தி நிரம்பியவர்களாக இருக்கும் பெரு மக்களுக்கு இந்தக் கலை எளிதில் கைவரும். இப்போது இராமாயணம் முதலிய இதிகாசங்களையும், புராணங்களையும் பொதுமக்களுக்குப் பிரவசனம் செய்து வரும் கூட்டத்தினரில் வடமொழித் துறையில் முன்னணியில் நிற்பவர்கள் சேங்காலிபுரம் தீட்சிதர் அவர்கள். புராணப் பிரவசனத்துக்குரிய தகுதிகள் எல்லாம் அவர்களிடம் நிரம்ப இருக்கின்றன. வேதாத்தியயனத்தைநன்றாகச் செய்து யக்ஞங்களையும் நிறைவேற்றி, சாஸ்திரங்களையும் நன்கு கற்று, காவியங்களின் சுவையை அநுபவித்துச் சொல்லும் பேராற்றல் பெற்றவர்கள் அவர்கள். நூலின் நயத்தை எத்தனை தெரிந்து கொண்டாலும் கேட்பவர்களுடைய உள்ளப் பாங்கைத் தெரிந்து சொல்லாவிட்டால் சொற்பொழிவுகள் சிறப்பதில்லை.

தீட்சிதர் அவர்கள் மக்களுடைய உள்ளப் பாங்கை நன்கு தெரிந்தவர்கள். அன்றாடம் நிகழும் வாழ்க்கை நிகழ்ச்சிகளை ஊடுருவிப் பார்த்து, அவற்றையே உவமைகளாக எடுத்து ஆண்டு, மக்களின் உள்ளத்தில் மகிழ்ச்சியை உண்டாக்குகிறார்கள். நம்முடைய தர்மத்தின் சிறப்பை அவ்வப்போது எடுத்துக் காட்டி வற்புறுத்துகிறார்கள். வாழ்க்கையில் எத்தனையோ சுவையான நிகழ்ச்சிகள் நிகழ்கின்றன. நினைத்துப் பார்த்தால் சிரிக்க வைக்கும் சம்பவங்களும் உண்டு. அவற்றை யெல்லாம் பொருத்தமாக எடுத்துக் காட்டி, கதையின் நடுவில் சுவை உண்டாகச் செய்கிறார்கள்.

அவர்கள் சொல்லும் பாணியே தனிச் சிறப்புடையது. அவர்கள் எந்த இடத்தில் பிரவசனம் செய்தாலும் நெடுந் தூரத்தில் இருந்து கேட்டாலே தீட்சிதர் அவர்கள் பாணி அதில் நன்றாகத் தெரியும். ஏதேனும் ஒன்று மிகச் சிறப்பாக இருக்குமானால் பலர் அதனைப் பின்பற்றித் தாமும் அவ்வாறு செய்ய முற்படுவார்கள். இது உலக இயல்பு. பலர் பின்பற்றும் வழக்கம் மூலத்தின் பெருமையை மிகச் சிறப்பாக எடுத்துக் காட்டும். தீட்சிதர் அவர்கள் சுலோகம் சொல்லும் பாணியை இப்போது நூற்றுக்கணக்கான மக்கள் பின்பற்றுகிறார்கள்.

மூல சுலோகத்தை அழுத்தம் திருத்தமாகச் சொல்லி மக்களுடைய காதிலும் கருத்திலும் பதிய வைப்பது. கதையை சுவாரசியமாகச் சொல்வது. இடையிடையே வாழ்க்கையை ஒட்டிய சம்பவங்களையும் உதாரணங்களாகவும் உபமானமாகவும் சொல்லி விளக்குவது. சமயம் வரும்போதெல்லாம் நம்முடைய மதக் கொள்கைகளையும், சம்பிரதாயங்களையும் வற்புறுத்திச் சொல்வது, நல்ல காரியங்களைச் செய்தவர்களைப் பாராட்டுவது என்பன தீட்சிதர் அவர்களுடைய பிரவசனத்தின் பாணி. அவர்கள் எல்லோரையும் புகழ்ந்து பாராட்டுவார்கள். ஆனால் யாரையும் இகழ்வது இல்லை. ஒருகால் பிறரைப் புகழும் போது சிலருக்கு அது மிகையாகப்படலாம். தம்மை அவ்வாறு புகழும்போது அதை மறந்து விடுகிறார்கள். தட்டிக் கொடுத்துக் கொண்டு பெரிய காரியத்தைச் சாதிப்பது பெருமக்களுடைய இயல்பு. சிறிய நன்மை செய்தாலும் பெரிதாகப் பாராட்டினால் செய்தவனுக்கும், இனி செய்ய இருப்பவர்களுக்கும் ஊக்கம் உண்டாகும்.

தீட்சிதர் அவர்கள் ஒரு நல்ல காரியத்தை இப்போது செய்கிறார்கள். தம்முடன் சில மாணாக்கர்களையும் பயிற்றுவித்துத் தம்முடைய கலையை நன்கு தெரிந்துகொள்ளும்படி செய்கிறார்கள். தீட்சிதர் அவர்களுக்கு வரும் கூட்டமும், அவர்களை மக்கள் மதிக்கின்ற மதிப்பும் இதற்கு முன்பு வேறு எந்தப் புராண பிரவசனகர்த்தாவுக்கும் இருந்ததாகத் தெரிய வில்லை. தீட்சிதர் அவர்களுடைய புலமையும், இனிய வாக்கும், பிறரிடம் நடந்து கொள்ளும் முறையும், எல்லாவற்றுக்கும் மேலாக இறைவன் திருவருளும் இதற்குக் காரணம் என்று தோன்றுகிறது.

அமுத வாக்கையுடைய இந்தப் பெரியார் இன்னும் பல காலம் வாழ்ந்து தம்முடைய இனிய பிரவசனத்தைத் தமிழர்கள் வாழும் இடங்களில் எல்லாம் பரப்பி நலம் செய்ய வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

(நன்றி: **தீக்ஷிதர் மணிவிழா மலர்**)

வியாஸ பூஜை

ஹிந்துக்கள் யாவருடைய முதல் வழிபாட்டையும் பெறத் தக்க பெருமை பொருந்தியவர் வேத வியாஸ முனிவர். ஆனாலும் நாம் வேத வியாஸர் விழாவினைச் சிறப்பாக எடுத்துக் கொண்டாடுவதில்லை. நாம் எல்லோரும் வியாஸரிடம் செலுத்த வேண்டிய நன்றிக்கும் பக்திக்கும் ஈடு செய்வதுபோல் சநாதன தர்மத்தின் திரு உருவமாகிய ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் ஆண்டுதோறும் அற்புதமாக வியாஸ பூஜை செய்கிறார்கள். வேத வியாஸருக்கும் பீடத்தின் எல்லா ஆசாரியர்களுக்கும் சாதுர்மாஸ்ய விரதத்தின் தொடக்கத்தில் பூஜை நடைபெறுவது வழக்கம்.

இந்த ஆண்டு ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகள் மதுரையை அடுத்த நாராயணபுரத்தில் சாதுர்மாஸ்யம் அனுஷ்டிக்கிறார்கள். இதன் தொடக்கத்தில் ஜூலை மாதம் ஆறும் தேதி அங்கு வியாஸ பூஜையைச் சிறப்புற நிகழ்த்தினார்கள். அப்போது அவர்கள் சாதித்த திருக்கோலத்தையே இங்கு காண்கிறோம்.



அறிவுக்கனலே,



சந்திரமணி சிந்தனை வசமானாள்.

சாரதாமணியின் எதிர்காலம் எப்படியிருக்கப் போகிறதென்று அவளுக்குப் புரியவில்லை. எதிர்காலம் எப்படியானாலும் நிகழ்காலத்தில் அந்தக் குழந்தையைக் கிழடாகிய தன்னுடன் வைத்துக் கொண்டு அதன் சுயேச்சையைத் தடுக்க வேண்டாம் என்று எண்ணி, சாரதையை ஜயராம் வடியிலுள்ள பிறந்தகத்துக்கே அனுப்பி விட்டாள் சந்திரமணி.

அதன்பின் அவளால் கமார்புகூரில் நிம்மதியாக வாழ முடியவில்லை. வயது ஏற ஏற உடலும் தளர்ந்து போனபடியால் துணை வேண்டியிருந்தது. நீண்ட நெடும் காலம் வாழ்ந்து, இன்ப துன்பங்களையெல்லாம் கண்ட கமார்புகூரை விட்டுக் கிளம்பினாள். தக்ஷிணேசுவரத்துக்கு வந்து சேர்ந்தாள்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் வைஷ்ணவ சாதனைகள் புரிந்து கொண்டிருந்த சமயம் அது. ராமகிருஷ்ணரின் விராகம் அற்புதமானது. வைராக்கியம் என்ற பெயரில் பசையற்று இருந்தவரல்ல அவர். ராகம் — அல்லது இச்சையினால் தமக்கு இன்பத்தைத் தேடிக் கொள்கிற உணர்வு அவரிடம் ஒருபோதும் இருந்ததில்லை. தம்மை எதுவும் அல்லது யாரும் உலக இன்பங்களுக்குத் திருப்ப அம்பிகை அநுமதிக்க மாட்டாள் என்ற நம்பிக்கையும் அவருக்கு இருந்தது. எனவே தம்மைத் தேடி வந்த தாய்க்கு அன்போடு வரவேற்பு அளித்தார்.

தமது குருநாதரைப் பெற்ற பாக்கியவதியை மதுரானாதர் பூஜை செய்யாத குறையாக தக்ஷிணேசுவரத்தில் வைத்துப் பராமரித்தார். என்றாலும் அவருக்கு மன நிறைவு உண்டாகவில்லை. தாம் முன்பொரு சமயம் குருநாதருக்குச் சொத்து சுதந்திரங்களை எல்லாம் எழுதி வைத்ததும், அப்போது அவர், ''என்னை சந்நியாசியாக்கவா பார்க்கிறீர்கள்?'' என்று தம்மைக் கடிந்து கொண்டு காணிக்கையை நிராகரித்ததையும் நினைவுகூர்ந்தார் மதுரானாதர். ''இப்போது சந்திரா தேவிக்குத் தம் பொருள் செல்வத்தை அர்ப்பணித்தால் என்ன?'' என்ற ஆசை அவருக்கு எழுந்தது.

பொருள் என்பது அவருக்குப் பெரிய விஷயம்தானே! அது உண்மையில் பொருளற்றது — 'பஜகோவிந்த'த்தில் பகவத் பாதர் பாடியது போல 'அர்த்தம் அநர்த்தம்' — என்பதை அறியும் பக்குவம் பெற்றவரல்லவே மதுராநாதர்? எனவே அவர் சந்திரமணியிடம் தம்மிடமிருந்து பொருளுருவில் காணிக்கைகளை ஏற்குமாறு வேண்டினார்.

தியாக சீலத்தை உதிரத்திலேயே பெற்ற உத்தமரைத் தனது உதரத்தில் பத்து மாதம் தாங்கிய அந்த மாதரசி ''கிழட்டு விதவையாகிய எனக்கு என்ன வேண்டிக் கிடக்கிறது? ஏதோ அன்னவஸ்திரத்துக்குக் குறைவில்லாமல் பார்த்துக் கொள்கிறீர்கள்! கங்காதீரத்தில் அம்பாள் சந்நிதியிலேயே வாசம் கிடைத்து விட்டது. வேறென்ன வேண்டும்?'' என்றாள்.

''அப்படியில்லை, பாட்டியம்மா! உங்களுக்கு இல்லாவிட்டாலும் உங்கள் குடும்பத்துக்காவது இருக்கட்டுமே. என்

விடம் நீங்கள் எதையாவது கேட்டுப் பெற விட்டால் எனக்கு இத்தனை சொத்து சுதந்திரம் இருந்தும் அவற்றின் பயனை அடைந்ததாகாது...ம்...கேளுங்கள்'' என்று துடித்தார் மதுராநாதர்.

கொடுக்க வேண்டியவர்தான் துடித்தாரே தவிர பெற இருந்தவர் அமைதியாகவே இருந்தார்.

ராமகிருஷ்ணரைப் பெற்ற தாய் வேறெப்படிக் கேட்பாள்?

மதுராநாதரின் கண்கள் ஈரமாயின.

வங்காளத்தில் அந்தணக் குலக் கைம் பெண்களும் புகையிலையைத் தள்ளுவதில்லை. அது அவர்கள் தேசாசாரம்.

ராமகிருஷ்ணர் எல்லா பாவங்களாலும் பரம்பொருளைப் புரிந்து கொண்டா

அருட் புனலே!

ரா. கணபதி



யிற்று. பாவம் என்றே சொல்ல முடியாமல், ஆனால் எல்லா பாவங்களுக்கும் மேம்பட்ட அத்வைத நிலையில் பரம்பொருளை அநுபவிக்க வேண்டியது மட்டும் பாக்கியிருந்தது. தான் யார் என்று ஜீவன் ஆராய்ந்து இறுதியில் தான் பரம்பொருளே யென்று அறிந்து, அந்த அறிவை உணர்வாக்கிக் கொள்கிற முடிவான நிலை அத்வைதம். அத்வைதத்தைப் பற்றி மலை மலையாக எழுதிக் குவிக்கலாம். ஆனால் அதனை உணர்வது எல்லாச் சாதனைகளையும் விடக் கடினமானது. அத்வைத சாதனை காத்துக் கிடந்தது பரமஹம்ஸரின் அநுபவத்துக்காக. உருவம், தத்துவம் எல்லாம் போய் எங்குமாக எல்லாமாக நிறைந்திருக்கும் உருவமற்ற மெய்ப்பொருளில், 'நானென்று நீயென்று இரண்டில்லை என்னவே' லயமாகும் நிர்விகல்ப சமாதி ஸ்ரீ ராமகிருஷ்ணருக்காகக் காத்துக் கிடந்தது.

இன்ப துன்பங்களிலிருந்து விடுதலை பெறும் மோக்ஷ நிலையாகிய அத்வைதத்தை ராமகிருஷ்ணருக்கு அளிப்பதற்காகத் தக்ஷிணேசுவரம் வந்து சேர்ந்தார் அவதூத சந்நியாசி ஒருவர், ஒரு செம்பையும் இடுக்கியையும் ஏந்தியவராக.

தோதாபுரி என்ற அந்தத் துறவியின் பூர்வாசிரமத்தைப் பற்றிக் குரு மஹராஜ் அதிகமாக எதுவும் அறிந்திருக்கவில்லை. சந்நியாசிகளின் பூர்வாசிரமத்தைப் பற்றிக் கேட்பதும் சொல்வதும் சாஸ்திர விரோதம் என்பார்கள். இதனால் ஒருவேளை ஸ்ரீ ராமகிருஷ்ணர் தோதாபுரியின் முந்தைய சரிதை பற்றி அதிகம் கேட்டதில்லையோ என்னவோ! எனினும் பரமஹம்ஸரின் சிஷ்யர்கள் செய்த ஆராய்ச்சிகளிலிருந்து தோதாபுரியைப் பற்றிச் சில விவரங்கள் அநுமானிக்கப்படுகின்றன.

சிறிது நேரம் யோசித்தாள் கிழவி.

''நான் ஏதேனும் கேட்டு நீங்கள் அதைத் தர வேண்டும். அவ்வளவு தானே? கேட்கிறேன். புகையிலைச் சாம்பல் போட்டுப் பல் தேய்த்தால் தேவலை போல் இருக்கிறது. ஓரணாவுக்குப் புகையிலை வாங்கித் தருவீர்களா?'' என்று கேட்டாள் சந்திரா.

பஞ்சாபில் குழந்தைப் பேறு வாய்க்கப் பெறாதவர்கள் தங்களுக்குச் சந்ததி பிறந்தால் முதல் மகனை ஆண்டவனுக்கு அர்ப்பணிப்பதாக வேண்டுதல் செய்து கொள்ளும் வழக்கமுண்டு. இப்படி ஆத்மிகத்துக்காகவே வேண்டுதல் இருந்து பெற்ற குழந்தை தோதாபுரி. தமக்கு நினைவு தெரிந்த நாளாக அத்வைத சந்நியாசிகளின் மடம் ஒன்றிலேயே வாழ்ந்தவர். குழந்தைப் பருவத்திலிருந்தே உச்சமான தத்துவச் சூழலில் வாழ என்ன புண்ணியம் செய்திருந்தாரோ அவர்?

லூதியானாவில் எழுநூறு சந்நியாசிகள் கொண்ட ஒரு சங்கத்தில், ஆத்மா — அனாத்மா விவேக விசாரத்துக்கும், சிரவண - மனன - நிதித்யாசனாதிகளுக்குமிடையில் வளர்ந்த குழந்தையின் இளகிய நெஞ்சில் தத்துவங்கள் ஆழப் பதிந்து விட்டன. மானுடர்களுக்குப் பொதுவாக உள்ள லௌகிக உந்தல்கள் இன்றியே மிக சுலபமாக அத்வைத சாதனைகள் சித்தித்து விட்டன தோதாபுரிக்கு. உரிய பருவத்தில் அந்தப் பெரிய மடத்தின் மஹந்துவாகவும் ஆனார் அவர். நாகர்கள் என்று சொல்லப்படுகிற பிரிவைச் சேர்ந்த தோதாபுரி துறவியான போதிலும் துனி என்ற அக்கினி வளர்த்து உபாசனை செய்ய உரிமை பெற்றிருந்தார்.

தோதாபுரிக்கு மடத் தலைவர் பதவி பிடிக்கவில்லை. லூதியானாவிலிருந்து புறப்பட்டார். பிரபஞ்சத்தில் யாரோ ஒருவனாகச் சஞ்சாரம் செய்யத் தொடங்கிவிட்டார். நர்மதா தீரத்தில் நீண்ட நாள் சாதனை புரிந்து பரம்பொருளுடன் ஒன்றியிருக்கும் அநுபவ சிகரத்தை எய்தினார்.

ஆதிசங்கர குருவின் ஸிஷ்ய பரம்பரையைச் சேர்ந்தவர் தோதாபுரி. 'புரி' என்பது ஸ்ரீ ஆசாரியார் வகுத்த பத்து துறவிப் பிரிவுகளில் — தசநாமிகளில்— ஒன்றுதான். என்றாலும் கர்மம், பிரதிக உபாஸனை இவற்றையும் ஆதி குரு அவர்கள் அத்வைதத்தின் படிகளாக வைத்திருந்த போதிலும் அந்த வரிசைக் கிரமத்தில் செல்லாதவர் தோதாபுரி. இந்தக் கிரமம் சாமானியமான சாதகனுக்கு ஏற்பட்டது. தோதாபுரிக்கு இவை தேவையாயிருக்கவில்லை. 'தான் பரம்பொருளே' என்பதை ஒருவர் உய்த்துணர முக்கியமானது அந்தச் சிந்தனையிலேயே சித்தத்தை ஒருமுகப் படுத்தி ஊன்றச் செய்வதுதான். இவ்வாறு உள்ளத்தைப் பிற உணர்வுகளிலிருந்து அறவே பிரித்துத் தெளிய வைத்துத் தியானிப்பதற்கு 'யோக மார்க்கத்தை அநுஷ்டித்தவர் தோதாபுரி.

''உங்களுக்கு உடம்பு என்ன செய்கிறது என்று சொன்னால் சௌகரியமாயிருக்கும்'' என்று கேட்டார் டாக்டர்.

''அதைக் கண்டு பிடிக்க வேண்டியது உங்கள் வேலை. நான் எதற்காக வாய் திறக்க வேண்டும்?''

''அப்படியானால் நாளைக்கு வாருங்கள். வேறு ஒரு நல்ல டாக்டர் உங்களைப் பரிசோதிப்பார்.''

மறுநாள் நோயாளிக்குப் புதிய டாக்டர் அறிமுகமானார். ''இவர் மிருக வைத்தியத்தில் நிபுணர். நீங்கள் வாய் திறந்து பேசவே வேண்டாம். வியாதி என்ன என்பதை இவரே கண்டு பிடித்து விடுவார்!''

பக்தி மார்க்கமானது உள்ளத்தில் உதயமாகும் உணர்வுகளை மையமாகக் கொண்டாலும் உடலுக்கு உரியது போல் தோன்றும் பாவங்களையும், பூஜா முறையையும் அநுஷ்டிக்கிற வழியாகும். யோக மார்க்கமோ உடலில் உள்ள சக்திகளை எழுப்பி உணர்வுக்கு இட்டுச் செல்கிறது.

முதுகுத் தண்டின் அடியிலே பிராண சக்தி உறங்கிக் கொண்டிருக்கிறது. இது பாம்பு போலக் குண்டலாகாரமாகக் குண்டலினி என்ற பெயரில் உறையும் இந்த ஸ்தானம் மூலாதாரம் எனப்படும். பிராணாயாமம் முதலிய முறைகளால் சுவாசத்தைச் சீர் செய்வதன் மூலம் இந்தச் சக்தியை விழிப்புறச் செய்து அதற்கு மேல் உள்ள ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அநாஹதம், விசுத்தி, ஆக்ஞா முதலிய சக்கரங்களின் வழியாக ஸஹஸ்ராரத்துக்கு ஏற்றுவதே சாதனை. ஸுஷும்னை நாடி வழியாகப் பிராண சக்தி உயரச் செல்லும். ஸஹஸ்ராரம் என்ற ஆயிர இதழ்க் கமலம் சிரஸில் உள்ளது. அதுதான் சுத்த ஞானமாகிய சதாசிவத்தின் ஸ்தானம். மூலாதாரத்திலிருந்து பிராண சக்தி படிப் படியாக ஏறும் போது பௌதிக அதீதமான பல அநுபவங்கள் கிட்டும். ஸஹஸ்ராரத்தில் பிராண சக்தி சிவத்துடன் ஒன்றி விடும்.

அண்டபிண்டம் காணேன் அகமும்
புறமும் ஒன்றாக்
கண்ட என்னை நீ கலந்த காலம்
பராபரமே

என்ற ஆப்தர் மொழிப்படி சிவனும் சீவனும் கலந்து அத்வைத அநுபவம் பெறும் நிலை அதுவே.

மூலாதாரம் முதலிய சக்கரங்களையும், ஸுஷும்னை முதலிய நாடிகளையும்

உடற்கூற்று ஆராய்ச்சியால் காண முடியாது. உடனேயே 'இதெல்லாம் பிரமை' என்று ஒதுக்கிவிட வேண்டாம். நம் கண்ணுக்குத் தெரியாத பலவற்றைப் புதிர்க் கதிர் (X-ray) இயந்திரம் கண்டு பிடித்துக் காட்டலாம். ஆனால் நம்முடைய கண்களுக்குச் சிலஅகப்படாதது போல் விஞ்ஞானக் கருவிகளுக்கும் அகப்படாத பொருள்கள் ஏன் இருக்கக் கூடாது? யோகிகள் தங்கள் உணர்வால் அவற்றைக் கண்டிருக்கிறார்கள். உடற்கூற்று இயலைப் பகவத் கீதையால் அளவிட மாட்டோமல்லவா? அதே போல் ராஜயோகத்தையும் விஞ்ஞானத்தால் அளவிட வேண்டாம். அவை அவையே அவை அவற்றுக்குப் பிரமாணமாகும்.

பாகீரதி சமுத்திரத்தில் கலக்கும் கங்காசாகரத்தில் ஸ்நானம் செய்ய வேணுமென்றும், புரி ஜகந்நாதம் செல்ல வேணுமென்றும் நர்மதா தீரத்திலிருந்து புறப்பட்ட தோதாபுரி 1865-ம் ஆண்டில் தக்ஷிணேசுவரத்தை வந்தடைந்தார் — செம்பு ஒன்றும், இடுக்கி ஒன்றும் ஏந்தியவராக. தீர்த்த பாத்திரம் யதிக்கு அவசியம்தான். இடுக்கி எதற்கு? இவர் 'துனி' என்ற தீமூட்டி உபாஸிக்கும்போது அக்கினித் துண்டங்களை எடுக்கத்தான். இவ்விரு உபகரணமும் கனலையும் புனலையும் ஒருங்கே நினைவுறுத்துகின்றன அல்லவா?

ஆசாரிய சங்கரருக்கு சந்நியாசம் அளித்த கோவிந்த முனிவர் நர்மதைக் கரையில் வசித்ததாகத்தான் கருதப்படுகிறது. ஆசாரியருக்குப் பின் ஹிந்து மதத்தின் சகல பிரிவுகளையும் நிலை நாட்ட வந்த மகாபுருஷராகிய பரமஹம்ஸருக்கு அத்வைத மார்க்கத்தைப் போதித்துத் துறவற தீக்ஷை அளித்த நல்லாசானும் நர்மதைக்கரையிலிருந்து வந்ததில் ஒரு பொருத்தம் இருக்கிறதல்லவா?

கங்கைக் கட்டத்தை அடுத்த கோயிலின் முன்றிலுக்குத் தோதாபுரி வந்த போது ராமகிருஷ்ணர் ஏதோ நினைவாக — தெய்வ நினைவாகத்தான் இருக்க வேண்டும் — ஒரு மூலையில் அமர்ந்திருந்தார். அவருடைய உருவத்தைக் கண்டவுடனேயே தோதாபுரிக்கு உள்ளத்தில் ஒரு மலர்ச்சி ஏற்பட்டது. உலக ஆசாபாசங்களின் வாய்ப்படாத தூய்மையும், குளிர்ச்சியும் கொண்ட அந்தத் திரு முகத்தைக் கண்டவுடனேயே தோதாபுரி தெரிந்து கொண்டு விட்டார், 'தன்னிடம் எல்லாம் இருப்பதாகவும், தான் எல்லாவற்றிலும் இருப்பதாகவும்' உணரக் கூடிய ஓர் உத்தம பாத்திரம் அவர் என்பதாக.

பள்ளத்தைக் கண்டவுடன் நீர் குதித்தோட வேண்டியதுதானே? தோதாபுரியின் அத்வைத ஞானமும் ராமகிருஷ்ணரிடம் துள்ளிச் சென்றது.

''குழந்தாய், நீ வேதாந்த சாதனை புரியப் பிரியப்படுகிறாயா?'' என்று ராமகிருஷ்ணரைக் கேட்டார் தோதாபுரி.

''ஸ்வாமி, எனக்குத் தெரியவில்லை. வந்து.....'' என்று மலங்க மலங்க விழித்த ராமகிருஷ்ணர், ''அம்மாவுக்குத்தான் நான் என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக் கூடாது என்றெல்லாம் தெரியும். அவள் உத்தரவுப்படி தான் நான் செய்வேன். கேட்டுக் கொண்டு வரட்டுமா?'' என்றார்.

''ஏதுமறியாக் குழந்தையாகிய நான் என்ன செய்ய வேண்டுமோ, செய்யக் கூடாதோ அவற்றை எல்லாம் நான் செய்யுமாறும், செய்யாதவாறும் நீதான் நடத்திக் கொடுக்க வேணும்'' என்று சுமார் பத்தாண்டுகளுக்கு முன் பவதாரிணியிடம் தமது இதயத்தின் இதயத்திலிருந்து வேண்டிக் கொண்டவர் இன்று வேண்டுதலின் பலனை சர்வசகஜமாக நடைமுறையில் கண்டு வந்தார்.

ராமகிருஷ்ணரின் 'அம்மா'வை வந்த தோதாபுரி எங்கே கண்டார்?

''சரி, அப்படியானால் போய் உன்னுடைய அம்மாவைக் கேட்டுக்கொண்டு சீக்கிரம் வந்து சேர். நான் இங்கு அதிக நேரம் தங்கியிருப்பதற்கில்லை'' என்றார்.

சாதாரணமாக அவர் ஓரிடத்திலும் மூன்று நாட்களுக்கு மேல் தங்குவது கிடையாது. தக்ஷிணேசுவரத்தில் அவ்வளவு காலம் தங்கக் கூட அவர் உத்தேசிக்கவில்லை. ஆனால் அவருடைய உத்தேசத்தில் என்ன இருந்தது 'அம்மா'வின் உத்தேசம் வேறு விதமாக அல்லவா இருந்தது?

ராமகிருஷ்ணர் வேதாந்த சாதனை மூலம் அத்வைதத்தை அநுபவித்து; தமது உணர்வுகளை மெய்ப்பித்துக் கொள்ள வேண்டும்; அதன் மூலம் அத்வைதத்தின் உண்மையை மீண்டும் உலகுக்கு மெய்ப்பித்துக் காட்ட வேண்டும்; இப்படி அத்வைதத்தைப் பயிலும் போதே பயிற்றுவிக்கும் தோதாபுரிக்குப் பக்தி மார்க்கத்தின் பெருமையை உணர்த்தவேண்டும் என்று மூன்று காரியங்களை அல்லவா அவளுடைய அமிர்தத் திரு உள்ளம் சங்கல்பம் செய்து கொண்டிருந்தது?

பவதாரிணியை உத்தரவு கேட்டார் ராமகிருஷ்ணர்.

மில்க் ஆப் மக்னீஷியா என்பது என்ன?

இது மெக்னீஷியம் ஹைட்ராக்ஸைடின் எமல்ஷன். அமில நாசினியும் மலமிளக்கியுமான இது இரைப்பை சம்பந்தமான (அஜீரணக்) கோளாறுகளின் சிகிச்சையில் ஏராளமாக உபயோகப்படுத்தப்படுகிறது.

மில்க் ஆப் மக்னீஷியாவிற்கு, மெக்னீஷியம் ஹைட்ராக்ஸைட் மிக்ஸ்சர் B.P., மெக்னீஷியா மாக்மா யு. எஸ். பி., க்ரீம் ஆப் மக்னீஷியா B. P. போன்ற பெயர்களும் உண்டு. எப்பெயரால் அழைக்கப்பட்டாலும் இதன் அடிப்படையான பொருள் ஒன்றே. மேலும் ஒரு அங்கீகரமான ஔஷதகரண விதியின் கண்டிதமான நியதிக்கும், பிரமாணத்திற்கும் தக்கபடி இது உற்பத்தி செய்யப்படுகிறது. இது எந்த வர்த்தகப் பெயரில் விற்பனை செய்யப்பட்டாலும் சரி அப்பெயர் தயாரிப்பாளரை சுட்டிக் காட்ட அனுகூலமாகுமே தவிர இதன் தரத்தை உயர்த்தவோ, தாழ்த்தவோ செய்யாது.

இருந்த போதிலும், விற்பனைப் பெயர், வாடிக்கையாளரை பொறுத்த மட்டில் மிகவும் முக்கியம். ஏனென்றால் நன்கு தெரிந்த ஒரு பெயர் அவருக்கு தயாரிப்பாளரின் நம்பகத்தன்மையைப் பற்றி உறுதியளிக்கிறது. இக்காரணத்தினால் தான் கணக்கற்ற வாடிக்கையாளர்கள் அன்றாடம் 'மந்த்' (MandH) மில்க் ஆப் மக்னீஷியாவை வாங்குகிறார்கள். இது யுனைடெட் ஸ்டேட்ஸ் ஔஷதகரண விதிகளின்படி தயாரிக்கப்பட்டு குணத்திற்கும் தரத்திற்கும் நன்கு பரிசீலனை செய்யப்படுகிறது. ஆகையால் இதன் தரமும், தூய்மையும் கேள்விக்கு இடமற்றதாக விளங்குகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, மற்ற எல்லா 'மந்த்' (MandH) தயாரிப்புகளைப் போலவே, மருந்துகள் தயாரிப்பதில் 50 வருடங்களுக்கு மேலாக உள்ள அனுபவத்தின் சிறப்பையும் பெற்றுள்ளது.

மார்ட்டின் & ஹாரிஸ் (பிரை) லிட். ரிஜிஸ்டர்டு ஆபீஸ்: மெர்க்கன்டைல் பில்டிங்ஸ், லால் பஜார், கல்கத்தா-1
பம்பாய் . புது தில்லி . சென்னை

மதியைப் பழிக்கும் முகத்திலிருந்து மதுவைப் பழிக்கும் மொழி வெளிப்பட்டது. ''உனக்காகவேதான் அந்தத் துறவி இங்கு வந்திருக்கிறார். அவரிடம் சாதனைகளைப் பழகு, மகனே!'' என்றாள் தேவி.

தெய்விகத்தில் ஊறியவாறு ராமகிருஷ்ணர் தோதாபுரியிடம் வந்தார். அகமும் முகமும் மலர, அன்னையின் ஆணை கிடைத்துவிட்டது என்று கூறினார். ராமகிருஷ்ணர் சந்நிதிக்குச் சென்று வந்ததைப் பார்த்த தோதாபுரி ''அம்மா'' யார் எனப் புரிந்து கொண்டார்.

'ஐயோ, இந்தப் புனிதக் குழந்தைக்கு இப்படி ஒரு பிரமையா?' என்று வருந்தினார் பக்தி நெறி அறியாத தோதாபுரி.

'அம்பிகை என்பது மாயை அல்லவா? அந்த மாயைதானே அஞ்ஞானத்துக்குக் காரணம்? அஞ்ஞான காரணமாகிய அம்பிகையா ஞானோபதேசம் பெற ஆக்ஞை அளித்தாளாம்?' என்றெண்ணி உள்ளுக்குள் சிரித்துக் கொள்ளவும் செய்தார்.

ஆனால் வருத்தம் சிரிப்பு இரண்டையுமே வெளிக் காட்டிக் கொள்ளவில்லை அவர். 'விட்டுப் பிடிக்கலாம்; பின்னால் இந்தப் பிள்ளையின் பிரமை தீரும்' என்றே 'பெரும் போக்காக' எண்ணினார்.

''முதலில் நீ சந்நியாசம் வாங்கிக் கொள்ள வேண்டுமே!'' என்றார் தோதாபுரி.

ராமகிருஷ்ணர் சிறிது தயங்கினார்.

''என்னைப் பெற்ற அம்மா வருத்தப்படுவாளே! நான் எப்படி சந்நியாசமேற்பது?'' என்றார்.

ஆதி சங்கரர் தமது அன்னைக்காக சந்நியாச தர்மத்தைத் துறந்து கர்மம் செய்தது நினைவு வருகிறதல்லவா? அவர் பல ஆண்டுகள் சந்நியாசியாக இருந்த பின் சிறிது போது துறவுக்குத் துறவு தந்தார். இவரோ சந்நியாசம் பெறு முன்பே அன்னையின் அன்புக்காகத் தயங்கினார்.

''அம்மா கிடக்கட்டும். உன்னைப் பொறுத்த மட்டும் சந்நியாச தீக்ஷை பெற ஆட்சேபணை இல்லை அல்லவா?'' என்று கேட்டார் தோதாபுரி.

''லவலேசமும் இல்லை'' என்று கனிரெனக் கூறினார் ராமகிருஷ்ணர்.

''அப்படியானால் ஏன் யோசிக்கிறாய்? சந்நியாசியான பின்பும் நீ இங்கேயே இருக்கலாம். உன் அம்மாவும் இங்கு உன்னுடனேயே இருந்து விட்டுப் போகட்டுமே'' என்றார்.

ராமகிருஷ்ணர் யோசித்தார்.

> **பஸ் கண்டக்டர் :** இந்தக் காசு செல்லாதம்மா!
>
> **பெண்மணி :** ஏன் செல்லாது? இந்தக் காசு அடிச்சு எத்தனை வருஷமாச்சு? எத்தனை கைமாறியிருக்கு? அத்தனை பேரும் அசடு, நீ மட்டும் சமர்த்தோ? பேசாமல் வாங்கிக்கோ!

''இருந்தாலும் நான் சந்நியாசம் வாங்கிக் கொள்கிற காட்சியை அவளால் தாள முடியாதே'' என்றார்.

''அதனாலென்ன? அவளுக்குத் தெரியாமல் ரகசியமாகச் செய்து விட்டால் போகிறது'' என்றார் தோதாபுரி.

தியாகத் திரு உருவாகிய ராமகிருஷ்ணர் துறவு பூணும் புனித வாய்ப்பை மகிழ்ச்சியுடன் ஏற்றார்.

நல்ல நாள் வருகிற வரை இருவரும் காத்திருந்தார்கள்.

சுப தினம் வந்தது. உலகுக்கெல்லாம் சுபதினமாக அது வந்தது.

யாரும் அறியாமல் ராமகிருஷ்ணரைத் தோப்புக்குள் அழைத்துச் சென்றார் தோதாபுரி. கடைசி கடைசியாகத் தென்புலத்தாருக்கு நீத்தார் கடன் செய்தார் ராமகிருஷ்ணர். முந்தையருக்குச் சிராத்தம் செய்ததோடு தமக்குமே பிண்டம் வைத்து சிராத்தம் செய்து கொண்டார். பாரத தர்மத்தின் தியாக வேள்வி அது.

கர்மாக்கள் முடிந்தன. பிற்பகல் முழுவதும், இரவில் முதல் மூன்று ஜாமங்களிலும் ராமகிருஷ்ணர் ஏராளமாக ஜபங்களைச் செய்து தம் உள்ளக் கோயிலில் தியாகமூர்த்தியை எழுந்தருளச் செய்வதற்காகச் சுத்தமாக்கினார்.

நான்காம் ஜாமம். பிரம்ம முகூர்த்தம் என்ற புனிதமான வேளை.

பஞ்சவடியை அடைந்தார்கள் தோதாபுரியும், ராமகிருஷ்ணரும்.

சந்நியாச தீக்ஷை பூணுமுன் மனசு குவிந்து பிரார்த்தனை மந்திரங்களைக்கூறினார் ராமகிருஷ்ணர்.

''உலகங்கள் என்ற தீக்கனவை அழிக்கின்ற பரம் பொருளே! நான் காணும் இந்தத் தீக் கனவை அழித்தருள்வாயாக! இருமையாக நான் காண்கிற காட்சிகளை அவிப்பாயாக! எனது பிராண சக்திகளையெல்லாம் உனக்கு ஹோமம் செய்கிறேன். என் புலன்களை அடக்கிச் சித்தத்தை உன் பாலே வைக்கிறேன்.... சூரியனும், வாயுவும், நதிகளின் நளிர்மணி நீரும், பயிர் பச்சைகளும் — உன்னால் ஆக்ஞாபிக்கப்பட்ட பிரபஞ்ச வஸ்துக்கள் யாவும் — எனக்கு ஒளி ஊட்டி, உதவி

புரிந்து சத்தியஞானத்துக்கு இட்டுச் செல்லுமாக.''

பஞ்சவடியில் ஒசிந்த காற்று, அந்த மந்திர நாதத்தை ஏந்திச் சென்று புனித கங்கையில் விட்டது. 'கற்றைச் சடை மதி வைத்த துறவி'யின் கற்றைச் சடையிலிருந்து பெருகும் பாகீரதி தேவி தான் பல்லாயிரம் ஆண்டுகளாகக்கண்டு வந்திருக்கும் சந்நியாச பரம்பரையில் ஓர் அற்புத இளவரசு தோன்றப்போகும் மகிழ்ச்சியைச் சலசலவென்று மொழிந்து கொண்டு ஓடினாள்.

அக்கினி வளர்க்கப்பட்டது. விரஜா ஹோமம் செய்தார்கள்.

தோதா புரியின் முதிர்ந்த குரலை அடுத்து ராமகிருஷ்ணரின் கனிந்த குரல் மகா மந்திரங்களை முழங்கிற்று—சூரியனின் ஒளி சந்திரனில் பட்டுக் குளிர்ந்து பொழிவது போல.

''என்னிலுள்ள பஞ்சபூதங்களும் தூய்மை பெறுமாக! ரஜோ குணத்தால் ஏற்படும் தோஷங்கள் நீங்கி நான் ஞானப் பிரகாசத்தின் இயல்பை அடைவேனாக. ஸ்வாஹா!

''என்னிலுள்ள பஞ்சப் பிராணன்களும் தூய்மை பெறுவதாக....ஸ்வாஹா!

''எனது பஞ்ச கோசங்களும் தூய்மை பெறுவதாக.... ஸ்வாஹா!

''ஒலி, ஊறு, உருவம், சுவை, மணம் இவற்றின் வாய்ப்பட்டு எனக்கு ஏற்பட்ட தோஷங்கள் விலகுமாக!... ஸ்வாஹா!

''எனது உள்ளமும், உரையும், உடலும், செயல்களும் சுத்தம் பெறுவதாக .....ஸ்வாஹா!

''குரு பிரான் மொழியும் ஞான வாசகங்கள் என் மனத்தில் மேவுவதற்கு எந்தத் தடையும் ஏற்படாமல் காப்பாய்! என்னைச் சேர்ந்த எல்லாம் தூய்மை அடைவதாக....ஸ்வாஹா!

''பிரம்மமே எனது இயல்பாகப் பெற்ற நான் மனைவி, மக்கள், சொத்து, புகழ், அழகு இவை யாவற்றையும் துறக்கிறேன்... ஸ்வாஹா!''

குழந்தை சாரதை ஜயராம வடிவில் தன்னைக் கணவன் துறப்பதை அறியாமல் உறங்கிக் கொண்டிருந்தது. மந்திரபூர்வமாக இன்று அவளைத் துறந்தாலும் மனப்பூர்வமாக அவளை என்றோ துறந்து விட்டார் அவர். 'துறந்து விட்டார்' என்பதுகூடத் தவறு தான். என்றாவது அவளிடம் பற்று இருந்தால்தானே, பிறகு அதனைத் துறந்ததாகக் கூற முடியும்? சந்நியாசம் வாங்கிக் கொள்ளுமாறு தோதாபுரி கூறியவுடன் அவருக்கு அன்னையின் நினைவுதான் வந்ததே தவிர மனைவியின் ஞாபகமே இல்லையல்லவா? ஆனால் அதிசயம் நிகழப் போகிறது! துறவறம் பூண்ட பின் மனைவியைத் தம்மிடம் அழைத்துக் கொள்ளப் போகிறார் அவர். 'தம்மிடம்' என்றால் பௌதிகமாக அல்ல. தாம் என்பது எதுவோ அந்த ஆத்மாவிடம் அவளை அழைத்துக் கொள்ளப் போகிறார். உலகம் காணாத துறவற இல்லறத்தை நடத்தப் போகிறார்.


இந்த அற்புதங்களை யெல்லாம் முன் கூட்டி அறிந்தாற் போல் அக்கினித் தேவன் பலப் பல கரங்களை எழுப்பிப் பஞ்சவடிக் காற்றில் அவற்றை 'விர் விர்' என்று சுழற்றிச் சுழற்றி ஆனந்த நடனமாடினான்.

அந்தக் கரங்களில் ராமகிருஷ்ணரின் புனித யக்ஞோபவீதம் விழுந்து பஸ்மமாயிற்று. அவரது சிகையும் அக்கினி தேவனுக்கு ஆஹுதியாயிற்று. தேக உணர்வு உள்படச் சகலவிதமான மாசுகளையும் எரித்தாயிற்று என்பதற்குச் சின்னமாகத் தீவண்ணத்தில் திகழும் காஷாய உடையையும் தரித்துவிட்டார் ராமகிருஷ்ணர்.

தோதாபுரியிடம் சந்நியாச தீக்ஷை பெற்று ஜீவப் பிரம்ம ஐக்கியத்தைக் கூறும் மகா மந்திரங்களை உபதேசம் பெற்றார்.

அகப் பயிருக்கு அமிருத தாரை பாய்ந்தது. (தொடரும்)

பிரார்த்தனை



காலையில் எழுந்ததுமே அந்தோனிக்குத் தாங்க முடியாத சோர்வு. திண்ணையில் கோணிப் பையில் முடங்கிக் கொண்டிருந்த அவனுக்கு எழுந்திருக்கவே சிரமமாயிருந்தது. அப்படியே எழுந்தாலும் என்னதான் வேலை இருக்கிறது? வேலைதான் இல்லை. சூடாக டீ, பலகாரம் என்று ஏதாவது கிடைக்குமா? அதுவும் கிடையாது. ஆகையினால் பேசாமல் கண்ணை மூடிப் படுத்திருப்பதே மேலாகப் பட்டது அவனுக்கு.

அவன் மனைவி மேரி வாசலில் 'சளக் சளக்'கென்று தண்ணீர் தெளிக்கும் ஓசை கூட அவனுக்குப் பிடிக்கவில்லை. மேரி வாசலைக் கூட்டிப் பெருக்கிவிட்டுத் திண்ணையில் மூலையில் கோழியை ஒரு பெரிய கூடையால் மூடி யிருந்ததை மெதுவாகத் திறந்து பார்த்தாள்.

''பாழாய்ப் போன கோழி இன்று முட்டை இடவேயில்லை. இரண்டு முட்டையாவது கிடைத்தால் அதை விற்றுக் காலை 'டீ'த் தண்ணியாவது தயார் செய்யலாம் என்று நினைத்தேன். அந்த எண்ணத்திலும் மண்தான்!'' என்று தனக்குள் பேசிக்கொண்டதைக்கூட அந்தோனி கவனித்துக்கொண்டுதான் இருந்தான்.

இளம் வெய்யில் அவன் முகத்தில் பட்டதும் கந்தல் போர்வையால் முகத்தை மூடிக் கொண்டு திரும்பிப் படுத்தான் அந்தோனி. அவன் மனத்தில்ஏதேதோ எண்ண அலைகள் மோதிக் கொண்டிருந்தன. அந்தக் காலத்திலே தகப்பன் பேச்சைக் கேட்டு இரண்டு எழுத்துப் படிச்சிருந்தால் ஏதாவது உத்தியோகம் பார்த்துப் பிழைக்கலாம். படிக்காமல் காலம் வீணாகி விட்டது. தெருவைச் சுற்றிக் காலத்தைப் போக்கிக் கொண்டிருந்தவனிடம் 'சைமன்' பாதிரியார்தான் இந்தச் சவப்பெட்டிசெய்யும் வேலையை ஏற்கும்படி யோசனை சொன்னார். அவன் கையால் எத்தனையோ பெட்டிகள் செய்து இறந்தவர்களுக்கு உறங்க வசதி செய்துவிட்டான். மேரியை மணந்துகொண்டபோதும் குடும்ப பாரம் ஏற்பட்டு இப்படி அவதிப்பட வேண்டி வரும் என்று அவன் நினைக்கவேயில்லை

ஜி.கே.பொன்னம்மாள்




இப்பொழுது நாலு குழந்தைகளுக்குத் தகப்பனாகி விட்டான். மூத்தபெண்ணைப் பக்கத்து ஊரில் தையல் வேலை செய்யும் வின்சென்டுக்கு மணம் முடித்து விட்டான். இரண்டாவது பிள்ளை ஒரு வேலைக்கும் உதவாமல் ஊரைச் சுற்றுவது வேளைக்குச் சோறு தின்பது என்று காலத்தை ஓட்டிக் கொண்டிருந் தான். குடும்பப் பற்றுதலே அவனுக்குக் கிடையாது. மூன்றாவது பிள்ளை ஜோனிதான் வீட்டுக்கும் உழைத் துக்கொண்டு பள்ளியிலும் படித்துக் கொண் டிருந் தான். அந்தோனிக்கு ஜோனியிடம்தான் சற்று நம் பிக்கை. இந்தப் பிள்ளை எப்படியோ படித்து ஒரு வேலையில் அமர்ந்து விட்டால் நம் குடும்பக் கஷ்டம் விடியும் என்று நினைத்துக் கொள்ளுவான்.

ஜோனி காலையில் எழுந்து கோழி முட்டைகளை விற்பது, கடையிலிருந்து பத்திரிகைகளை வீடுகளுக் குக் கொண்டுவந்து போடுவது இப்படி எத்தனையோ வேலைகளைச் செய்து குடும்பத்துக்கு உதவிக் கொண் டிருந்தான்.

வெய்யில் இன்னும் உறைத்தது. இனிமேல் படுத் துக் கொண்டிருக்க முடியாது என்று அந்தோனி மெதுவாக எழுந்து உட்கார்ந்தான். சூடாக ஒரு கோப்பை 'சாயா' அருந்த வேண்டும் என்று தோன் றியது. மனைவியைக் கேட்கவே பயம். இரவே யாரும் சாப்பிடவில்லை. இந்த லட்சணத்தில் டீத்தண்ணீருக்கு எங்கே போவது? அந்தோனியின் பார்வை எதிர்ப் பக்கம் திரும்பியது. நேற்றிரவு செய்து முடித்திருந்த சவப்பெட்டியில் ஆணி அடித்து அதை மெருகேற்றி அழகு செய்துகொண் டிருந்தான் ஜோனி. தகப்பன் கவனிப்பதைக் கண்டதும், ''இந்தப் பெட்டி வேலை எல்லாம் முடிந்து விட்டது அப்பா. இதன் வேலைப் பாடு மிக அழகாக இருக்கிறது. இந்தப் பெட்டி கண்டிப்பாக ஐம்பது ரூபாய்க்குப் போகும்'' என்றான் மகிழ்ச்சியுடன். 'உம்' என்று சுரத்தில்லாமல் முன கினான் அந்தோனி.

இப்பொழுதெல்லாம் ஊரில் அதிகமாக மரணம் ஏற்படுவது இல்லை என்றுதான் அந்தோனிக்குத் தோன்றியது. மூன்று பெட்டிகள் செய்து வைத்துப் பதினைந்து நாட்கள் ஆயிற்று. ஒன்றுகூட விலை போக வில்லை. 'எங்கு பார்த்தாலும் அவனுக்குக் குழந்தை பிறந்திருக்கிறது; இவனுக்குக் குழந்தை பிறந்திருக் கிறது' என்று பேசிக் கொள்கிறார்களே தவிர 'இறந்துவிட்டான்' என்ற செதி கேட்கவே முடிய வில்லையே. இறப்பில் தானே இருக்கிறது நம் பிழைப்பு — இப்படியெல் லாம் ஓடியது அவன் சிந்தனை.

செம்பில் தண்ணீரை 'டொக்' கென்று அவன் அருகே வைத்துவிட்டு, ''ஏன் இப் படியே உட்கார்ந்துவிட்டீர்கள்? முகம் கழுவிக்கொண்டு வெளியே போய் ஏதாவது பணத்துக்கு வழி பாருங்கள். இன்று ஜோனிக்குப் பள்ளிக்கூடச் சம்பளம் கட்டவேண்டும். இரவு மருமகப்பிள்ளை வேறு வருகிறேன் என்று சொல்லியிருக்கிறார். அவர் போன தடவை வந்தபோதே நாம் சரியாகக் கவனித்து உபசரிக்கவில்லை என்று குறைப்பட்டுக் கொண்டா ராம். 'வெறும் சோறும் கறியும் போட்டு அனுப்பினார்கள். என்னை மாப்பிள்ளை என்று மதித்தார்களா?' என்றாராம். பக்கத்துத் தெருக் கமலம் சொன்னாள். எனக்கு நாக் கைப் பிடுங்கிக் கொள்ளலாம் போலிருந்தது. இந் தத் தடவையாவது பேச்சுக்கு இடம் கொடுக்காமல் மாமி யார் வீட்டுக்கு வரும் பிள்ளைக்கு இரண்டு கறி, கூட்டு, இத் திப்பு என்று பண் ணிப் போட வேண் டும். வீட்டில் ஒரு மணி அரிசி கிடை யாது. நேற்று இரவு பட்டினி. இனிமேல் எனக்குப் பட்டினி கிடக்க உடம்பில் தெம்பில்லை'' என் றாள் மேரி. இதைப் பேசும்போது அவள் கண்ணில் நீர் நிறைந் திருப்பதாக அந் தோனிக்குத் தோன் றியது. ''இன்னிக்கு





"கூர்க்கா சம்பளம் வாங்க மூன்று நாளா நகராமல் இங்கே சத்தியாக்கிரகம் செய்யறான்!"

"நல்லது. சத்தியாக்கிரகம் முடியும் வரையில் திருடர்கள் இங்கே வர மாட்டார்கள்!"

எப்படியும் ஒரு பெட்டி விலை போய் விட்டால் கவலை இல்லை. எதற்கும் நான் மாதா கோயில் வரை போய்விட்டு வருகிறேன்" என்றபடி குளிர்ந்த நீரால் முகத்தைக் கழுவிக் கொண்டான்.

துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு தெருவில் இறங்கி நடந்தான். பக்கத்து வீட்டு வேலு சாயாக் கடையில் உட்கார்ந்து, டீ, புட்டு, வடை, இட்டிலி என்று ஒரு கை பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்கு ஜட்கா வண்டி ஓட்டும் வேலை. கையில் தாராளமாகக் காசு புரளுகிறது. பஸ் ஸ்டாண்டுக்கும் ரயில்வே ஸ்டேஷனுக்குமாக இரண்டு தடவை போவதற்குள் வேலுவின் கையில் முழுசாக நாலு ரூபாய் சேர்ந்துவிடும். நல்ல தொழில். இறந்தபின் உபயோகப்படும் சவப் பெட்டி செய்யும் தொழிலைவிட உயிருள்ளவர்களுக்குத் தொண்டு செய்யும் வண்டி ஓட்டும் பிழைப்பே மேலாகத் தோன்றியது அந்தோனிக்கு. எத்தனைதான் சாயாக் கடைப் பக்கம் திரும்பக் கூடாது என்று மனத்தைக் கட்டுப்படுத்தியும், அவன் உத்தரவைக் கேட்காமல், கண்கள் டீக் கடைப் பக்கம் திரும்பின. கண்ணாடி டம்ளரில் நுரையும் பதையுமாக மணத்தைப் பரப்பிக் கொண்டிருக்கும் டீயில்தான் குறிப்பாக அவன் கண்கள் நிலைத்தன. அவனைக் கவனித்த வேலு "அடேடே! அந்தோனி அண்ணே வாங்க!" என்று குரல் கொடுத்தான். கையில் காசில்லாமல் டீக் கடையில் நுழைய அந்தோனி இஷ்டப்படவில்லை. ஆகையினால் அவசரமாக, "பெட்டிக்கு ஆணி வாங்க வேண்டும். பிறகு வருகிறேன்" என்று நழுவப் பார்த்தான். "என்ன அண்ணே இத்தனை அவசரம்? ஏதாவது அவசரக் கிராக்கியா? வந்து ஒரு டீ சாப்பிட்டு விட்டுப் போங்களேன்" என்று அழைத்தான் வேலு. அந்தோனியின் கால்கள் அவனை அறியாமலே டீக்கடையை நோக்கி நகர்ந்தன. "ஒண்ணுமில்லே. சில்லறை இல்லே; காலை வேளையிலே கடன் கேட்க வேண்டாமே என்றுதான்" என்றபடியே வேலுவின் அருகில் வந்து உட்கார்ந்தான். "சில்லறையைப் பத்தி என்ன அண்ணே? எங்கிட்ட இருக்கு. நீங்க டீ சாப்பிடுங்க. உண்மையைச் சொன்னால் நம்ம பெரிய பண்ணையார் நோய்வாய்ப் பட்டுப் படுத்ததிலிருந்து எனக்கு நல்ல வரும்படிதான். தினசரி வெளியூரிலிருந்து சொந்தக்காரங்களும், நண்பர்களும் வருவதும் போவதுமாக இருக்காங்க. பஸ் ஸ்டாண்டு, ரயில்வே ஸ்டேஷன் என்று நம்ப வண்டி ஓடுது. நல்ல வரும்படி. கடவுள் புண்ணியத்திலே பண்ணையார் இன்னும் இரண்டு மாதம்கூடப் படுக்கையிலே இருந்தா எனக்கு வரும்படி வரும். அவர் உயிர் போகாமல் கடவுள்தான் பார்த்துக்கணும்" என்றான் வேலு.

அந்தோனிக்கு எரிச்சலாக வந்தது. பண்ணையாருக்கு எழுபது வயது. பிள்ளை பெண் குடும்பம் என்று சுகபோகத்தில் இத்தனை நாட்கள் வாழ்ந்தாச்சு. படுத்த படுக்கையாகி இரண்டு மாதமாகிறது. உள்ளூர் டாக்டர்கள் அநேகமாகக் கைவிட்டுவிட்டார்கள். இருந்தாலும் வெளி ஊரிலிருந்து டாக்டர்களை வரவழைத்துப் பண்ணையாரின் பெண்களும், பிள்ளைகளும், அவர் உயிரைக் காப்பாற்ற முயற்சி செய்துகொண்டிருந்தார்கள். கர்த்தர் அருள் புரிந்து பண்ணையார் இன்று இறந்துவிட வேண்டும். அப்படியானால் ஒரு சவப் பெட்டியை இன்று நல்ல விலைக்கு விற்றுவிடலாம். அவர்கள் என்ன தொகை கேட்டாலும் கொடுத்துவிடுவார்கள். நாம் இப்படி நினைக்கையில் இந்த வேலு அவர் இன்னும் இரண்டு மாதமாவது இருக்க வேண்டும் என்று எண்ணுகிறானே என்று நினைத்தான் அந்தோனி.

சாயாக் கடை கருணாகரன் திடீரென்று ஒரு விஷயத்தைச் சொன்னான். "நேற்று டிரைவர் ஜோஸப், காரை ஒரு மரத்தின் மேல் மோதிவிட்டானாம். அவனுக்கு நல்ல அடி. பிழைப்பது சிரமம் என்றுதான் சொல்லுகிறார்கள். பாவம். ஆறு குழந்தைகளும் மனைவியும் அவனை நம்பியிருக்கிறார்கள். அவன் பிழைக்க வேண்டுமே?" என்றான்.

அந்தோனி சாயாக் கிளாஸைக் கீழே வைத்து விட்டு நிமிர்ந்தான். டிரைவர் ஜோஸப் சாதாரண மனிதன்தான். பணக்காரன் அல்ல. அவன் இறந்துவிட்டால் அவனுக்கு விலை உயர்ந்த சவப் பெட்டி தேவைப்படாது. சாதாரணப் பெட்டியே போதும். பதினைந்து ரூபாயாவது தேறும். முதலில் ஜோலிக்குச் சம்பளம் கட்டவேண்டும். மருமகப் பிள்ளைக்குக் கோழிக் கறி, ஆட்டு சூப்பு என்று சாப்பாடு போட வேண்டும். இப்படியெல்லாம். ஓடியது சிந்தனை. வேலு எழுந்து விட்டான். அந்தோனியும் தெருவில் இறங்கி நடந்தான். பண்ணையார் வீட்டு வாசலைத் தாண்டிக் கொண்டிருந்தான். மாதா கோவிலுக்குப் போகவேண்டியிருந்தது. பண்ணையார் வீட்டு வாசலில் இரண்டு மூன்று கார்கள் நின்றுகொண்டிருந்தன. டாக்டர்கள் வருவதும் போவதுமாக இருந்தார்கள். சென்னையிலிருந்து பெரிய டாக்டர் விமானத்தில் வந்திருக்கிறாராம்.



கல்கத்தா, கலிங்கா ட்யூப்ஸ் லிமிடெட்டின் ஏஜெண்டான ஸ்ரீ எம். வி. சுப்பிரமணியம் அவர்களின் குமாரி சௌபாக்கியவதி 'துர்க்காலக்ஷ்மிக்கும், மதுரை தியாகராஜா காலேஜ் ஆப் என்ஜினியரிங் பிரின்ஸிபாலான ஆர். நடேசய்யர் அவர்களின் குமாரன் என். சீனிவாசன் பி. ஈ.க்கும், மவுண்ட்ரோடு, 'அபட்ஸ்பரி' மாளிகையில் சமீபத்தில் திருமணம் அதி விமரிசையாக நடந்தேறியது.

வாழ்க, மணமக்கள் !



பிராஸோவினால்
அதிகப் பிரகாசம்
பிரகாசமுள்ள பித்தளைச்
சாமான் உங்கள்
அறையின் அலங்காரத்தை
அதிகரிக்கச் செய்கிறது—
அறைக்கு ஒளி மிகுந்த
தோற்றத்தை அளிக்கிறது.
உங்கள் பித்தளைச்
சாமான் பளபளக்கும்
ஒளிபடவிருப்பதற்கு,
அதனைத் தவறுமல் பிராஸோ
கொண்டு மெருகிடுவதே
சந்தேகமற்ற வழியாகும்.
உபயோகிக்க சுலபமான
உங்கள் பித்தளைச் சாமான்களை
பிராஸோவினால்
வாரத்திற்கு ஒரு முறை
ஒவ்வொரு வாரமும் மெருகிடுங்கள்
அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட் இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது
BRASSO

பணக்கார உயிரை அத்தனை சுலபமாக விட இந்த டாக்டர்கள் அனுமதிக்க மாட்டார்கள் போலிருக்கிறது என்று நினைத்துச் சிரித்துக் கொண்டான் அந்தோனி. இன்று அவர் இறந்துவிட்டால் நமக்கு அதிர்ஷ்டம். வீணாக இன்றையச் செலவுக்கு யாரிடமும் கடன் கேட்க வேண்டாம் என்றெல்லாம் எண்ணங்கள் ஓடின அவன் மனத்தில்.

யாரிடமாவது ஐந்து ரூபாய் கடன் கேட்க வேண்டும். யாரைக் கேட்கலாம் என்றுதான் அவனுக்குத் தெரியவில்லை. தெருவில் எல்லோரும் அவரவர்கள் வேலையாக வருவதும் போவதுமாக இருந்தார்கள். யாரும் அந்தோனியைக் கவனிக்கவில்லை. நடந்து நடந்து அந்தோனி மாதாகோயில் வாசலுக்கே வந்து விட்டான். சைமன் பாதிரியாரைப் பார்த்துப் பணம் கேட்டால் அவர் உதவாமல் இருக்க மாட்டார் என்ற நம்பிக்கையில் மாதா கோவிலுக்குள் நுழைந்தான். பாதிரியாரின் வேலையாள் தோட்டத்துச் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக்கொண்டிருந்தான். அவனிடம் பாதிரியாரைப் பார்க்க வேண்டும் என்றான் அந்தோனி. பாதிரியார் வெளியே போயிருக்கிறார். பகல் சாப்பாட்டுக்குத்தான் வருவார் என்று பதில் வந்தது. அந்தோனிக்கு ஒன்றுமே புரியவில்லை. கையில் காசில்லாமல் எப்படி வீட்டுக்குப் போவது? அதை நினைக்கவே முடியவில்லை. எதிரே கருணை ததும்பும் கருத்துடன் ஏசுநாதரின் படம் இருந்தது. ''கர்த்தரே! இன்று இந்த ஊரில் யாராவது ஒருவர் இறந்துதான் ஆகவேண்டும். ஒரு பெட்டிக்காவது தேவை வரவேண்டும். இதுதான் என் பிரார்த்தனை'' என்றபடியே வணங்கி விட்டு வீட்டை நோக்கி நடந்தான். அந்தோனிக்கு மனத்தில் ஒரு தெம்பு பிறந்தது. கர்த்தர் நம் வேண்டுகோளை எப்படியும் நிறைவேற்றிவிடுவார். பண்ணையார் அல்லது ஜோஸப் யாராவது இறந்துவிடுவார்கள். இந்த நினைப்பில் நடையை எட்டிப் போட்டான்.

அந்தோனி வீட்டு வாசலில் ஒரே கூட்டம். அந்தோனிக்குப் புரிந்து விட்டது. யாரோ இறந்து விட்டார்கள். ஒரு பெட்டிக்குச் செலவு வந்து விட்டது. கர்த்தர் நம் பிரார்த்தனையை ஏற்றுக் கொண்டு விட்டார். கடவுளே! நின் கருணையே கருணை!

வீட்டு வாசலை மிதித்ததும் அவன் மனைவி புரண்டு அழுது கொண்டிருந்ததுதான் அவனுக்குப் புரியாத புதிராக இருந்தது. அவனைக் கண்டதும் அவன் மனைவி ''ஐயையோ! பாருங்களேன் இந்த அநியாயத்தை! குழந்தை ஜோனி பக்கத்துக் கடையிலிருந்து பசிக்குப் பழம் வாங்கி வருகிறேன் என்று ஓடினான். பாழாய்ப் போகிற பஸ் மோதி இறந்து விட்டான். என் பிள்ளையைப் பறிகொடுக்க நான் என்ன பாவம் செய்தேன்?'' என்று வயிற்றில் அறைந்துகொண்டு அழுதாள். அந்தோனிக்கு யாரோ சாட்டையால் அடிப்பது போலிருந்தது. மீளா நித்திரையிலிருக்கும் தன் அருமை மகன் சடலத்தை ஒரு கணம் பார்த்தான். மறு கணம் எதிரிலிருக்கும் சவப் பெட்டியையும் பார்த்தான். மறு கணம் கர்த்தர் படத்தருகே சென்று கண்ணீர் வழிய, ''பரம பிதாவே! நான் பாவி. மகா பாவி. நான் தப்பாகப் பிரார்த்தனை செய்துவிட்டேன். எனக்கு உணவு வேண்டும் என்று கேட்கலாமே தவிர, இன்று யாராவது சாக வேண்டும்; அவன் சாகக் கூடாதா, இவன் சாகக் கூடாதா என்று நான் ஆசைப்பட்டிருக்கவே கூடாது. அவனவன் தொழிலைச் செய்ய வேண்டுமே தவிர, பலன் தரவேண்டியது இறைவன் செயல். இதை நான் மறந்து விட்டேன். இனிமேல் நான் இந்த மாதிரி உன்னிடம் கேட்க மாட்டேன். நான் கேட்ட வரம் தந்து நீ எனக்குப் பாடம் புகட்டி விட்டாய்'' என்று குனிந்து மண்டியிட்டான். ●

சாப்பிடுவது எப்படி ?

அது ஒரு நாட்டுப்புறத்து ஹோட்டல்; சிறிய ஹோட்டல். பெரிய ஆசாமி ஒருவர் நுழைந்தார். அவர் ஆகிருதியும், அவர் அணிந்திருந்த ஆடைகளும், அவர் வளர்த்திருந்த மீசையும் அவரைப் பெரிய மனிதராக மட்டுமல்ல; பெரும் பயில்வானாகவே இனம் காட்டிக் கொடுத்தன.

அவர் எந்த மேஜையில் உட்காரப் போகிறார் என்பதைக் கவனித்துக் கொண்டிருந்த சர்வர், அவர் உட்கார்ந்ததும் ஓடோடிச் சென்று ''என்ன தரட்டும்?'' என்று பணிவாகக் கேட்டான்.

''இரண்டு இட்லி சாம்பார்!''

அவர் கேட்ட பொருள் அடுத்த சில நொடிகளில் அவர் மேஜைக்கு வந்தது.

ஒரு முறை அதை முறைத்துப் பார்த்த அவர், ''இதை எப்படி ஐயா ஒருத்தன் சாப்பிடுவான்?'' என்று கடிந்தார்.

சர்வருக்கு உடல் வெட வெடத்தது. என்ன சார் தவறு நேர்ந்துவிட்டது? வேண்டுமானால் இட்லி சாம்பார் செய்தவரையே அழைத்து வருகிறேன்!'' என்று சொல்லி உள்ளே ஓடினான்.

அடுத்த கணம் வேர்வை வழியும் முகத்துடனும் கரிப் புகை படிந்த வேட்டியுடனும் காட்சி அளித்தார் பரிசாரகர்.

அவரைப் பார்த்து அந்தப் பெரிய மனிதர் அதே கேள்வியைக் கேட்டார்: ''இதை எப்படி ஐயா ஒருத்தன் சாப்பிடுவான்?''

கல்லாவில் உட்கார்ந்திருந்த முதலாளியையும் கிலி பற்றிக் கொள்ளவே இறங்கி வந்தார். பவ்யமாகப் பெரிய மனிதர் அருகில் சென்று, ''இந்த இட்லி வேண்டாமென்றால் வேறு கொண்டு வரச் சொல்கிறேன். கோபித்துக்கொள்ளக் கூடாது!'' என்றார்.

''உம்ம இட்லியை இங்கே யாரையா குறை சொன்னான்? இட்லி சாம்பார் சாப்பிடுவதென்றால் ஒரு ஸ்பூன் வேண்டாமா? இதை எப்படி ஐயா ஒருத்தன் சாப்பிடுவான்? ஓடிப்போய் ஒரு ஸ்பூன் கொண்டு வாரும் ஐயா!'' என்றார் பெரிய மனிதர் சிறிதும் மிடுக்குக் குறையாமல். — அக்ஷயம்




ஊ ஊஹ... ஊஊஹ

ஒரு டீஸ்பூன் அளவு உட்வார்ட்ஸ் 'கிரைப் வாட்டர்', உங்கள் குழந்தை அலறுவதை நிறுத்திவிட்டு ஆனந்தக் கனவு காண ஆரம்பித்து விடுகிறது. குழந்தையின் சிறு கோளாறுகள்—வயிற்றில் வாயுக் கோளாறு, பல்வலி போன்றவைகளிலிருந்து சுகம்பெற உட்வர்ட்ஸினால் மட்டும்தான் முடியும். ஒரு நூற்றாண்டுக்கு மேலாக, தாய்மார்கள் உட்வர்ட்ஸ் உபயோகித்திருக்கிறார்கள். நல்ல ஆரோக்கியமான குழந்தைகளை வளர்த்திருக்கிறார்கள்.

உட்வர்ட்ஸ் 'கிரைப் வாட்டர்'

100 வருஷங்களுக்கு மேலாக உலகெங்கிலும் உபயோகிக்கப்படுகிறது.



அங்கீகரிக்கப்பட்ட ஏஜெண்டுகள்: ஹெர்பர்ட்ஸன்ஸ் லிட். பம்பாய், கல்கத்தா & லக்னோ • டி. டி. கிருஷ்ணமாச்சாரி & கோ. மதராஸ் • எம். ஜி. ஷஹானி & கோ. (டில்லி) பிரைவேட் லிட்., டில்லி.

Alvars AT 341-TM.

சங்கீத ரத்னாகர, சங்கீத கலாநிதி ஸ்ரீ அரியக்குடி ராமானுஜ அய்யங்கார் அவர்களுடைய இசை வாழ்வின் பொன்விழா இம்மாதம் 28ந் தேதி விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. சென்னை ராஜாஜி ஹாலில் மைசூர் மகாராஜா அவர்களின் தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் பல பெருமக்கள் இசை உலக ஞாம்பவானுக்குத் தங்கள் புகழ்மாலையைச் சூட்டுவர். இதோ நாமும் கலைத் திறனாய்வில் சிறந்த ஒருவரின் புகழ்மாலையை வித்வானுக்கு அணிவிக்கிறோம்.

முக்காலத்துக்கும் ஒரு வித்வான்

டாக்டர் நாராயண மேனன்

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக மேடைக் கச்சேரி செய்து வரும் அரியக்குடி ஸ்ரீ ராமானுஜ அய்யங்கார் அவர்களுக்கு இவ்வாண்டு எழுபத்து மூன்றாவது பிராயம் நிறைந்து விட்டது. இவரது வாழ்க்கையில் இது ஒரு மைல் கல்தான். இன்னும் பல மைல்கள் அவர் முன் இருக்கின்றன. ஏனெனில் அவர் எழுபத்து மூன்று வயது விருத்தர் அல்ல. எழுபத்து மூன்று வயதுப் பாலரேயாவார்.

''எழுபதாண்டுகள் நான் வாழ்ந்தேன். மனிதனாகவும் பாலனாகவும் வாழ்ந்தேன். ஆனால் ஆனந்தத்தில் நான் நர்த்தனம் செய்ததில்லை'' என்று யேட்ஸ் பாடுகிறார். ராமானுஜ அய்யங்கார் அவர்களும் எழுபது ஆண்டுகளுக்கு மேலாக மனிதனாகவும், பாலனாகவும் வாழ்ந்திருக்கிறார்; ஆனால், ஆனந்தத்தில் நர்த்தனம் செய்திருக்கிறார், செய்கிறார்.

இவரைவிட நீண்ட ஆயுளுள்ள வித்வான்கள், நம் கலை வாழ்க்கையைச் செழிக்கச் செய்த வித்வான்கள், பலர் உண்டு. ஆனால் இவரைப் போல இவ்வளவு நீண்ட காலத்துக்கு இடைவிடுதலின்றி மேடையில் பிரதானமாக விளங்கும் இன்னொருவரை நான் அறிந்ததில்லை.

ஐம்பது ஆண்டுகள்! இரண்டு தலைமுறைக் காலம்! அரியக்குடி அவர்களின் இசைவாழ்வு நம்மைச் சென்ற காலத்துடன் பிணைக்கிறது; நிகழ்காலத்தைக் காத்துப் போஷிக்கிறது; எதிர் காலத்துக்கு வழி காட்டுகிறது. முக்காலத்தையும் தொடர்புறுத்தும் வித்வான் இவர். சங்கீதத் தொடுவானில் சென்ற ஐம்பதாண்டுகளில் நிகழ்ந்ததையெல்லாம் நினைத்துப் பாருங்கள். பெண்களின் உடை அலங்காரம் போல் இசைப் பாணி பல மாறுதல்கள் கண்டிருக்கிறது. புகழைச் செய்தவர்களும் இழந்தவர்களும் எவ்வளவோ பேர். எரி நட்சத்திரம் போல் ஒளிர்ந்துவிட்டுத் தங்களுக்குரிய நிலையை அடைந்தவர்; ஒரேயடியாக அஸ்தமித்தவர்களும் உண்டு. இவர்களுக்கிடையே ராமானுஜ அய்யங்கார் உழைத்தார்; பாடினார். தளர்ச்சியின்றிப் பாடினார். அவ்வப்பொழுது இருந்த பாணிக்குச் சற்றே விலகிப் பாடினார். கண்ணை உறுத்திக் கொண்டு தெரியாமலே, நாடக மேடைப் பரபரப்பு இல்லாமலே தமது தனி வழியில் கர்நாடக சம்பிரதாயத்தைப் பலப்படுத்தினார். நம்முடைய இசை உலக எல்லையை விஸ்தரித்தார்.

தமிழகத்தில் ராமநாதபுரம் மாவட்டத்தில் அரியக்குடி கிராமத்தில் திருவேங்கடம் ஐயங்கார் என்ற ஜோதிஷருக்கும், அவரது பாரியாள் செல்லம்மாளுக்கும் மூன்றாவது மகவாக 1890 மே 19ந் தேதி பிறந்தார் ஸ்ரீ ராமானுஜ அய்யங்கார். ஆரம்ப காலத்தில் புதுக்கோட்டை மலையப்ப அய்யரிடமும் பிறகு புகழ் பெற்ற பல்லவி வித்வானாகிய நாமக்கல் நரசிங்க அய்யங்காரிடமும் சங்கீத சிக்ஷை பெற்றார். எனினும் இவரது சங்கீத சிந்தனைக்கு உருக் கொடுத்தவர் ராமநாதபுரம் பூச்சி ஸ்ரீநிவாச அய்யங்கார் அவர்களே. தமது கற்பனையால் இசையில் புது அழகுகளைக் கண்டு வெளியிட்ட கலைஞர் அவர். அவருடைய அந்தப் புதுமை செய்யும் திறனை அவரது பிரசித்தி பெற்ற மாணாக்கரும் பெருமளவில் பெற்றுவிட்டார்.



இசைத் தொழிலை இளம் வயதிலேயே ஸ்ரீ ராமானுஜ அய்யங்கார் தொடங்கி விட்டார். 1920–30ம் ஆண்டுகளிலேயே அவர் அந்நாள் முதல்தர வித்வான்களிடையே இடம் பெற்றார். என்றாலும் அவர் ஒரே பாய்ச்சலில் புகழ் ஏணியின் உச்சியை அடைந்தவர் அல்ல. தமது நூதனமான உத்திகளால் பழைய வித்வான்களை ஒரேயடியாக மங்கச் செய்து ரசிகர்களைத் தம்மிடம் திருப்பிக் கொண்டவரல்ல அவர். மரபுக்குச் சற்றும் விரோதமில்லாமல் — பழைமைவாதி என்று கூடச் சொல்லும்படி — தான் அவர் இளம் பாடகராக இருந்த போதும் பாடி வந்தார்.

ஆனால் பழைமையில் உள்ள பெருமைகளைப் பேணி அவற்றை இயல்பான முறையில் புஷ்பிக்கச் செய்த பழைமைவாதி அவர். ஸ்ரீ ராமாநுஜ அய்யங்கார் மரபுக்கொவ்வியமுறையிலேயே சென்று புதுமைகள் கண்டவராவார்.

★

நான் முதன் முதலில் முப்பதாண்டுகளுக்கு முன் திருவனந்தபுரத்தில் அய்யங்காருடைய கச்சேரியைக் கேட்டது இன்னும் என் நினைவில் பசுமையாக உள்ளது. அன்றைக்கு இருந்ததற்கு ஒரு மாறுதலும் இன்றித்தான் இன்றும் ஸ்ரீ அய்யங்கார் பாடுகிறார் என்று பலர் சொல்லுகிறார்கள். இது எவ்வளவு தவறு? மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் அமைப்பு ஒன்றாகவே தோன்றும். சங்கதிகள் சற்றும் மாறவில்லை என்ற மயக்கம் ஏற்படும். ஆனால் ஆழ்ந்து கவனித்தால், இப்போது சங்கீதத்தின் இடத்தைப் 'பக்குவம்' என்பது பெற்றுள்ளதும் விதிமுறைகள் பாணியிலேயே கரைந்திருப்பதும் தெரியும். நாதஒலித் சாயல்களும் நுட்பமானதோர் அழகுகளின் வரிசையாகத் தாரதம்மியப்படுத்தப் பட்டிருக்கின்றன. முன்பு இசைச் சிறப்புக்களை அறிந்திருந்தவர் இப்போது அறிந்திருப்பதன் பயனை அடைந்து விட்டார். இந்த மாறுதல்கள் வெளிப்படையாகத் தெரிவனவல்ல. எனவேதான் சிலர் அய்யங்காரின் பாட்டில் புதிதாக எதுவும் இல்லை என்று கூறுகிறார்கள். அப்படி அவர்கள் கூறும்போது நான் 'அது அவருடைய குறைபாடில்லை; உங்களுடைய குறைபாடுதான்' என்கிறேன்.

குருவாகவும், இசை அமைப்பாளராகவும் ஸ்ரீ அய்யங்கார் சிறந்து விளங்கினாலும் கச்சேரி மேடைதான் அவரது இயல்பான இடம். கச்சேரியே அவரது உடனுடன் வாய்த்த தொழில். அவருடைய தன்னம்பிக்கை அபாரமானது. சபையோரின் எண்ணங்களை அறிந்து உடனுக்குடன் அதற்கேற்பப் பிரதிபலிப்பை உண்டாக்குபவர் அவர். அவருக்குத் தொண்டையைக் கட்டிக்கொண்டால் அதற்குத் தோதுப்படுமாறு தமது நிகழ்ச்சியை அமைத்துக் கொள்வார். பிரதிகூல சந்தர்ப்பங்களிலேயே ஓர் அநுகூலத்தைச் சிருஷ்டித்துக் கொள்பவர் அவர். பக்க வாத்தியம் சரியாக அமையாவிட்டால், அவர்களைப் பத்திரமாகத் தம்முடனேயே அழைத்துச் சென்று, அநுசரணையாக உடன் வாசிக்கும் லலித கலையில் அவர்களுக்கும் போதனை அளித்துவிடுவார். கைதேர்ந்த பக்கவாத்தியக் காரர்கள் இருந்தாலோ கேட்க வேண்டாம். ஒரே அல்லோலகல்லோலம்தான்!

ஸ்ரீ அய்யங்கார் அபூர்வ ராகங்களை மிகவும் அபூர்வமாகத்தான் பாடுவார். கர்நாடக சம்பிரதாயத்தை விளக்குவதே அவரது கச்சேரியின் நோக்கம். அபூர்வ ராகங்கள் பாட எளிதானவை. அவற்றைப் பாடுவது பெரும்பாலும் ஆரோஹண அவரோஹண ஸ்வரங்களுக்குள் அகப்பட்டுக்கொண்டு செய்யும் சுசரத்துத்தான். சம்பிரதாயத்தில் ஊறி வந்த காம்போதி, தோடி போன்ற ராகங்கள் தான் வித்வானின் திறமையைப் பரீட்சிப்பவை. ஸ்ரீ அய்யங்கார் அவர்கள் ஆலாபனையிலும் சரி, ஸ்வரப் பிரஸ்தாரத்திலும் சரி, அளவு படுத்திப் பாடுவதிலும் கட்டுக்கோப்பாக விதிதாசாரம் செய்வதிலும் அதி நுண்ணிய ஆற்றல் பெற்றவர். சாரமான எல்லாம் அவற்றில் இருக்கும். அவசியமில்லாத அம்சங்கள் எதுவும் இரா. வேண்டாத சரக்கைத் திணித்து 'உப்ப'ச் செய்கிற காரியம் அய்யங்காரிடம் கிடையவே கிடையாது. ஒரு கச்சேரிக்கான ராகங்கள், கிருதிகள் இவற்றைத் தேர்ந்தெடுப்பதிலும், ராக தாளங்கள் மாறி மாறி வருமாறு அமைப்பதிலும், சௌக்க காலம் மத்திம காலம் இவற்றில் ஒன்றை மற்றது தூக்கிக் காட்டுமாறு தராதரம் பிரிப்பதிலும் அப்பழுக்குச் சொல்லமுடியாத திறன் படைத்தவர் ஸ்ரீ அய்யங்கார். மத்திம காலம் தான் அவரது கோட்டை. அவர் மிகவும் அநாயாசமாகச் சஞ்சரிப்பது அதில்தான்.

இசைச் சிறப்புக்கள் ஒரு புறம் இருக்க, ஸ்ரீ அய்யங்கார் மக்களையும், சூழ்நிலைகளையும் மிகவும் சாதுரியமாகக் கவனிக்கத் தெரிந்தவர். லௌகிக ஞானத்துடன் நடைமுறைகளைக் கவனிப்பவர். அவர் தமது கற்பனை மேகங்களிடையே தலையைப் புதைத்துக் கொண்டு அடைபட்டிருப்பவர் அல்ல.

ஸ்ரீ ராமாநுஜ அய்யங்காரைப் பற்றி ஒரு வாக்கியத்தில் கூற வேண்டுமானால் அவரை நமது காலத்தில் மேடையில் பிரகாசிக்கும் பெரும் வித்துவான்களில் ஒருவர் என்பேன். 'இதென்ன மதிப்பீடு? எல்லாருக்கும் தெரிந்த உண்மைதானே இது?' என நீங்கள் எண்ணலாம். ஆனால் நானோ, உண்மையிலேயே பெரியவராக இருந்துகொண்டு மேடையில் பிரகாசிப்பவர்கள் வெகு சொற்பமே எனக் கருதுகிறேன். 'பெரியவர்' என்று சொல்லும்போது உண்மையான பெருமையை நான் குறிப்பிடுகிறேன்.

அரியக்குடி அவர்களை நான் 'ஜீனியஸ்' என்று சொல்ல மாட்டேன். ஏனெனில் 'ஜீனியஸ்' என்பவரைப் பகுத்துப் பார்க்க முடியாது. அவர் எப்படிச் செயல்படுவார் என்று நிர்ணயிக்க முடியாது. ஜீனியஸிடம் ஒழுங்குபடுத்தப்பட்ட அழகை எதிர்பார்க்க முடியாது. அய்யங்கார் ஜீனியஸ் அல்ல. அவரது இசையின் குணங்களை, அவர் இசையை எப்படி அப்பியசிக்கிறார் என்பதன் இயல்பை, அவருடைய நிறைகளை, குறைகளை எல்லாம் நாம் அலசிப் பார்க்க முடியும். அவருக்குச் சரியான ஸ்தானம் நிர்ணயிக்க முடியும். அப்படி அவருக்கோரிடம் அளித்துப் பார்க்கும் போதே அவரது பெருமை துல்லியமாக வெளிப்பட்டு நிற்கிறது. அவரது வாழ்வும், மேடையில் அவர் எய்திய சாதனையும் இளம் பாடகர்களுக்கு ஓர் அபூர்வ உதாரணமாகும். அவர் நிலைநாட்டியுள்ள தரத்தை அவர்களும் அடைய முயல வேண்டும் — ஆனால் அவருக்குச் சமதையாவதற்கு முயலாமல்தான்.

பொன் விலங்கு

அத்தியாயம் 29

ஒரு மென்மையான மலரை வாடி விடாமல் பத்திரமாகப் பொதிந்து வைக்க வேண்டுமென்ற முயற்சியிலேயே கைதவறிக் கசக்கி எறிந்து விட்டாற் போன்றிருந்தது அந்தச் சூழ்நிலை. தரையிலிருந்து பொறுக்கிய கடிதத் துணுக்குகளைக் கையில் வைத்துக் கொண்டு அவள் கண் கலங்கி நிற்பதை உணர்ந்த போது அவன் அடைந்த வேதனை சொற்களால் அள





விட்டு உரைக்க முடியாததாக இருந்தது. ஒருவரை வெறுத்தாலும் அந்த வெறுப்பை அதற்கு ஆளானவனே நேருக்கு நேர் இவ்வளவு குரூரமாகக் கண்டு கொள்ளும்படி நடந்து விட்ட அநாகரிகத்தை எண்ணி மனம் புழுங்கினான் அவன். கிழிந்த கடிதத் துணுக்குகளையும் தன்னையும் மாறி மாறிப் பார்த்து விட்டுக் கண்ணீர் பெருகும் விழிகளோடு சொல்லிக் கொள்ளாமலே அவள் படியிறங்கித் திரும்பிச் செல்லும்போது நடைப்பிணமாகச் செல்லுவதை அவனும் உணர்ந்தான். 'இன்றைக்கென்று இந்த நேரம் பார்த்து அந்தக் கடிதங்களைக் கிழிக்கவேண்டும் என்று எனக்கு ஏன்தான் தோன்றியதோ?' என்று எண்ணித் தன்னைத்



மணிவண்ணன்



தானே நொந்து கொண்டான் அவன். அன்று காலையில் கல்லூரிக்குப் போனால் வகுப்பில் 'அந்தப் பெண்ணின் கலங்கிய விழிகளைத் தைரியமாக எப்படி எதிர் கொள்வது?' என்று தயங்கியது அவன் மனம். நீண்ட நேரமாக மேற்கொண்டு ஒரு வேலையும் செய்யத் தோன்றாமல் மலைத்துப் போய் உட்கார்ந்திருந்து விட்டுக் கல்லூரிக்குச் செல்ல வேண்டிய நேரம் வந்ததும் உற்சாகமில்லாமல் உடைமாற்றிக்கொண்டு ஏதோ கொலைக்களத்துக்குப் புறப்படுவது போல் புறப்பட்டிருந்தான் அவன். கல்லூரிப் பாட வேளைகள் தொடங்கி அவன் வகுப்புக்குச் சென்ற போது, அன்று அவள் கல்லூரிக்கே வரவில்லை என்று தெரிந்தது. பாரதி தனக்கு எழுதியிருந்த கடிதங்களை அவளே காணும்படி தான் துண்டு துண்டாகக் கிழித்தெறிந்திருந்ததை எண்ணி அவள் எவ்வளவுக்கு மனம் உடைந்திருப்பாள் என்று நினைத்த போது சத்தியமூர்த்தி நிம்மதியிழந்து தவித்தான். பாரதி அன்று கல்லூரிக்கே வரவில்லை என்பது வேறு அவனுடைய கவலையை அதிகமாக்கி யிருந்தது. கல்லூரியிலோ அந்த மன நிலையோடு அவன் உற்சாகமாகச் செய்ய முடியாத சுறுசுறுப்பான வேலை ஒன்று அவனுக்காகக் காத்திருந்தது. நடப்பு ஆண்டில் கல்லூரி யூனியனுக்கு மாணவர்களிலிருந்து ஒரு தலைவனோ, தலைவியோ தேர்ந்தெடுப்பதற்காகத் தேர்தல் நடத்தும் பொறுப்பை அவன் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்லிப் பூபதி 'ஆர்டர்' அனுப்பியிருந்தார். கல்லூரி மாணவர் யூனியன் தலைவரையும், இலக்கியச் சங்கம், விஞ்ஞானக் கழகம், விளையாட்டுக் குழு முதலியவற்றுக்கான செயலாளர்களையும் தெரிந்தெடுப்பதற்குரிய தேர்தலை நடத்துவதற்குச் சத்தியமூர்த்தி எலெக்ஷன் ஸ்பெஷல் ஆபீஸராக நியமிக்கப்பட்டிருப்பதாகக் காலேஜ் நோட்டீஸ் போர்டில் வேறு அறிக்கை தொங்கிக் கொண்டிருந்தது. மனத்தில் களிப்பில்லாமல் கடமையைக் காப்பாற்றுவதற்காக அந்தக் காரியங்களை அவன் செய்ய வேண்டியிருந்தது. உதவியாகவோ, ஆதரவாகவோ, அநுதாபத்துடனோ, யாரும் ஒத்துழைக்காத ஒரு சூழ்நிலையில் பொறுப்புக்கள் மேலும் மேலும் பெருகிக் கொண்டு போவதை எண்ணி அவனுக்குத் தயக்கமாக இருந்தது. முதல்வரும், துணைமுதல்வராகிய வார்டனும், ஹெட்கிளார்க்கும் — தனக்கு ஆதரவாக இல்லை என்பதோடு மறைமுகமான எதிரிகளாக இருக்கிறார்கள் என்பதும் நன்றாக அவனுக்குத் தெரிந்திருந்தது. மற்றவர்கள் எதிரிகளாக இல்லாதது போலவே நண்பர்களாகவும் இல்லை. மாணவர்கள்தான் அவன்மேல் உயிரையே வைத்திருந்தார்கள். ஓர் ஆசிரியன் பெருமைப்பட்டுக் கொண்டு நிமிர்ந்து நடப்பதற்கு இதைத் தவிர வேறென்ன வேண்டும்? ஆனாலும் இந்த ஒரு பெருமையால் மட்டுமே சத்தியமூர்த்தியின் மனம் நிம்மதியடைந்துவிடவில்லை. இப்படிக் கவலைப்படுவதுதான் தீரர்களின் சுபாவம். தீரர்கள் ஒரு போதும் தங்களுக்குப் பக்கத்தில் நிற்கிற ஆயிரம் நண்பர்களால் மட்டும் திருப்திப் பட்டுவிடுவதில்லை. எங்கோ இருக்கிற யாரோ ஓர் எதிரியை அழிக்கவே அவர்கள் அதிகமாகக் கவலைப்பட வேண்டியிருக்கிறது. கல்லூரி முதல்வர் நல்லெண்ணத்துடனே சுமுகமாகப் பழகுகிறவராக இருந்தால் மாணவர் யூனியன் தேர்தலைப் பற்றிச் சத்திய மூர்த்தியிடம் நேரில் விவரித்துப் பேசி எல்லாம் சொல்லி யிருக்க வேண்டும். நிர்வாகியின் வார்த்தையைத் தட்ட முடியாமல் அந்தப் பொறுப்பைச் சத்தியமூர்த்தி எப்படி நிறைவேற்றினாலும் சரி என்று அவனிடம் விட்டுத் தொலைப்பது போல முறையைக் கழித்திருந்தார் முதல்வர். தனக்காகத் தன்னை மதிக்காமல் நிர்வாகியின் அபிமானம் தனக்கு இருக்கிறது என்பதற்காகத் தன்னைப் பிறர் மதிப்பதைச் சத்தியமூர்த்தி சிறிதும் விரும்பவில்லை. கல்லூரி முதல்வரோ புகழ்பெற்ற மேலை நாட்டுச் சர்வகலாசாலைகளில் எல்லாம் பயின்று பட்டம் பெற்றும் தாழ்வு மனப்பான்மையும், பிறர் தன்னைப் படிப்பாளியாக மதித்துப் பயப்படுகிறார்களா இல்லையா என்ற சந்தேகத்துடனேயே உலகத்தைப் பார்க்கும் பார்வையுமாக வாழ்ந்தார். இரண்டு நாட்களுக்கு முன் கல்லூரி நூல் நிலையத்தில் நடந்த ஒரு சம்பவத்திலிருந்து சத்தியமூர்த்தி அவரை மிக நன்றாகப் புரிந்து கொண்டிருந்தான். அவர் எத்தனை பெரிய கோழை என்பதைச் சத்தியமூர்த்தி அந்தச் சம்பவத்திலிருந்து முடிவு செய்திருந்தான். அன்று நடந்தது இதுதான்: பகல் இரண்டரை அல்லது மூன்று மணி இருக்கும். ஒரு வகுப்புமில்லாத ஓய்வு வேளையாகத் தனக்கு அந்த நேரம் வாய்த்திருந்த காரணத்தினால் சத்தியமூர்த்தி மல்லிகைப்பந்தல் கல்லூரியின் நூல்நிலையத்தில் போய் ஷேக்ஸ்பியருக்கு 'பிராட்லி'


தலைவலியா?
பல்வலியா?
உடல்வலியா?
அசௌகரியமான நாட்களா?
ஸாரிடான் 'ரோஷ்' சாப்பிடுங்கள்
நிவாரணம் அளிக்கிறது, ஆசுவாசப் படுத்துகிறது, புத்துணர்ச்சி யூட்டுகிறது
வலிகளிலிருந்தும் நோவுகளிலிருந்தும் விரைவில் நிவாரணம் பெற ஸாரிடான் சாப்பிடுங்கள். தலைவலி, பல்வலி, உடல்வலி, சாதாரண உடற்கோளாறுகள், இவற்றிலிருந்து நிவாரணம் பெற ஸாரிடான் இணையற்றது. ஸாரிடான் விரைவாக, அபாயமின்றி, நிச்சயமாக வேலை செய்கிறது. உங்களுக்கு ஒரு வில்லை ஸாரிடான் போதுமானது! குழந்தைகளுக்கு ¼ லிருந்து ½ வில்லை வரை கொடுக்கலாம்.
ஒரு வில்லை ஸாரிடான் போதும்
Saridon
'ரோஷ்' தயாரிப்பு
ஸோல் டிஸ்ட்ரிபியூட்டர்கள்: வால்டாஸ் லிமிடெட்
JWT-VT

எழுதிய விமர்சனப் புத்தகம் ஒன்றை எடுத்துப் படித்துக் கொண்டிருந்தான். புத்தகத்தில் ஈடுபட்டு ஆழ்ந்த பின், சுற்றுப்புறத்தைப் பற்றியே மறந்து போயிருந்தான் அவன். அப்போது கல்லூரி முதல்வர் ஏதோ காரியமாக அங்கு வந்திருக்கிறார். அவர் அங்கு வந்ததும் சத்திய மூர்த்திக்குத் தெரியாது. திரும்பிப் போனதும் சத்திய மூர்த்திக்குத் தெரியாது. அரை மணி நேரத்துக்குப் பின்பு கல்லூரி ஊழியன் ஒரு சிறிய காகிதத்தை மடித்துக் கொண்டு வந்து அவனிடம் நீட்டிய போதுதான் என்ன 'நடந்திருக்கிறது என்பதை அவன் புரிந்து கொண்டான். 'கல்லூரி முதல்வர் வந்தால் எழுந்து நிற்க வேண்டும் என்ற மரியாதையைக் கூட இன்னும் இங்கே சில ஆசிரியர்கள் கற்றுக் கொள்ளவில்லை. பாவம்! அவர்கள் பரிதாபத்துக்குரியவர்கள்' — என்று தலையும் இல்லாமல் வாலும் இல்லாமல் முதல்வர் ஏதோ எழுதிக் கையெழுத்திட்டிருந்தார். சத்தியமூர்த்திக்கு அதைப் படித்ததும் ஒன்றுமே புரியவில்லை. 'இதற்கு என்ன அர்த்தம்?' என்று அதைக் கல்லூரி லைப்ரேரியன் ஜார்ஜிடம் காண்பித்துக் கேட்டான் சத்தியமூர்த்தி. ஜார்ஜ் அதைப் படித்து விட்டுச் சிரித்துக் கொண்டே சொன்னார் :

''மனிதர் அரை மணி நேரத்திற்கு முன்னால் இங்கே வந்து போனார். என்ன காரியமாக வந்தாரோ? நீங்கள்எழுந்து நின்று மரியாதை செய்ய வில்லையே என்ற கோபத்தில் வந்த காரியத்தைக் கூட மறந்து போய் விட்டார் போலிருக்கிறது. சுற்றிச் சுற்றி வந்தார். நீங்கள் எழுந்து நிற்கிற வழியாக இல்லை. உங்கள் மேல் குற்றம் சொல்லுவதற்கு ஒன்றும் இல்லை. நீங்கள் ஓரேயடியாகப் புத்தகத்தில் மூழ்கிப் போயிருந்தீர்கள். நீங்கள் எழுந்து நின்று தன்னை மதிக்கவில்லையே என்ற கோபத்துடனும், உங்களைக் கூப்பாடு போட்டு எழுப்ப முடியாத அதைரியத்துடனும், அவர் சுற்றுவதைப் பார்த்து நானே உங்கள் அருகில்வந்து, ''சார்! ஒரு நிமிஷம் எழுந்து நின்று விடுங்கள். மனிதன் மரியாதைப் பசி பிடித்து அலைகிறான்'' என்று சொல்லி விடலாம் போல் தவித்துப் போனேன். நீங்களோ அசைந்துகொடுக்கவே இல்லை. மனிதன் சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் ரொம்பக் கோபத்தோடு இங்கிருந்து திரும்பிப் போனார். நான் அப்போதே நினைத்தேன். ஆள் தம்முடைய அறைக்குப் போய் இருந்து கொண்டு இது மாதிரி ஏதாவது எழுதி அனுப்புவார் என்று எனக்குத் தெரியும்'' என்றார் ஜார்ஜ்.

''அது சரி, மிஸ்டர் ஜார்ஜ்! ஆனால் மல்லிகைப் பந்தல் கல்லூரி பிரின்ஸிபாலுக்குத் தருகிற மரியாதையைவிட அதிகமான மரியாதையை நான் ஷேக்ஸ்பியருக்கும் பிராட்லிக்கும் அல்லவா தர வேண்டும்? அவர்களையே நான் உட்கார்ந்து படிக்கும் போது எனக்குத் தெரியாமல் உள்ளே வந்து போன ஒருவருக்காக நான் எப்படி எழுந்து நின்று மரியாதை செய்ய முடியும்? மரியாதை என்கிற விஷயம் எவ்வளவு கஷ்டமானதாக இருக்கிறது பார்த்தீர்களா மிஸ்டர் ஜார்ஜ்? அதை முட்டாள்களும் எதிர்பார்க்கிறார்கள். அறிவாளிகளும் எதிர்பார்க்கிறார்கள். பெரும்பாலான சமயங்களில் அறிவாளிகளைவிட முட்டாள்கள்தாம் அதிகமாக மரியாதையை எதிர்பார்க்கிறார்கள். அதை

> **பொன் விளைந்த**
>
> வீரர்கள் ஒருபோதும் தங்களுக்குப் பக்கத்தில் நிற்கிற ஆயிரம் நண்பர்களால் மட்டும் திருப்திப்பட்டு விடுவதில்லை. எங்கோ இருக்கிற யாரோ ஓர் எதிரியை அழிக்கவே அவர்கள் அதிகமாகக் கவலைப்படவேண்டியிருக்கிறது.

யாருக்குக் கொடுப்பது என்பதுதான் பிரச்னையாக இருக்கிறது. உலகத்தில் பிறரிடமிருந்து ஏதாவது ஒன்றை எதிர்பார்க்கும் போது அப்படி எதிர்பார்க்கிறவர்களில் சரிபாதிப் பேர் கோழையாயிருக்கிறார்கள்; இன்னும் சரிபாதிப் பேர் முரடர்களாக இருக்கிறார்கள். கோழைகளும் இல்லாமல், முரடர்களுமில்லாமல் வீரர்களாயிருக்க வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். ஆனால் நாம் எதிர்பார்க்கிறபடி எதுவும் இருப்பதில்லை...'' என்று சத்தியமூர்த்தி கூறிய கருத்துக்களை ஜார்ஜ் ஆர்வத்தோடு கேட்டுப் பாராட்டினார்.

''கொடுப்பவர்கள் தாம் வீரர்கள். எதிர் பார்த்துக் காத்திருப்பவர்கள் கோழைகளே. நம்முடைய பிரின்ஸிபால் எப்போதும் இப்படித்தான் சார்! இத்தனை வயதாகியும், இவ்வளவு படித்தும் அவருடைய மரியாதைப் பசி இன்னும் அடங்க வில்லை என்பதைப் பார்க்கும் போது ஆச்சரியமாகத்தான் இருக்கிறது

சார்! இப்போது உங்களையேதான் எடுத்துக்கொள்ளுங்களேன்! நீங்கள் சொல்லி வேண்டிக் கொண்டதனாலோ, எதிர்பார்த்துத் தவிப்பதனாலோ மாணவர்கள் உங்களை மதிக்கிறார்கள் என்று கூறிவிட முடியுமா? அவர்களுக்காகவே உங்களை மதிக்க வேண்டும் என்று தோன்றுகிறது. மதிக்கிறார்கள். மழையைப் போல் தானாகவே குளிரக் குளிரப் பெய்ய வேண்டும். அதுதான் சார், என்றும் நிலைக்கிற மரியாதை'' — இப்படி லைப்ரேரியன் ஜார்ஜ் ஆவேசமாகப் பேசிய போது தன்னைப் பற்றியும் தன்னை மாணவர்கள் மதிப்பதைப் பற்றியும் அவர் இவ்வளவு நுணுக்கமாகக் கவனித்து வைத்திருப்பதைக் கண்டு சத்தியமூர்த்தியே ஆச்சரியப்பட்டுப் போனான். தன்னைப் பற்றி லைப்ரேரியன் ஜார்ஜ் கூறியவற்றைக் கேட்கும் போதும் அவனுக்குச் சிறிது கூச்சமாகக் கூட இருந்தது. தன்னைப் பற்றிய இந்த மரியாதையை இப்படித் தன்னிடமே வாய் விட்டுக் கூறாமல் ஜார்ஜ் தம் மனத்துக்குள்ளேயே வைத்துக் காப்பாற்றியிருந்தாரானால் இன்னும் நாகரிகமாக இருந்திருக்குமே என்றும் நினைத்தான் சத்தியமூர்த்தி. சொல்லாக வெளி வந்து விடுகிற புகழ்ச்சியை விட ஒருவருடைய மனத்தில் நிலைத்த மதிப்பீடாகத் தங்கிச் சொல்லாக வெளிப்படாத புகழ்ச்சி மிகவும் தரமானது என்று எண்ணுகிற சுபாவம் சத்தியமூர்த்திக்கு உண்டு. மாணவர் யூனியன் தேர்தல் நடத்துகிற பொறுப்பைக் கல்லூரி நிர்வாகியின் கட்டளைக்காகத் தன்னிடம் விட்டு விட்டு விலகி நிற்கிற முதல்வரைப் பற்றிச் சிந்தித்த போது இந்தச் சம்பவம் சத்தியமூர்த்திக்கு நினைவு வந்தது. நோட்டீஸ் போர்டில் தேர்தலைப் பற்றிய அறிவிப்பை ஒட்டி அன்று பிற்பகல் வேளையிலிருந்தே வகுப்பறைகளிலும் கல்லூரி மைதானத்திலும் மாணவர் யூனியன் தேர்தலுக்குரிய கலகலப்பும் பரபரப்பும் வந்து விட்டன. பத்துப் பன்னிரண்டு மாணவர்களாகச் சேர்ந்து கும்பல் கும்பலாக நின்று பேசுவதும், மாணவர்களைக் கூட்டம் கூட்ட முயல்வதுமாகக் கட்சித் தன்மையோடு கூடிய ஒரு சுறுசுறுப்புக் கல்லூரி எல்லையெல்லாம் வந்து நிரம்பி விட்டது. பிற்பகல் மூன்று மணிக்கு அந்தக் கல்லூரி மாணவர்களிலேயே முரடன் என்று மற்ற ஆசிரியர்கள் கருதிப் பயந்த புலிகோவிந்தன் என்ற மாணவன் யூனியன் தலைவர் தேர்தலுக்குச் சத்திய மூர்த்தியிடம் மனுச்செய்தான். அவனுடைய மனுவை வேறு இரண்டு மாணவர்கள் ஆதரித்து வழி மொழிந்திருந்தார்கள். நாலரை மணிக்குப் புலிகோவிந்தன் கோஷ்டியைப் பிடிக்காத வேறு ஒரு மாணவர் கூட்டம் இன்னொரு பையனை அழைத்து வந்து ஆதரவுக் கையெழுத்திட்டு அபேட்சை மனுக் கொடுக்கும்படி செய்தது. மறு நாள் மாலை வரை அபேட்சை மனுக் கொடுப்பதற்கு நேரம் இருப்பதால் இன்னும் மனுக்கள் வரலாமென்று சத்தியமூர்த்தி எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். புலிகோவிந்தனுடைய மனுவை ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி நிராகரித்து விட வேண்டும் என்று வைஸ் பிரின்ஸிபால் வந்து காதைக் கடித்தார். சத்தியமூர்த்தி அதற்குச் சம்மதிக்க வில்லை.

''அந்தப் பயல் ரொம்பவும் அர்ர கண்ட்! மாரல் ரெக்! போன வருடம் பையன்களைக் கூட்டம் கூட்டி வைத்து ஹாஸ்டல் சாப்பாட்டை பகிஷ்கரித்து 'ஸ்டிரைக்' பண்ணத் தூண்டினவன் இந்தப் புலிகோவிந்தன்தான்! 'காலேஜ் ஹாஸ்டல் பாத்ரூம் குழாய்களில் தண்ணீர் வருகின்றதுவா அல்லது கண்ணீர் வருகின்றதா? அவைகள் ஏன் இப்படி நன்றாகத் தண்ணீர் வராமல் சொட்டுச் சொட்டாக அழுவது போல் கண்ணீர் சிந்துகின்றன?' என்று எதுகை மோனையோடு பேசினவன் இவன். ஜாக்கிரதை! இவனை யூனியன் பிரஸிடெண்டாக வர விட்டாச்சோ; அப்புறம் காலேஜ் குட்டிச்சுவர்தான்....'' என்று மிரட்டினார் அவர். ''புலிகோவிந்தனும் சட்டப்படி இந்தக் கல்லூரி மாணவன். கல்லூரி அட்டெண்டன்ஸ் ரிஜிஸ்தரில் அவன் பெயர் இருக்கிற வரை அவனுக்கும் மற்ற மாணவர்களுக்குள்ள அத்தனை உரிமைகளும் உண்டு. அப்படியிருக்கும் போது அவனுடைய அபேட்சை மனுவை நான் எப்படி நிராகரிப்பது?'' என்று சத்தியமூர்த்தி மறுத்து விட்டான். 'மாணவர்களுக்குப் பயப்படுகிற இந்த ஆசிரியர்கள் சொல்லிக் கொடுத்து உருவாக்குகிற பட்டதாரிகள்தானே நாளைய சமூகத்தில் போய் நிறையப் போகிறார்கள்?' என்று நினைத்த போது சத்தியமூர்த்தி மனம் வருந்தினான்.

''வைஸ் பிரின்ஸிபால் சார்! நம்முடைய நிர்வாகி நமது கல்லூரிக் கட்டிடங்களை மிகவும் உறுதியாகப் பக்கா காங்கிரீட் போட்டுக் கட்டியிருக்கிறார். கேவலம் ஒரு புலிகோவிந்தன் மட்டும் முயன்று அவற்றைக் குட்டிச்சுவராக்கி விட முடியாது. சுவர்களைப் பற்றிய கவலையை விட்டு விட்டுத் தயவுசெய்து



ஹ்யூலெட்ஸ் மிக்சர்



அஜீரணத்தை விரைவில் அகற்றுகிறது

கட்டிப்போட்டாற்போல், ஒரே இடத்தில் அமர்ந்தவாறே உங்கள் அலுவல்களைக் கவனிக்க வேண்டியிருக்கிறது. ஏனெனில் உங்கள் வேலை அப்படியானது. இக்காரணத்தினால் உங்களைப் போன்றவர்கள் அடிக்கடி அஜீரணத்தினால் அவஸ்தைப்பட நேரிடுகிறது. ஆனால் நீங்கள் அவ்வாறு கஷ்டப்படத் தேவையில்லை. ஹ்யூலெட்ஸ் மிக்சர் வயிற்று உபாதையை விரைவில் போக்கி, நிரந்தரமாக குணமளிக்கிறது; வலியுண்டாக்கும் அமிலங்களை அகற்றி, ஜீரணகோசத்திற்கு அதன் வேலையை சரிவர செய்வதற்கேற்ப பாதுகாப்பளிக்கிறது.

ஹ்யூலெட்ஸ் மிக்சர் குழந்தைகளின் வயிற்றுக் கோளாறுகளுக்கும் கூட உத்தமமானது. வயிற்றுப் போக்குக்கு அபினி சேர்ந்த ஹ்யூலெட்ஸ் மிக்சர் குணமளிக்கும்.

ஹ்யூலெட்ஸ் மிக்சர் ஜீரணத்திற்கு சிறந்தது

C. J. ஹ்யூலெட் & ஸன் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்
86/A, கனியப்ப நாயக் தெரு, மதராஸ்-3

JWT/CJH/1929

நாளையிலிருந்தாவது மாணவர்களைப் பற்றிக் கவலைப்பட ஆரம்பியுங்கள். சுவர்களைக் கூர்க்காக்களும், வாட்ச்மேன் களும் கவனித்துக் கொள்வார்கள் ''— என்று குத்தலாகப் பதில் சொல்லத் தான் அவனுடைய நாவு முந்தியது. அந்த மனிதருடைய வயதையும் முது மையையும் மதித்து இப்படி நினைத்ததை அவன் சிரமப்பட்டு அடக்கிக் கொள்ள வேண்டியதாயிற்று. மாலையில் வகுப் புக்கள் முடிந்து கல்லூரியை விட்டுக் கிளம்புவதற்கு முன் யாழ்ப்பாணத்தி லிருந்து மல்லிகைப் பந்தலில் வந்து படிக்கும் மகேசுவரிதங்கரத்னம் என்ற பெண்ணும், இன்னொரு மாணவி யும் சத்தியமூர்த்தியைத் தேடி வந் தார்கள். அவர்கள் அவனிடம் விடுத்த வேண்டுகோள் விநோதமானதாயிருந் தது. ''சார்! 'தமிழ் குரூப்'பில் இறுதி ஆண்டில் மாணவிகளாகிய நாங்களும் நாலைந்து பேர்கள் படிக்கிறோம். எங்க ளில் யாராவது மாணவர் யூனியன் தலை வர் பதவிக்கு ஏன் நிற்கக் கூடாது என்று நானும் இவளுமாகச் சிந்தித்து மிஸ். பாரதியை நிறுத்தலாம் என்ற முடி வுடன் அவள் வீட்டுக்குப் போய்ச் சொன்னோம். அவள் இன்று கல்லூரிக்கு வரவில்லை. எங்களால் ஆனமட்டும் சொல்லிப் பார்த்தும் அவள் கேட்க வில்லை. நீங்கள் ஒரு வார்த்தை சொன் னால் அவள் நிச்சயமாகக் கேட்பாள். எங்களுக்காக இந்த உதவியை நீங்கள் செய்ய முடியுமா?'' என்று மகேசுவரி தங்கரத்தினமும், அவளுடைய தோழி யும் தன்னிடம் வந்து வேண்டுகோள் விடுத்த போது 'தனக்கும் பாரதிக்கும் அவ்வளவு நெருக்கமான உறவு இருப்ப தாக' அவர்கள் புரிந்து கொண்டிருப் பதையே ஆத்திரத்தோடும் வெறுப் போடும்தான் அவன் ஏற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. அந்த வெறுப்பை யும் ஆத்திரத்தையும் தன்னுடைய மறு மொழியில் தெரியச் செய்தான் அவன்.

''மிஸ், மகேசுவரி தங்கரத்தினம்! உங்களுக்குப் பாரதியைத் தேர்தலுக்கு நிற்கச் செய்ய வேண்டும் என்ற எண் ணம் இருந்தால் நீங்களே அவளிடம் வற்புறுத்தி நிற்கச் சொல்லுவதுதான் முறை. 'நான் சொல்வதை அவள் மறுக்க மாட்டாள்' என்று நீங்கள் என் னைத் தேடி வந்து சொல்வதே எனக்குப் பிடிக்க வில்லை. யூனியன் தலைவர் பத விக்குத் தகுதியுள்ள மாணவ மாணவி களில் யார் அபேட்சை மனுவைக் கொண்டு வந்து கொடுத்தாலும் வாங் கிக் கொள்ள வேண்டியது என்னுடைய



''ஏன் அவர் அடிக்கடி மிளகாய் மில் பக்கம் போய் நின்று தும்மி விட்டு வருகிறார்?''

''அவருக்கு மூக்குப் பொடிக்குக் கையில் காசில்லையாம்!''

பொறுப்பு. அபேட்சை மனுவைக் கொடுக்கச் சொல்லி யாரையும் தேடிப் போய் வற்புறுத்துவது என்னுடைய வேலை இல்லை. தயவுசெய்து இனி மேல் இப்படி என்னிடம் வந்து யாரையும் எதற்காகவும் தூண்டச் சொல்லி வற் புறுத்தாதீர்கள்.''

''அதற்கில்லை, சார்! நாங்கள் வேண்டுவதைத் தப்பாகப் புரிந்து கொள்ளாதீர்கள். பாரதி நீங்கள் கிழித்த கோட்டைத் தாண்ட மாட்டாள் என்ப தால்தான் சொன்னேன். 'உங்கள்மேல் அந்தப் பெண் அத்தனை 'ரிகார்ட்' வைத்திருக்கிறாள்' என்பதால்தான் உங் களைத் தேடிக் கொண்டு இதைச் சொல்ல வந்தோம்.... இதில் ஏதாவது பிழை இருந்தால் எங்களை மன்னித்து விடுங்கள்'' என்று சொல்லி மன்னிப்புக் கேட்டுக் கொண்டு போய் விட்டாள் மகேசுவரி தங்கரத்தினம். தன்னையும் பாரதியையும் இப்படிச் சேர்த்து நினைக் கும்படியான மன நிலை எவருக்கும் எதனாலும் உண்டாகாத விதத்தில் இனி அவளோடு தான் பழக வேண்டும் என்று தன் மனத்தில் வைராக்கிய மாக ஒரு தீர்மானம் செய்து கொண் டான் அவன். தன் தோழிகளிடம் பேசும் போதும், மற்றவர்களிடம் 'புதிய தமிழ் விரிவுரையாளரை'ப் பற்றிப் பெருமையடித்துக் கொள்ளும் போதும் பாரதி காண்பித்திருக்கிற அள வற்ற ஆர்வத்தினால்தான் இப்படித் தன்னையும் அவளையும் சேர்த்து நினைக் கிறார்கள் என்று அவனால் புரிந்து கொள்ள முடிந்தது. அதே சமயத்தில் இப்படி வம்பு பேசுகிறவர்களுக்காகவும் பொய்யர்களுக்காகவும், அயோக்கியர் களுக்காகவும் எந்தத் தவறும் செய்யாத தான் எதற்காகப் பயப்பட வேண்டு மென்று ஆத்திரமாகவும் கோபமாகவும் கூட இருந்தது அவனுக்கு. (தொடரும்)


அமுல்
வெண்ணெய்
எவ்விதத்தில்
அலாதியானது?
Amul
PASTEURISED
BUTTER
?
5

ஐக்கியத்தைக் குலைக்கலாமா?

கே. பாலசுப்பிரமணிய அய்யர்



ஸ்ரீமான் கே. பாலசுப்பிரமணிய அய்யர் அவர்கள், மகான் வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள் ஏற்றிவைத்த தீபங்களை எண்ணெய் ஊற்றி மங்காமல் காத்துவரும் காவலர். அவர் நம் தமிழ் நாட்டு அரசியலிலும் கல்வித் துறையிலும் முக்கிய பங்கெடுத்துக் கொண்டு சென்ற நாற்பதாண்டுகளாக அரும்பணியாற்றி வந்திருக்கிறார். சென்னை மேல் சபையில் எதிர்க் கட்சியிலிருந்து மக்களின் நலன்களை எடுத்துக் கூறிப் பல பெரியோர்களின் கவனத்தையும் பாராட்டையும் பெற்றுள்ளவர். ஆட்சி மொழி விஷயத்தில் தமது கருத்தை இக்கட்டுரையில் தெளிவாக வெளியிட்டுள்ளார்.

தற்போது நம்முன் உள்ள பிரச்னை என்னவென்றால், ஹிந்தியை ஆட்சி மொழியாகச் செய்வது நம் தேசத்தில் உள்ள எல்லா மக்களுடைய நன்மைக்கும் உகந்ததா என்பதுதான். ஹிந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாத எல்லா மக்களுக்கும் இந்தப் பிரச்னையைப் பற்றிய கவலை இருக்கிறது.

ஒரே வோட்டு

ஹிந்தியை ஆட்சி மொழியாகக் கொள்ளலாமா என்பதை அரசியல் நிர்ணய சபையில் விவாதிக்கு முன்பு காங்கிரஸ் கூட்டத்தில் யோசித்தபோது அபிப்பிராய வேற்றுமை சம அளவில் இருந்தது எனச் சொல்லப்படுகிறது. தலைவராக இருந்த டாக்டர் ராஜேந்திர பிரசாத் அவர்களின் அதிகப்படியான ஒரு வோட்டின் பலத்தினால் மட்டிலுமே இந்த ஷரத்து காங்கிரஸ் குழுவில் நிறைவேற வேண்டியதாக ஆயிற்று. ஆகவே இப்பொழுது ஆட்சி மொழிக்கான சட்டத்தைக் கொண்டு வரும்பொழுது, ஹிந்திக்கு அன்று ஆரம்ப காலத்தில் இருந்த கட்சி நிலைமையை நன்கு கருத்தில் கொள்ள வேண்டும். ஹிந்தி ஆட்சி மொழியாக ஆகக் கூடாது என்று இப்பொழுதுதான் சில அறிஞர்கள் கூறுகிறார்கள் என்பது சரியல்ல.

ஸர் ஐவார் ஜென்னிங்ஸ் என்ற சட்ட நிபுணர் இந்திய அரசியல் சட்ட அமைப்பைப் பற்றி எழுதிய ஒரு புத்தகத்தில் கூறுகிறார்: ''சாதாரண சட்டத்தினாலேயே தீர்வு செய்ய வேண்டிய மொழிப் பிரச்னையை அரசியல் சட்ட மூலமாகச் செய்வது வழக்கத்தில் இல்லை. இந்தியாவில் அவ்வாறு செய்ய வேண்டிய அவசியம் சில காரணங்களினால் ஏற்பட்டது.'' ஆக, அரசியல் நிர்ணயச் சட்டத்திலேயே ஹிந்தி ஆட்சி மொழியாக அமைக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருப்பது உலகில் மற்ற இடங்களில் காணும் முறைக்கு முரணானதாகும்.

ஒன்றல்ல, எட்டு

வடநாட்டில் ஹிந்தி என்ற பொதுப் பெயரில் அடங்கும் 'அவதி' என்ற பாஷையை 170 லட்சம் ஜனங்கள் பேசுவதாகவும், 'பகேலி' என்பதை அறுபது லட்சம் மக்களும், 'ஸதீஸ்கட'யை ஐம்பது லட்சம் ஜனங்களும் 'புண்டேலி' என்பதை எண்பது லட்சம் ஜனங்களும் 'கநூஜி' பாஷையை எழுபது லட்சம் மக்களும், 'வ்ரஜ்' என்பதை ஒரு கோடி மக்களும், 'பாங்க்ரா' என்ற பாஷையை நாற்பது லட்சம் மக்களும், 'கடிபோலி' பாஷையை எண்பது லட்சம் ஜனங்களும் பேசுவதாகச் சொல்லப்படுகிறது. ஆக ஹிந்தி என்ற ஒரு பெயரில் எட்டு பாஷைகள் வடக்கே வழக்கில் உள்ளன. இப்பொழுது ஆட்சி மொழியாக ஆக்கப்பட்டுள்ள ஹிந்தி இவைகளுக்கு நெருங்கி ஒத்திருப்பினும் இவைகளைவிட வேறுபட்டதே. ஆகவே ஹிந்தி, நாட்டு மக்களில் பெரும்பான்மையோருக்குப் புரிகிறது என்று கூறுவது சரியல்ல. ஒரு பகுதியின் தாய் பாஷையை நாடு முழுவதற்குமான பாஷையாக ஆக்கும் போது அந்தப் பிராந்திய மக்களுக்கு மற்றவர்களைவிட அரசாங்கத்தில் அதிக சலுகை, ஆதிக்கம் ஏற்பட்டு, மற்றவர்களுக்குச் சம சந்தர்ப்பம் கிடைக்காமல் போகும் என்பது முற்றிலும் உண்மையே.



அந்தந்த ராஜ்யங்களில் அந்தந்தப் பிராந்திய பாஷையை ஆட்சி மொழியாகச் செய்வதில் எல்லோரும் பொறுப்பு கொண்டு பாஷாவாரியாகப் பிராந்தியங்கள் அமைக்கப் பெற்று, அதேபோல் ராஜ்யங்களில் ஆட்சி மொழி பிரதேச மொழியாகிவருகிறது. இந்நிலையில் எல்லா பிராந்தியத்துக்கும் ஒரு பொதுவான மொழியை மத்திய சர்க்காரின் ஆட்சி மொழியாகச் செய்வதுதான் நாட்டின் ஒற்றுமைக்கும், சக்தியுடன் ஆட்சியை நடத்தவும் முழு உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. வெளிநாட்டின் பாஷையான ஆங்கிலம் எப்படி நம் நாட்டின் பாஷையாக



ஏற்கப்படலாம் என்ற வாதம் சரியல்ல. வெளிநாட்டுப் பார்லிமெண்டு முறை, தேர்தல் முறை, மற்றும் கோர்ட்டு வியவகார முறைகளை நாம் வாங்கிக் கொண்டு நம் அநுபவத்திலும் கொண்டுள்ளோம். அவ்வாறு இருக்க ஆங்கிலத்தை மட்டும் புறக்கணிப்பது யுக்திக்குப் பொருந்தாது.

தற்போது நாட்டில் ஆங்கில மொழியைப் பயில்வது மூன்றும் வகுப்பிலிருந்தே கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மக்கள் எல்லாருக்கும் ஐந்தாம் வகுப்பு வரை படிப்பைக் கட்டாயமாக ஏற்படுத்த வேண்டும் என்ற முயற்சியும் எடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே எல்லாருக்குமே ஆங்கிலம் கற்பதற்கான அவகாசம் கட்டாயமாக ஏற்பட்டிருக்கிறது. இவ்வாறு மக்கள் எப்படியும் படித்து அறியப் போகிற ஆங்கிலத்தை ஆட்சி மொழியாக ஆக்குவதில் யாருக்கும் எந்தக் கஷ்டமும் இல்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

தரம் குறைய லாமா ?

தற்சமயம் ஆங்கிலம் பயில்வதில் மிகவும் தரம் குறைந்து காணப்படுகிறது. இதையும் போக்க ஆவன செய்ய வேண்டும்.

தேச ஆட்சி நன்றாக நடத்தப்பட வேண்டும் என்பது மட்டிலுமே நமது நோக்கமாக இருக்க வேண்டுமே தவிர பாஷைச் சர்ச்சை போன்றவற்றைப் பெரிதாக்கி அதன் விளைவாக நாட்டின் ஐக்கியத்துக்கே ஹானியைத் தேடுவது கொஞ்சமும் சரியல்ல.

தூணைத் தகர்க்கிறார்கள்!

பி.டி.ராஜன்



சிலர் சில அரசியல் கட்சிகளில் இருப்பதால் அவர்களுக்குக் கௌரவம்; சிலர் அரசியல் கட்சிகளுடன் தொடர்பு கொள்வதால் அக்கட்சிகளுக்குக் கௌரவம்; ஆனால் சிலர் அரசியல் கட்சிகளுடன் சம்பந்தப்பட்டாலும் சம்பந்தப்படாவிட்டாலும் மக்களின் தலைவர்களாக மதிக்கப்படுவார்கள். இது அவர்களுடைய தன்னலமற்ற சேவையினால் மக்களிடை சம்பாதிக்கும் கௌரவமாகும். இப்படிப்பட்டவர்களில் ஒருவர் நமது தமிழவேள் பி. டி. ராஜன் அவர்கள். அவர் நமது ஆட்சிமொழிப் பிரச்னையைப்பற்றித் தமது கருத்தை தறுக்குத் தெறித்தாற்போல் இங்கே கூறுகிறார்.



இந்திய துணைக் கண்டத்தில் வாழும் பல பகுதி மக்களும் தாங்கள் ஒரே நாட்டினர் என்ற சிந்தனையைப் பெற்று, இதன் மூலம் ஐக்கியமாக முன்னணி வகுத்து பிரிட்டிஷாரிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றினர் என்றால் அதற்குக் காரணம் ஆங்கில மொழியே. இப்போது ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரம் பெற்று விட்டோம் என்பதால், நாம் எந்த ஏணி வழியாக உன்னத நிலையை அடைந்தோமோ அதனை உதைத்துத் தள்ள வேண்டும் என்று நம்மில் பலருக்குச் சபலம் ஏற்பட்டுள்ளது. தேசத்தின் ஒற்றுமையையும், கட்டுக்கோப்பையும் தாங்கும் ஸ்தம்பங்களில் ஒன்றாக ஆங்கிலம் இன்றைக்கும் இருக்கிறது என்பதை அவர்கள் மறந்து விட்டதாகக் காண்கிறது. யோசனையில்லாமல் இந்த ஸ்தம்பத்தைத் தகர்ப்பதால் நாம் மூன்று நூற்றாண்டுகளில் உருவான தேசியப் பணியை நாசமாக்கினவராவோம். ஆங்கிலம், ஹிந்தி இவற்றில் எதைத் தேர்ந்தெடுப்பது என்பதல்ல இன்று நாட்டின் முன்னுள்ள பிரச்னை. தேச ஐக்கியத்தைக் காப்பாற்றப் போகிறோமா அல்லது ஹிந்தி மக்களின் காரணமற்ற ஆசைக்கு அடிபணியப் போகிறோமா என்பதே பிரச்னை.

கதவை அடைக்காதீர்கள்

ஹிந்துக்கள் பெரும்பான்மையாக இருந்த போதிலும் நாம் ஒரு மதச் சார்பற்ற அரசாக அமைந்து எல்லா மதங்களையும் ஒரு போலப் பேணுவது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். இந்தியாவின் பல்வேறு மதங்களைப் போல, நமது நாட்டின் எல்லா மொழிகளையும் ஒரே போல நடத்த வேண்டும். இவற்றில் ஏதேனுமொரு மொழி — அது ஹிந்தியானாலும் சரி, வேறெந்த மொழியானாலும் சரி — தன்னுள் பொதிந்துள்ள தகுதியினாலும், தேசத்தின் எல்லாப் பகுதி மக்களும் புரிந்து கொள்ளக் கூடிய யோக்கியதையாலும் காலக்கிரமத்தில் ஆட்சி மொழியாவதற்குத் திறன் படைத்தால் மட்டுமே நாம் ஆங்கிலத்தை ஆட்சி மொழி ஸ்தானத்திலிருந்து நீக்க முடியும். அப்போதும்கூட ஆங்கில மொழியில் தேர்ந்த அறிவு பெறுவதை நாம் கைவிட முடியாது. வெளி உலகத்திலிருந்து பிரிந்து, கதவை அடைத்துக் கொள்ள விரும்பினாலொழிய ஆங்கில பாஷா ஞானத்தை நாம் ஒருபோதும் கைவிடுவதற்கில்லை.



இது சரியா!



அன்று சனிக்கிழமை. அரை நாள்தான் அலுவலகம். 'பஸ்ஸைப் பிடித்து வீட்டுக்கு விரைவில் போக வேண்டும். மனைவியை அழைத்துக் கொண்டு உடனே 'மாட்டினி'க்குப் போக வேண்டும்' என்று திட்டமிட்டுக் கொண்டு புறப்பட்ட சம்பந்தத்தின் மனத்தில் இன்று எத்தனை எத்தனையோ ஆசைக் கனவுகள்!

அவன் கனவுகளை நிஜமாக்குவதேபோல், என்றும் கிடைக்காத பஸ் அன்று சீக்கிரம் கிடைத்துவிட்டது. அது மட்டுமா? அதிகப் பிரயாணிகள் இல்லாததால் எங்கும் நிற்காமல், அவன் இறங்க வேண்டிய இடத்துக்கு வந்தே இறக்க விட்டது.

நாலே எட்டில் வீட்டுக்கு வந்தால் மனைவி பக்கத்துப் போர்ஷன் பங்கஜத்துடன் ஊர்க் கதை பேசிக் கொண்டிருந்தாள்.

சம்பந்தத்தைக் கண்டவுடனாவது எழுந்து வரவேண்டாமோ? கதையை ஒரு கட்டத்துக்குக் கொண்டு வந்து நிறுத்தி எழுந்து வர அவளுக்கு ஏறக் குறைய இருபது நிமிஷங்கள் பிடித்து விட்டன.

''என்ன! இன்றைக்கென்ன இவ்வளவு சீக்கிரம் வந்து விட்டீர்கள்? சனிக்கிழமை யானாலும் நாலு மணிக்கு முன்னாடி வர மாட்டீர்களே!'' என்று நீட்டி முழக்கிக் கொண்டு வந்தாள் அவன் சகதர்மிணி.

அவனுக்கு வந்த ஆத்திரத்தைச் சொல்லி முடியாது. ''உன் தலை! ஸ்ரீதேவி! இன்று சனிக்கிழமையாயிற்றே? கணவர் எந்த நேரத்தில் வருவாரோ, எங்கு அழைத்துக்கொண்டு போவாரோ என்று ஆசையோடு அலங்கரித்துக் கொண்டு ஒருத்தி இருக்க வேண்டாமோ? காட்டேரி போலத் தலையை வைத்துக் கொண்டு முகத்தில் எண்ணெய் வழிய இப்படி ஒருத்தி உட்கார்ந்திருந்தால் காரியாலயத்திலிருந்து வீட்டுக்கு வரும் கணவனுக்கு எப்படி இருக்கும்? களைத்துப் போய் வரும் கணவனின் கண்களில் ஒருத்தி களையோடு விழுந்தால் அல்லவா அவன் களைப்பு நீங்கும்? உன்னை இன்று ஒரு சினிமாவுக்கு அழைத்துப் போகலாமென்று ஆசையோடு வந்தால், இப்படி ஸ்ரீதேவிக்குத் தமக்கையாக நின்று கொண்டிருக்கிறாயே! நீ டிரஸ் செய்துகொண்டு இனி எப்பொழுது புறப்படுவது? எப்பொழுது நாம் சினிமாத் தியேட்டருக்குப் போவது?'' என்று சீறினான்.

''எதற்கு இப்படி ஆத்திரப்படுகிறீர்கள்? இதோ ஒரு நொடியில் வந்து விடுகிறேன்!'' என்று கூறிச் சோப்புப் பெட்டியும் கையுமாகக் குளியலறைக்குப் புறப்பட்டாள் சம்பந்தத்தின் மனைவி.

''இந்த ஒரு நொடி மனிதர்களது கால அளவா அல்லது பிரும்மாவின் கால அளவா?'' என்று கேட்டுக் கோபத்திலும் சிரித்தான் சம்பந்தம். பெண்கள் அலங்காரம் செய்துகொள்ளப் புகுந்தால், அவர்களுக்கு நேரம் போவது தெரியாது என்பது உலகத்தின் ஏகோபித்த அபிப்பிராயமாயிற்றே!

சம்பந்தத்தின் இந்தப் பேச்சு காதில் விழவே, பக்கத்துப் போர்ஷன் பங்கஜம் சம்பந்தத்தின் மனைவிக்கு முன்னால் சோப்பும் துண்டுமாகக் கிணற்றடியில் இருந்தாள்.

அவள் கணவரும் வந்து, இப்படி அவளும் அவரிடம் ஒரு டோஸ் வாங்கிக் கட்டிக் கொள்வதைவிட முன்கூட்டியே ஜாக்கிரதையாக இருந்து விடுவது நல்லதல்லவா? இந்த முன்ஜாக்கிரதையான எண்ணம் அவளை அன்று மற்றெந்த நாளைக் காட்டிலும் நன்றாக அலங்காரம் செய்து கொள்ளத் தூண்டியது. அவள் அலங்காரத்துக்கு அணி செய்வது போல் பூக்காரி மல்லிகை மொட்டை நெருக்கமாகத் தொடுத்து மணியாரமாகக் கொண்டு வந்து வைத்து விட்டுப் போனது வேறு அமைந்தது.

பங்கஜம் நன்றாக அணி செய்து கொண்டு வாசலுக்கு வரவும், அவள் கணவன் காரியாலயத்திலிருந்து வீட்டுக்குள் நுழையவும் சரியாக இருந்தது.

அலுத்துச் சலித்துப் போய்த்தான் அவனும் வந்திருந்தான். பங்கஜத்தைப் பார்த்ததும் அவனுக்குப் பற்றிக் கொண்டு வந்தது ஆத்திரம். ''மகாராணியின் அலங்காரம் பலே ஜோராயிருக்கிறதே! எங்கே போகிறாப் போலேயோ? காலையில் காரியாலயத்துக்குப் போனவன் எப்பொழுது வருவானோ? எப்படி வருவானோ என்ற எண்ணம் உனக்குத் துளியாவது இருக்கிறதா? நான் சம்பாதிக்கும் பணத்தில், அலங்காரம்செய்துகொண்டு கும்மாளமடிக்கத் தோன்றுகிறது உனக்கு. குடும்பம் எப்படி உருப்படும் என்கிறேன், இம்மாதிரி ஊதாரித்தனமாகச் செலவழித்துக் கொண்டு, அலங்காரம் செய்து கொண்டிருந்தால்?'' என்று சீறி விழுந்தான்.


அவன் சீற்றத்தை ஆற்றக் காப்பியும் டிபனும் கொண்டு வர ஓடினாள் பங்கஜம். வேர்க்க விறுவிறுக்க அவள் ஓடிய போது, அவள் செய்து கொண்டிருந்த ஆடை அலங்காரம் கொஞ்சம் கலைந்தது. அது அவள் கணவனுக்குச் சற்று ஆறுதலை அளித்தது.

—குறும்பன்



''உங்கள் பாடு தேவலை சாமி! கையில் காசில்லாத தற்காகச் சந்நியாசம் வாங்கிக் கொண்டாலும் உங்களிடம் காவித் துணி வாங்க வாவது பணம் இருந்தது. என்னிடம் அது கூட இல்லையே!''

சபர்மதி ஆசிரமம்



தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான்

ஒரு பெரிய நகரம். ஏராளமான நெசவு ஆலைகளை உடைய நகரம். பெரிய வியாபாரத் தலமாக விளங்கும் நகரம். என்னிறந்த கட்டிடங்களைத் தன்னகத்தே கொண்ட நகரம் என்றெல்லாம் பெருமையுடையது இன்றைய குஜராத்தின் தலைநகரமான அகமதாபாத் நகரம். என்றாலும் இத்தனையும் அந் நகரத்தின் பெருமையை என்றும் நிலைநிறுத்தக் கூடியவை அல்ல. அங்கு மனிதருள் மாணிக்கமான மகாத்மா காந்தி ஓர் ஆசிரமம் அமைத்துக் கொண்டு வாழ்ந்தார். அங்குதான் இந்தியா சுதந்திரமடைவதற்குரிய வழிகளை வகுத்தார். அங்கிருந்துதான் தண்டியை நோக்கித் தம் உப்புச் சத்தியாக்கிரகப் போரை நடத்தினார் என்பதுதான் அந் நகரத்துக்கு என்றும் நிலைத்த புகழைத் தருவதாகும். ஆம்! அகமதாபாத் நகரத்தின் ஒரு பகுதியாகவே சபர்மதி ஆசிரமம் விளங்குகின்றது.

அகமதாபாத் செல்ல ஜாம் ஜாம் என்று ரயிலிலேயே செல்லலாம். பம்பாயிலிருந்து பரோடா சென்று அங்கிருந்து பாலான்பூர் செல்லும் ரயிலில் ஏறினால் அகமதாபாத் ஸ்டேஷனிலேயே இறங்கலாம். சபர்மதி ஆசிரமம் செல்லுமுன் அந்தப் பிரபலமான அகமதாபாத் நகரத்தையே ஒரு சுற்றுச் சுற்றி விடலாம். இன்று அகமதாபாத் என்று அழைக்கப்படும் நகரத்தின் பழைய பெயர் அசாவல் என்றும், கர்ணாவதி என்றும் இருந்திருக்கிறது. இந்த நகரத்தைப் புதிய முறையில் நிர்மாணித்தவர் சுல்தான் அகமத் ஷா என்றும் அப்படி அவர் நிர்மாணித்தது கி.பி. 1411ம் ஆண்டில் என்றும் சரித்திர ஏடுகள் பேசுகின்றன. சுல்தான் அகமத் ஷா சபர்மதி நதிக் கரையில் வந்து தங்கி யிருந்தபோது அவரது வேட்டை நாய்கள் முயல் கூட்டம் ஒன்றைத் துரத்திச் சென்றதாகவும், இந்த நகரம் இருக்கும் இடத்தில் அந்த முயற் கூட்டம் வேட்டை நாய்களை எதிர்த்தன என்றும் அதனால்தான் இந்த மண்ணில் ஏதோ சிறப்பு இருக்கிறது என்று நிர்மாணித்து அகமது ஷா இங்கே இந்நகரை நிர்மாணித்தார் என்றும் ஒரு கதை வழங்குகிறது. இப்படி இங்கு நகர் நிர்மாணிக்கும்படி அவருக்கு ஆலோசனை கூறியவர் அகமது காட்டு கஞ்பக்ஷா என்ற முஸ்லிம் சந்நியாசி என்றும் கூறுவர். அகமதாபாத் ஒரு பெரிய நகரம். கட்டிடக் கலைக்குச் சிறப்பாக அமைந்த பல கட்டிடங்கள் கொண்டது. இந்நகரத்தை 1615ல் பார்த்த, ஸர் தாமஸ் ரோ என்ற ஆங்கிலேயர் 'இது என்ன லண்டனை விடப் பெரிய நகரமாக இருக்கிறதே' என்று அதிசயித்திருக்கிறார்.

தாஜ்மஹாலைக் கட்டிய மொகலாய மன்னன் ஷாஜஹான் மும்தாஜ் மஹாலைத் திருமணம் முடித்ததும் தேன் நிலவைக் கழிக்கத் தேர்ந்தெடுத்த இடம் இந்நகரமே என்றும், அவனுடைய தந்தை ஜஹாங்கீர் அவன் காதலி நூர்ஜஹானுடன் அகமதாபாத்திலுள்ள கங்காரியா ஏரியில் உல்லாசப் படகுப் பிரயாணம் செய்திருக்கிறான் என்றும் சொன்னால் அந்நகர எழிலைப் பற்றி அதிகம் சொல்ல வேண்டாம் அல்லவா? இன்னும் ஒரு சிறப்பு என்னவென்றால் சர் தாமஸ் ரோ என்ற ஆங்கிலேயன் முதல் முதல் மொகலாய மன்னனைச் சந்தித்து இந்தியாவோடு வியாபாரம் செய்ய அனுமதி வாங்கியதும் இங்கேதான். இந்திய மண்ணில் பிரிட்டிஷ் ஆட்சி நிலைத்த பின்பு அதை எதிர்த்து இந்தியாவின் சுதந்திரம் பெற மகாத்மா காந்தி சுதந்திரப் போரை முதன் முதல் ஆரம்பித்ததும் இங்கேதான். அதன் பின் காந்திஜி சபர்மதி நதிக் கரையில் ஓர் ஆசிரமம் அமைத்துக் கொண்டு வாழ்ந்திருக்கிறார்.

இந்த நகரத்தில் பார்க்கவேண்டிய கட்டிடங்கள் பல உண்டு என்றாலும் அழகுவாய்ந்த இடமாகக் காணப்படுவது கங்காரியா ஏரிதான். பரந்து கிடக்கும் ஏரி மிகவும் அழகாக அமைந்திருக்கிறது. அதில் படகு விட்டு உல்லாசமாகப் பொழுது போக்குவதற்கும் வசதி செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஏரியை அடுத்து மலைத் தோட்டம் என்ற பூங்காவும் இருக்கிறது. இந்தப் பூங்காவை 1451 குத்புதீன் என்றும் சுல்தான் நிர்மாணித்தான் என்றும் அது 72 ஏக்கர் நிலத்தில் அமைக்கப்பட்டிருக்கிறதென்றும் சொல்லுகிறார்கள். தீன் தர்வாஜா, ஜும்மா மஜீத், ராணி சிப்ரியின் சமாதி எல்லாம் கண்களைக் கவரும் வகையில் கட்டப்பட்ட கட்டிடங்கள். ஹைமத்கான் மசூதி, சீதி சையத் மசூதி எல்லாம் கட்டிடக் கலையின் சிறப்பை எடுத்துக் காட்டுவனவாகும். அங்கு துளையிட்ட சன்னல்கள் பல இருக்கின்றன. இதுபோன்ற வேலைப்பாடுடைய சன்னல் உலகில் வேறு எங்குமே இல்லையாம். அகமது ஷாவின் சமாதி 1414ல் கட்டப்பட்டுள்ளது. ஜும்மா மசூதியில் உள்ள இரண்டு கோபுரங்கள் நாம் கையால் ஆட்டினால் ஆடுகின்றன. இவைகளில் ஒன்றுதான் இன்று இருக்கின்றது. மற்றொன்று 1818ல் நேர்ந்த பூகம்பத்தில் விழுந்திருக்கிறது. தில்லி தர்வாஜாவுக்குப் பக்கத்தில் உள்ள ஹதீஸிங் கோயில் அகமதாபாத்தில் உள்ள பிரபலமான சம



"டேய் சுப்பு! இந்த வீட்டை அடிக்கடி யாரானும் வாங்கிண்டே யிருக்கா. ஏதோ விசேஷமான நல்ல வீடா இருக்கும்போலே யிருக்கு!"

ணர் கோயில். கிட்டத்தட்ட ஆபூ மலையில் உள்ள டில்வாரா கோயிலுக்குச் சமமானது. எல்லாம் வெள்ளைச் சலவைக் கல்லால் கட்டப்பட்டது. 53 கோபுரங்களைத் தாங்கி நிற்கிறது. இன்னும் 24 சமண தீர்த்தங்களின் வடிவங்களையும் அமைத்து வைத்திருக்கின்றனர். கலை அழகு நிரம்பிய கோயிலாக இது விளங்குகிறது. அகமதாபாத்தின் தென் பகுதியிலே ஷா ஆலம் என்னும் தொழுகைத் தலம் ஒன்றும் அமைத்திருக்கிறார்கள். நூர்ஜஹானின் தம்பி இதன் ஸ்தூபிகளை நவரத்தினங்களால் அலங்கரித்து வைத்திருந்தானாம். ஆனால் இப்போது நவரத்தினங்கள் ஒன்றுமே இல்லை. இதனை அடுத்துச் சந்தோலா ஏரி இருக்கிறது.

இன்னும் இந்நகரத்துக் கோட்டையை அடுத்துப் பத்ரா என்று ஓர் இடம் இருக்கிறது. அங்குள்ள கோட்டை வாசலைச் சிவப்பு வாயில் என்று அழைக்கின்றனர்.

இனி சபர்மதி ஆசிரமத்துக்குச் செல்வோம். அது அகமதாபாத்திலிருந்து ஐந்து மைலுக்கு வடக்கே இருக்கிறது. செல்வதற்குப் பஸ் வசதி உண்டு என்றாலும், டாக்ஸி வைத்துக்கொண்டு சென்றால்தான் ஆற அமர இருந்து பார்த்துத் திரும்பலாம். இன்று சபர்மதி ஆசிரமம் இரண்டு பகுதியாக இருக்கிறது. நடுவிலே பெரிய ரோடும், அதற்கு இரு பக்கங்களிலும் ஆசிரமக் கட்டிடங்களாக இருக்கின்றன. வடகிழக்காய்ச் செல்லும் ரோட்டுக்கு வடக்கே பெரிய பெரிய கட்டடங்கள் இருக்கின்றன. அங்குதான் இன்றைய ஐந்தாண்டுத் திட்டத்தில் கட்டிய கட்டிடங்களும், சமுதாயநல அபிவிருத்தித் திட்டங்களின் அடிப்படையில் கட்டிய கட்டிடங்களும் இருக்கின்றன. இக் கட்டிடங்கள் காந்திஜி போதித்த எளிமையை எடுத்துக் காட்டுவதாக இல்லை. ஆனால் ரோட்டுக்குத் தென்புறம் இருப்பதே பழைய ஆசிரமக் கட்டிடங்கள். அங்கு காரை விட்டு இறங்கிய உடனேயே நமது உடல் புளகமடையும். இங்கு நாம் காணவேண்டிய குடில்கள் பல உண்டு. இந்த ஆசிரமப் பகுதியை ஒட்டியே சபர்மதி நதி ஓடுகிறது. இங்கு நுழைந்த உடனேயே ஒரு பெரிய மரத்தடியைப் பார்ப்போம். இதனை இம்லி மரம் என்கின்றனர். நம் நாட்டு ஆலமரம் போல் அகன்று பரந்திருக்கிறது. விழுதுகள் இல்லை. இலையும் சிறிய இலையாக இருக்கிறது. காந்திஜி முதல் முதல் இப்பக்கம் வந்தபோது இந்த மரத்தின் நிழலில்தான் வந்து தங்கியிருக்கிறார். இந்த மரம்தான் அவரை வரவேற்று அவர் உள்ளத்தில் ஓர் ஆசிரமம் நிறுவலாமே என்ற எண்ணத்தை உருவாக்கியிருக்கிறது. ஆசிரமத்தில் நடந்த பெரிய காரியங்கள் எல்லாம் இந்த மரத்தடியில்தான் தொடங்கியிருக்கின்றன. ஏன், உப்புச் சத்தியாக்கிரகம் என்னும் தண்டி யாத்திரையை இம்மரத்தடியில் நின்றுதான் தொடங்கியிருக்கிறார். இதற்கு அடுத்தபடியாக ஆசிரமத்தில் "புனிதமாகக் கருதப்படும் இடம் இருதயகுஞ்ச் என்ற குடில்தான். ஆரம்பத்தில் இது மடைப்பள்ளியாக இருந்திருக்கிறது. அதன் பின் அதனையே தமது வாசஸ்தலமாகக் கொண்டிருக்கிறார் மகாத்மா. காந்திஜியின் ஞாபகச் சின்னங்கள் பல இங்கு சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றன. படங்களும் பல இருக்கின்றன. இதற்கு முன்னுள்ள திறந்தவெளி முற்றத்தில்தான் பாபுஜி இரவு படுப்பாராம். இந்த இடத்தை எல்லாம் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டு மேலே நடந்தால் பாபுஜியின் உபாசனா மந்திர் என்ற இடத்துக்கு வருவோம். அங்கு கட்டிடம் ஒன்றும் இருக்காது. நாலு சிறு சுவர்களை எழுப்பி வளைத்து வைத்திருக்கிறார்கள். அந்த இடத்தில் கூரை ஒன்றும் கிடையாது. இங்கு தான் ஆசிரமவாசிகளெல்லாம் ஒன்றாகக்கூடிப் பிரார்த்தனை பண்ணுகிறார்கள். இதன் பக்கத்திலேயே மகன் நிவாஸ் என்ற குடில் இருக்கிறது. முதன் முதல் பாபுவுடன் வந்து தங்கியவர் மகன்லால். அவர்தான் ஆசிரம விவசாயத்தை எல்லாம் கவனித்து வந்திருக்கிறார். அவர் இறந்தவுடனே பாபு இன்று நான் விதவை ஆகிவிட்டேன் என்று வருந்தினாராம். இன்னும் இங்கே ஹரிஜன் கன்யா வித்தியாலயம், பாலா மந்திர், சேவா நிவாஸ், சோமநாத் சத்திராலயம் என்னும் ஹாஸ்டல், காதி பந்தர் முதலிய கட்டிடங்கள் இருக்கின்றன. எல்லாம் மண் சுவர்களாலேயே கட்டப்பட்டுக் கூரை வேய்ந்தவை. இன்னும் இங்கே விருந்தினர் வந்து தங்க நந்தினி என்று ஒரு கட்டிடம். நந்தினி என்றால் மகிழ்ச்சி தரும் இடம் என்று பொருளாம்.

ஆசிரமம் மொத்தம் 121 ஏக்கர் விஸ்தீரணமுள்ள இடத்தில் அமைந்திருக்கிறது. இருதய குஞ்ச், உபாசனா மந்திர், மகன் நிவாஸ் போன்றவைகளே ஆதியில் இருந்தபடியே இருக்கின்றனவாம். மற்றவையெல்லாம் திருத்தியமைத்ததுடன் சேர்த்தும் கட்டியிருக்கிறார்கள். இந்த ஆசிரமத்தில் எனக்கிருந்த பெரும் குறை என்னவென்றால், கட்டிடத்தின் பெயர், அங்கு நடக்கும் பணி என்ன என்பதைப் பற்றிக் குஜராத்தியிலேயே எழுதி வைத்திருக்கிறார்கள். காந்திஜிக்கு அஞ்சலி செலுத்த உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் பலர் வருகிறார்கள்; வந்தித்து வணங்குகிறார்கள். அவர்களுக் கெல்லாம் உதவி புரியும் வண்ணம் விவரங்கள் ஆங்கிலத்திலேயே இருத்தல் நலமல்லவா?


உங்கள் எழில் நீடிக்க ....
AFGHAN SNOW
ஆப்கன் ஸ்னோ
அழகு சாதனங்கள்
ஈ. எஸ். பட்டன்வாலா, பம்பாய்-77 (இந்தியா)



அந்த நாளில்...

ஜாவர் சீதாராமன்

> சிறந்த குணசித்திர நடிகர் என்று திரையுலகில் பெயர் எடுத்துள்ள ஸ்ரீ சீதாராமன் நல்ல சிறு கதை, நாடக ஆசிரியரும் கூடத்தான். இவர் அந்த நாளில் உயர் அரசாங்கப் பதவியை நாடிச் சென்றபோது 'திரையுலகு வாழ்வே உனக்கு' என்று விதி அவருக்குக் குறிப்பால் உணர்த்தியதைத் தமக்கே உரிய சுவையான முறையில் இங்கு விளக்குகிறார்.

வாழ்வு என்பது நிகழ்ச்சிகளால் கோக்கப்பட்ட ஒரு மாலை. காலம் என்ற பரிமாணம்தான் பல்வேறு நிகழ்ச்சிகளைக் கோக்கும் நூல். வாழ்வுக்கு உருவம் தருவதும் அதுதான். வாழ்வுப் பாதை முழுதுமே ஆசை என்ற மைல் கற்கள் நிறைந்து கிடக்கின்றன. ஒன்றன் பின் ஒன்றாகப் பல ஆசைக் கனவுகள் தோன்றி, நம்மை வாழ்க்கைப் பாதையிலே தள்ளிச் செல்கின்றன. மணல் பாதையிலே பார வண்டி இழுக்கும் மாட்டுக்குத் தார்க்குச்சி எப்படியோ அப்படியே மனிதனுக்கு ஆசைகள் தோன்றுகின்றன. ஆசைகள் நிறைவேறும்போது, கனவுகள் பலிக்கும்போது மனிதன் வெற்றி என்று மனம் மகிழ்கிறான். ஏமாற்றம் ஏற்படும்போது மனம் கசக்கிறான். ஏமாற்றம் வெற்றிக்குத் தாயாகவும் வெற்றி தோல்விக்குத் தாயாகவும் மாறி மாறி வருவதன் விசித்திரம், நிகழ்காலத்தை மட்டும் பார்க்கும் வலிமை படைத்த நமக்குப் புரிவதில்லை. சூட்சுமமாகப் பார்க்க முடிந்தால் வாழ்வின் ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஒன்றுக்குப் பின் ஒன்றாக அழகாகப் பின்னப்பட்டிருப்பது தெரியவரும். ஜோதிஷ பாஷையில் கூறப்போனால் ஒரு நிகழ்ச்சி வருங்கால நிகழ்ச்சிக்கு ஆரூடமாகவே அமைகிறது.


1942ம் ஆண்டு என்று நினைக்கிறேன். இரண்டாவது உலக மகா யுத்தத்தின் நடுப் பகுதி — உச்சப் பகுதி. புது டில்லியின் வீதிகளில் அமெரிக்கச் சிப்பாய்கள், பிரிட்டிஷ் சிப்பாய்கள் நடந்தபடி இருந்த காலம். நம் நாட்டுத் தலைவர்கள் சிறைக்குப் பின் மறைந்திருந்த நேரம்.



பிரிட்டிஷ் ஏகேச்சாதிகாரம் அணையும் விளக்குப் போல் மிக மிகப் பிரகாசமாக எரிந்தபடி இருந்த காலம். அந்தக் காலத்தில் நான் கலாசாலையை விட்டு வெளிவந்து ஐ. சி. எஸ். பரீட்சை எழுதின காலம். நாட்டிலே மிகச் சிறந்த மாணவர்கள்தான் வடிகட்டிப் பரீட்சை எழுதவே அனுமதிக்கப்பட்டிருந்தனர். அந்தப் பெருமை எனக்கு இள மனத்தில் பரிபூரணமாக இருந்தது. பெருமையின் இடையே ஓரளவு சிறுமையும் மறைவாக ஊசலாடியபடிதான் இருந்தது.

'நம் நாட்டின் தலைவர்கள், சிறந்த மலர்கள் சிறையிலே வாடும்போது நாம் அதிகாரவர்க்கத்தின் அலங்காரப் பாவையாவதா' என்ற நினைப்பு வேதனை தந்துகொண்டுதான் இருந்தது. ஆனால் இந்த ஏகேச்சாதிகார நிலை நீடிக்கப் போகிறதா? இது மறைந்து நாடு விடுதலை அடைந்துவிட்டால் நாம் நாட்டின் சேவகராக அல்லவோ இருப்போம் என்ற சிந்தனைதான் என்னை ஓரளவு ஊக்குவித்தது.

புதுடில்லியில் கானாட் பிளேஸ் என்று சொல்லும் பார்க்கில் நானும் எனது நண்பர்கள் சிலரும் உட்கார்ந்து பேசியபடி இருந்தோம். பேச்செல்லாம் பரீட்சை பற்றிய பேச்சு. வரப் போகும் பதவி பற்றிய பேச்சு. இடை இடையே ஆங்கிலேய அதிகார வர்க்கத்தைப் பற்றிய கண்டனம் கலந்துதான் இருந்தது. பேச்சளவில் அதிகார வர்க்கத்தைக் கண்டித்து விட்டால் போதும்! நாட்டுக்கும் நம் மகாத்மாவுக்கும் ஆற்ற வேண்டிய கடமையைச் செய்துவிட்டதாக எங்கள் நினைப்பு! அந்தச் சமயத்தில் நாங்கள் உட்கார்ந்து வீர முழக்கம் (வார்த்தையளவில்)செய்து கொண்டிருந்த பார்க்கில் இருள் படர்ந்தது. வட்டமாகச் சுற்றியுள்ள



கடைகள் ஹோட்டல்களிலிருந்து நான் "மினுக், மினுக்' என்ற வெளிச்சம் மின்னியது. அப்போது இளம் வட இந்தியப் பெண்மணி ஒருத்தி எங்களை நெருங்கினாள். அவள் முகத்திலே ஒரு சோகம். கண்ணிலே திட சித்தத்தின் ஒளி! உடலிலே முரட்டுக் கதர் ஆடை. அவளுக்கு வாலிபம் இருந்தது; ஆனால் கவர்ச்சியில்லை. கவர்ச்சியை அந்தப் பெண் தேடவுமில்லை என்பது அவள் ஆடை அலங்காரத்தில் செலுத்திய கவனத்திலிருந்து தெரிந்தது. எங்களை நெருங்கி வந்த பெண் எங்களை ஓரிரண்டு விநாடிகள் பார்த்தாள். அவள் பார்வையில் பச்சாத்தாபம், ஏளனம், அன்பு இம்மூன்றும் கலந்து ஓடின. எங்களைப் பார்த்து, ஆங்கிலத்தில் "நீங்கள் தென்னிந்தியர்கள்தானே?" என்று கேட்டாள்.



"ஆம்" என்று பதில் கொடுத்தோம். "அரசாங்கத்தில் உத்தியோகம் தேடி வந்திருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன்" என்றாள் அவள் தொடர்ந்து.

"ஆம்" என்று சொன்னோம்.

"எனக்கு ஓர் உதவி செய்வீர்களா?" என்று தயக்கத்துடன் கேட்டாள் அந்தப் பெண். எங்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. விழித்தோம். "என்ன செய்ய வேண்டும், சகோதரி" என்று கேட்டோம். அந்தப் பெண் எங்களை ஏற இறங்கப் பார்த்தாள். ஒரு முறை பெருமூச்சு விட்டாள். பின்பு தொடர்ந்து "நீங்கள் தயவுசெய்து மனிதர்களாய் வாழ வேண்டும். பிரிட்டிஷ் அரசாங்கம் நாட்டின் நலம் கெடுக்கும் ஒரு சைத்தான். அந்த அரசாங்கத்தில் சிப்பந்திகளாகாதீர்கள். தாய்நாட்டை மறக்காதீர்கள்" என்று சொல்லிவிட்டு மறைந்தாள். நாங்கள் அவள் போன திக்கைப் பார்த்திருந்தோம்! அப்போதுதான் எங்கள் கூட்டத்தில் மௌனமாக உட்கார்ந்திருந்த வட இந்தியர் விஷயத்தை விளக்கினார்: "வந்து போனது வேறு யாருமில்லை; ஸ்ரீமதி அருணா ஆசப்அலி அவர்கள்தான்! அவர் போலீசாருக்கு மறைந்து தலைமறைவாக வாழ்கிறார். பிரிட்டிஷ் ராஜ்யத்தின் தலை நகரிலேயே வாழ்கிறார். ஆனால் போலீசாரால் இன்னும் அவரைப் பிடிக்க முடியவில்லை" என்றார். எனக்கும் மனம் அப்படியே குழம்பி விட்டது. என் மீதே வெட்கம் ஏற்பட்டது எனக்கு. ஒரு பெண் எத்தகைய தியாகமும், வீரமும் செறிந்த வாழ்க்கை நடத்துகிறாள். நாம் பெரிய பரீட்சை எழுதிப் பெரிய வேலை தேடுவதை வாழ்வின் லட்சியமாகக் கொண்டு விட்டோமே என்று ஏங்கியது மனம். அன்று இரவு ஹோட்டலில் தூக்கமே பிடிக்கவில்லை. உத்தியோகத்தைப் பெற வேண்டுமென்றிருந்த ஆசையும் பறந்து போய் விட்டது.

மறு நாள் காலை என் நண்பர் ஒருவருடன் சிற்றுண்டி அருந்தப் புறப்பட்டேன். நான் அணிந்திருந்த ஷர்ட்டுக்குப் பை இல்லை. மணி பர்சை இடுப்பிலே வைத்திருந்தேன். சிற்றுண்டி அருந்தி விட்டுப் பணம் கொடுக்கும்போது மணிபர்சைத் தேடினேன். அது இல்லை. முதல் நாள் ஏற்பட்ட மனக் குழப்பம், காலையில் புறப்பட்ட அவசரத்தில் பர்சை எங்கு நழுவ விட்டோம் என்று எனக்குப் புரியவில்லை. சிற்றுண்டியின் பில்லை நண்பர் கொடுத்தார். கொண்டுவந்த நானூற்று ஐம்பது ரூபாயையும் இழந்து விட்டுக் கையில் காலணா இல்லாமல் அனாதை போல் நிராதரவாக நின்றேன்! ஊர் திரும்பக் கடன் வாங்க வேண்டிய நிலை. அந்த நிலையில் என் நண்பரிடம்

"சினிமாவுக்குப் போவோம், வாருங்கள். பணம் இழந்த துக்கத்தை மறக்க" என்றேன். அவருக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. "என்னையா மனுஷன் நீ! பணத்திலே என்ன அலட்சியம் உனக்கு? கையில் உள்ளதையெல்லாம் இழந்துவிட்டு என்னை சினிமாவுக்கு அழைக்கிறாய். நீ சினிமாக் காரனாகத்தான் ஆகப் போகிறாய்" என்றார். அதாவது பணம் இழப்பதைப் பாராட்டாதவர்கள் சினிமாக்காரர்கள்தான் என்பது என் நண்பரின் அபிப்பிராயம். கையிலே தூக்க முடியாத பொருள்களாகிய கார்களே நடுத்தெருவில் திருட்டுப் போய்க் கொண்டிருந்த புது டில்லியில் நான் இழந்த பர்சைத் திரும்பப் பெறுவது சாத்தியம் என்று நினைப்பது பைத்தியக்காரத்தனம் அல்லவா? மாற்ற முடியாத துன்பத்தை மறப்பதுதான் புத்திசாலித்தனம் என்று நண்பரிடம் தத்துவம் பேசிக்கொண்டே நகர்ந்தேன். ஐ.ஏ.எஸ். போட்டிப் பரீட்சை முடிந்து ஊர் திரும்பும் வரை என்னுடைய செலவை ஏற்றுக் கொள்ளும் பொறுப்பை வகிக்கும்படி நேர்ந்த என் நண்பர் உள்ளே குமுறும் ஆத்திரத்துடன் என்னைச் சினிமாவுக்கு அழைத்துச் சென்றார்.

மறுநாள் "ஹிந்துஸ்தான் டைம்ஸ்" என்ற பத்திரிகையை வாங்கிப் படித்தோம்.

அதில் "தென்னிந்தியர் பணப் பை தெருவிலே கிடந்தது" என்ற விளம்பரம் போடப்பட்டிருந்தது. மணிபர்ஸ் இருக்கும் விலாசமும் போடப்பட்டிருந்தது. எனக்கு ஓர் ஆசை, 'அந்தப் பர்ஸ் நம்முடையதாக இருந்தாலும் இருக்குமோ?' என்று. அதோடு ஒரு சந்தேகமும் கூட... தென்னிந்தியன் என்றால் நான் ஒருவன்தானா? வேறு ஒருவர் பையாக இருந்தால்?

நேரே விலாசம் கொடுக்கப்பட்டிருந்த மோட்டார் கம்பெனிக்குச் சென்றேன். அதன் முதலாளி ஒரு பஞ்சாபி. அவர் வெளியே சென்றிருப்பதாகச் சொன்னான் கடைப் பையன். ஒவ்வொரு நிமிஷமும் மனம் 'டிக்டிக்' என்று அடித்துக்கொண்டது. கடைக்கு வெளியே மேலும் கீழும் நடந்தபடி இருந்தேன். பஞ்சாபி முதலாளி வந்தார். அவரைப் பார்த்து அர்த்தமில்லாத ஒரு புன்முறுவல் செய்தேன்.

"என்னையா சிரிக்கிறீங்க?" என்றார். அவர் நான் உடனே "சார்! உங்களைப் பார்த்துச் சிரிக்கவில்லை. பர்ஸ் விஷயமாக வந்திருக்கிறேன். நான் நேற்று ஒரு பர்சை இழந்து விட்டேன்" என்றேன். கடை முதலாளி என்னை முறைத்துப் பார்த்தார். அவர் என்னைப் பார்த்த விதம் நான் ஒரு திருடன், மற்றவன் மணிபர்சை அடித்துப் போக வந்தவன் என்று அவர் நினைக்கிறார் என்று எனக்குப் பட்டது. "நான் கண்ணியமானவன்; பெரிய பரீட்சை நிமித்தம் வந்திருக்கிறேன்" என்று மிடுக்காக வெள்ளைக்காரன் போல் ஆங்கிலத்தில் பதில் சொன்னேன்.

அவர் அலட்சியமாக, "படிச்சவங்களெல்லாம் யோக்கியன்னு சொல்ல முடியுமா, சார்?" என்றார். அது மட்டுமல்ல. "பர்ஸ் என்னிடமிருக்கு. ஆனால் அதைக் கண்டெடுத்தது வைஷ்ணவ் என்ற பெயருள்ளவர். அவர் எம். ஜி. எம். படவிநியோகக் கம்பெனியில் குமாஸ்தாவாக இருக்கிறார். அவரை அழைத்து வந்தால் மணிபர்ஸ் பற்றிப் பேசலாம்" என்றார். என் மனம் சோர்ந்தது.

உடனே ஒரு காரை வைத்துக்கொண்டு மெட்ரோ கோல்டுவின் பட விநியோகக் கம்பெனிக்குச் சென்றேன்? வைஷ்ணவ் என்ற குமாஸ்தாவைப் பார்த்தேன். அவர் எண்பது ரூபாய் சம்பளம் வாங்கும் ஏழைக் குமாஸ்தா. அமெரிக்கத் துரை அனுமதித்தால்தான் நான் வர முடியும் என்று சொன்னார். அமெரிக்கத் துரையிடம் சென்று என்னுடைய அழகான ஆங்கிலத்தில் அவர் மனத்தைக் கவர்ந்து வைஷ்ணவ் என்னுடன் வர அனுமதி பெற்றேன். என் நண்பர், வைஷ்ணவ், நான் மூவரும் மறுபடியும் காரில் கம்பெனிக்கு வந்தோம்.


வைஷ்ணவும் அந்தப் பஞ்சாபியும் என்னிடம் அந்தப் பர்ஸின் அடையாளங்களைக் கேட்டனர். சாதாரணமாக ஞாபக மறதியில் ஒரு போட்டி வைத்தால் நான் சுலபமாக யாரையும் வென்று தங்க மெடல் வாங்கக் கூடிய அளவுக்குத் திறமைசாலி. அன்று என்னவோ ஆச்சரியம்! பர்சில் உள்ள ஒரு நூறு ரூபாய் நோட்டின் நம்பர் அப்படியே ஞாபகத்துக்கு வந்தது. அந்தப் பஞ்சாபியும், வைஷ்ணவும் பக்கத்து அறைக்குச் சென்றனர். ஏதோ ஆலோசனை செய்தனர். இரண்டு நிமிஷங்களுக்குப் பின் வெளியே வந்தனர். "சார், இதோ உங்கள் பர்ஸ்!" என்று என்னுடைய பர்சைக் கொடுத்தனர். எனக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. "விளம்பரச் செலவு ஆறு ரூபாய் கொடுங்கள்" என்று கேட்டார் வைஷ்ணவ்.

"ஆறு ரூபாய் என்ன சார், நூறு ரூபாய் எடுத்துக் கொள்ளுங்கள். அஜாக்கிரதையின் காரணமாகக் கையில் காலணா இல்லாமல் போய்விட்ட எனக்குப் பர்ஸ் மறுபடியும் கிடைத்ததே!" என்றேன்.

வைஷ்ணவ் என்னை ஏற இறங்க ஒரு முறை பார்த்தார்.

"சார் நான் ஏழை. விலைவாசி அதிகமாக விற்கும் இந்த நேரத்தில் மனைவி குழந்தைகளுடன் எண்பது ரூபாய்ச் சம்பளத்தில் காலம் தள்ளுவதே எனக்குக் கடினமாக இருக்கிறது. எனக்குத் தெரியும் பணத்தின் அருமை. என் கடமையை நான் செய்திருக்கிறேன். அதற்கு லஞ்சம் கொடுத்து அவமானப்படுத்தாதீர்கள்" என்றார். நானும் என் நண்பரும் எவ்வளவோ மன்றாடியும் ஒரு ரூபாய்கூடச் சன்மானமாக வாங்கிக் கொள்ள மறுத்து விட்டார் அந்த ஏழைக் குமாஸ்தா. மனிதப் பண்பின் உயர்வை அவரிடம் கண்டேன். அதோடு ஒரு விசித்திர உண்மையும் எனக்குத் தெளிவாயிற்று.

உயர்ந்த அரசாங்க உத்தியோகத்தைப் பெற வந்த நான் அதை அடையவே இல்லை. இழந்த பணத்தைத் திருப்பித் தந்தவர் ஒரு சினிமாக் கம்பெனியின் குமாஸ்தா. எதிர் காலத்தில் என் சம்பாதனை சினிமாக் கலையிலிருந்துதான் என்று எனக்குக் காட்டவே இந்த நிகழ்ச்சி நடந்ததோ என்றுகூட நினைக்கத் தோன்றுகிறது. வாழ்வின் நிகழ்ச்சிகள் ஏதோ ஒரு தெய்வீகக் கணக்குப்படி நிகழ்கின்றன என்ற எண்ணம் உண்டாகிறது அல்லவா?





உயிர்ப் பிச்சை!





மாலையில் வீடு திரும்பி யவா ஹாலுக்குள் காலடி வைத்ததுமே ஹாலுக்கு நடுவே சிதறிக் கிடந்த குப்பைகள் தான் சாரதியின் கண்களில் உறுத்தின.

"பூமா! இந்த அக்கிரமத்துக்கு முடிவே கிடையாதா?" என்று இரைந்தார்.

"வந்ததும் வராததுமாக என்ன கோபம் உங்களுக்கு? என்ன நடந்தது?" என்று கேட்டுக் கொண்டே உள்ளிருந்து வந்தாள் பூமா.

"நீயே பார்!" என்று ஹாலின் நடுவே சிதறியிருந்த அலங்கோலத்தைச் சுட்டிக் காட்டினார் சாரதி.

"பத்து நிமிஷங்களுக்கு முன்னாலேதான் பெருக்கிட்டுப் போனேன். இதெல்லாம் புதிதாகச் சேர்ந்த ஐசுவரியம்" என்றாள் பூமா.

"ஐசுவரியமா? யாராவது என்கூட வந்திருந்தால் எவ்வளவு அவமானமாகப் போயிருக்கும்?" என்றார் சாரதி.

"இன்னும் கொஞ்ச நாளைக்கு உங்கள் சிநேகிதர்கள் யாருமே நம்மவீட்டைத் தேடி வராமே இருக்கணும்னு பிரார்த்திக்க வேண்டியதுதான்!" என்று சிரித்துக்கொண்டே கூறிய பூமா, கீழே சிதறியிருந்த வைக்கோல் துரும்புகளையும், மற்றக் குப்பைகளையும் திரட்டிச் சேர்த்துக் கையிலெடுத்து ஜன்னல் வழியே வெளியே போட்டாள்.

இரண்டு குருவிகளும் அந்தச் சமயத்தில் பறந்து வந்து மின்சார விசிறிக்கு மேலிருந்த கிண்ணத்துக்குப் பறந்து சென்று அதன் விளிம்பில் உட்கார்ந்து கொண்டன. அந்தக் கிண்ணத்தில் ஏற்கெனவே வைக்கோல் துரும்புகளும், மெல்லிய சிறகுகளும் பஞ்சுத் துணுக்குகளும் நிரம்பி வழிந்து கொண்டிருந்தன. குருவிகள் அதில் போய் உட்கார்ந்தவுடனேயே அவற்றில் சில கீழே விழுந்தன. அதைப் பற்றிய கவலையே இல்லாமல் குருவிகள் தாங்கள் கொண்டு வந்திருந்த புதிய 'ஐசுவரியம்'களைக் கிண்ணத்தை அடுத்த பிளாஸ்டிக் மின்சாரக் கம்பியில் தொங்க விட்டன.

"பார்த்தீங்களா? ஒரு நிமிஷத்துக்குள்ளே உங்க கண்ணெதிரேயே இவ்வளவு நடந்திருக்கு. குப்பை சேர்ந்திருக்கேன்னு கூச்சல் போட்டு என்ன பயன்?" என்றாள் பூமா.

"பேசாமே அவ்வளவு குப்பையையும் அந்தக் கிண்ணத்திலேயிருந்து எடுத்துத் தூரப் போட்டுட்டா அப்புறம் இந்தப் பக்கமே வராது" என்றார் சாரதி.

"அந்தமாதிரியெல்லாம் பேசவே கூடாது. குருவிக் கூட்டைக் கலைக்கிறது மகா பாவம்" என்றாள் பூமா.

"இந்தக் குருவிகளுக்குக் குப்பை சேர்க்கத்தான் தெரிஞ்சிருக்கே தவிர கூடு கட்டறதுக்குக் கொஞ்சமேனும் தெரியறதா?"

"என்னமோ பாவம்! அவ்வளவு சின்ன மூக்காலே இந்த அளவுக்காவது கூடு கட்டத் தெரிஞ்சிருக்கே. அதை நினைச்சுச் சந்தோஷப்படணும் தெரியுமா?" என்றாள் பூமா.

"ஸார் தந்தி!"

அந்த ஒரு வார்த்தை இருவர் நெஞ்சிலும் மின்சாரம் பாய்ச்சியது போன்ற அதிர்ச்சியை உண்டாக்கியது. சாரதி சட்டென்று எழுந்து பரபரப்புடன் வெளியே சென்றார். பூமா பதறிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

தந்தியைப் பிரித்துப் படித்த சாரதி மலர்ந்த முகத்துடன் உள்ளே வந்தார். "சந்தோஷ சமாசாரம் தான் பூமா. நம்ம மைதிலியை இன்றைய மெயில்லே அனுப்பி வைக்கிறதாக மாப்பிள்ளை தந்தி அடிச்சிருக்கார்!" என்று கூறினார்.

"நல்ல வேளை! இப்பத்தான் உயிர்

உமாசந்திரன்

வந்தது. ஒரு நிமிஷத்துக்குள்ளே எப்படிக் கதிகலங்கிப் போயிட்டேன்!'' என்று நிம்மதிப் பெருமூச்சுடன் கூறினாள் பூமா.

''பூமா! பூமா! என்ன பச்சை மனசு உனக்கு!'' என்று கூறிய சாரதி அவள் கன்னத்தைச் செல்லமாக வருடினார்.

குருவித் தம்பதிகள் ஒன்றும் புரியாமல் ஒன்றையொன்று பார்த்துக் கொண்டன. இந்த மனிதத் தம்பதிகளுக்கு என்ன வந்து விட்டது திடீரென்று?

மறு நாள் வெயில் வருவதற்கு ஒரு மணி முன்னதாகவே சாரதியும் பூமாவும் மைதிலியை அழைத்து வருவதற்காக ஸ்டேஷனுக்குச் சென்றுவிட்டார்கள். குருவி தம்பதிகளுக்கு ஒரே கொண்டாட்டம். இஷ்டப்படி கொட்டமடித்துக் கொண்டு வெளியிலிருந்தும் குப்பையெல்லாம் கொண்டு வந்து குவித்துக் கொண்டிருந்தன.

ஆனால் அவற்றின் நிம்மதி அதிக நேரம் நீடிக்கவில்லை. வெளியே சென்றிருந்த தம்பதிகள் விரைவிலேயே வீடு திரும்பிவிட்டனர்.

''இதென்ன? அவர்கள் மட்டும் வரவில்லையே? தங்கள் பெண்ணையும் அல்லவா உள்ளே அழைத்து வருகிறார்கள்! இனிமேல் நம் வேலை ஒழுங்காக நடந்தாற்போலத்தான்!'' என்று அலுப்புடன் கிசுகிசுத்துக்கொண்டே வைக்கோலைத் தேடி வெளியே பறந்து சென்றன குருவிகள்.

''ஒரே வெய்யில். வெக்கை தாங்க முடியவில்லை!'' என்று கூறியவாறே ஒரு நாற்காலியை இழுத்து மின்சார விசிறிக்கடியில் போட்டுக் கொண்டு உட்கார்ந்தாள் மைதிலி. ''அம்மா, ஸ்விச்சைக் கொஞ்சம் போடேன்!''

''அந்த விசிறி வேண்டாம் மைதிலி. இதாலே விசிறிக்கோ'' என்று ஒரு வெட்டிவேர் விசிறியை அவள் கையில் கொடுத்தாள் பூமா.

''என்னம்மா இது, மின்சார விசிறி இருக்கும்போது இந்த விசிறி எதுக்கு?''

''மைதிலி, மேலே பார்த்தாயானால் புரியும்'' என்றார் சாரதி.

மைதிலி நிமிர்ந்து பார்த்தாள். ''சரிதான்! விசிறிக் கிண்ணத்திலே குருவி குடித்தனம் நடக்கிறதா? அங்கேயும் இதே உபத்திரவம்தான்!'' என்றாள்.

''உபத்திரவம்னு சொல்லாதே, மைதிலி. வயிறும் பிள்ளையுமா வந்திருக்கே. நன்னு பெத்துப் பிழைக்கணும்'' என்றாள் பூமா.

மைதிலிக்கு மணமாகி ஐந்து வருஷங்களாகின்றன. அவள் புருஷனுக்கு விமானப்படையில் வேலை. மூன்று வருஷங்களுக்கு முன்னாலேயே அவளுக்குக் கிடைத்திருக்கவேண்டிய தாய்மைப் பேறு கடைசிக் கட்டத்தில் ஏமாற்றிவிட்டது. பிழைத்ததே புனர் ஜன்மம் என்று சொல்லும் அளவுக்குக் கஷ்டப்பட்டுவிட்டாள். இந்த வருஷம் மீண்டும் கருத்தரித்தபோது அதைப்பற்றித் தன் தாயாருக்கு எழுதக்கூட அவள் விரும்பவில்லை. தன்னாலேயே தெரிகிறபோது தெரியட்டும் என்று இருந்து விட்டாள். அவள் ரயிலில் வந்து இறங்கியபோதுதான் பூமாவுக்கும் சாரதிக்கும் உண்மை நிலைமை புரிந்தது.

மேலே குருவித் தம்பதிகள் தமக்குள் ரகசியம் பேசிக் கொண்டிருந்தன.

''அந்த மனிதப் பெண்ணைக் கவனிச்சயா?''

''அவளுக்கென்ன?''

''என்னவா? அவளுக்கும் உன் நிலைமை தான்!''

''அப்படியா? பின்னே ஏன் கூடு கட்டாமே வெட்டியா உட்கார்ந்திருக்கா?''

''இந்த வீட்டிலே கூடு கட்ட இந்த ஒரு இடம்தானே இருக்கு? நாமதான் முன்னாலேயே அதைப் பிடிச்சு வச்சிருக்கோமே!'' என்று வெற்றிச் சிரிப்பு சிரித்தது ஆண் குருவி.

''நல்ல வேளை! நீதான் எனக்கு இந்த இடத்தைப் பிடிச்சுக் குடுத்தே!''

''எதுக்கும் நாம ஜாக்கிரதையா இருக்கறது நல்லது. மனிதப் பெண்ணுக்கு வேறே இடம் அகப்படாமே, இங்கேயே தன் கூட்டைக் கட்ட வந்தா?''

''அதெப்படி முடியும்? நாமே இங்கே இடம் பத்தாமே தவிக்கிறோமே!''

''அதைப் பற்றி அவளுக்கென்ன கவலை? நம்ம கூட்டைக் கலைச்சுப் போட அவளுக்கு எத்தனை நேரம் ஆகும்?''

''அது ஒரு நாளும் நடக்காது. அவ இந்தப் பக்கம் பார்த்தாக்கூட நான் சும்மா விட மாட்டேன்!'' என்று படபடத்தது பெண் குருவி.

பின்பு விசிறித் தட்டின் ஓரமாக வந்து உட்கார்ந்து மைதிலியைப் பார்த்து மூச்சு விடாமல் பொரிந்து கொட்டியது.

''அந்தக் குருவி ஏன் என்னைப் பார்த்து அப்படிக் கத்தறது?'' என்று தாயாரைப் பார்த்துக் கேட்டாள் மைதிலி.

''நீ அந்தப் பக்கம் பார்க்காதே. கூடு பத்திரமா யிருக்கணுமே என்கிற கவலை அதுக்கு!''

''பிரமாதமா கூடு கட்டி வச்சிருக்கில்லையா? ஊரிலே இருக்கிற குப்பை யெல்லாம் இந்த வீட்டிலே வந்து குவியறதுதான் மிச்சம்!'' என்று மீண்டும் தமது வழக்கமான பல்லவியை ஆரம்பித்தார் சாரதி.

மறு வாரம் குருவிகள் குப்பை சேர்ப்பது நின்று விட்டது. காலை ஒரு தரம் பெருக்கி விட்டால் நாள் முழுதும் அப்படியே சுப்பிரமான தோற்றத்துடன் துலங்கியது. கூடு மட்டும் நிரம்பி வழிந்துகொண்டுதானிருந்தது. பெண் குருவி பெரும்பாலும் கூட்டை விட்டு நகராமல் அதிலேயே உட்கார்ந்திருக்க ஆரம்பித்தது. எப்போதாவது அதற்குப் பசி மிஞ்சிப் போய் இரை தேடப் போக வேண்டிய அவசியம் நேரிட்டால் அது திரும்பி வரும்வரையில் கூட்டுக்குக் காவலாக ஆண் குருவி விசிறி விளிம்பிலேயே உட்கார்ந்திருக்கும்.

'முட்டை இட்டாச்சு போலிருக்கு. இப்போ அடை காக்க ஆரம்பிச்சிருக்கு'' என்றாள் பூமா.

''இன்னும் குஞ்சு பொரிக்கணும். குஞ்சுகளுக்கெல்லாம் இறக்கை முளைச்சுப் பறக்கிற சக்தி வரணும். அப்புறம்தான் இந்தக் குருவிக் குடித்தனம் இங்கேயிருந்து போகும்னு சொல்லு!''

''இத்தனை நாள் பொறுத்தாச்சு. இன்னும் கொஞ்ச நாள்தானே!''

''அதுக்கப்புறமாவது கூட்டைக் கலைக்கப் போடலாமா? கூடாதா?''


டி.எஸ்.ஆர் & கோ
கும்பகோணம்

"அந்தக் கேள்வி இப்போ எதுக்கு? உ இங்கே இருக்கிற வரையிலே கூட்டைக் கலைக்கிற பேச்சே பேசக் கூடாது!" என்றாள் பூமா கண்டிப்பாக.

ஆனால் அந்தக் கண்டிப்புக்குச் சோதனை மறு நாளே வந்தது. திடீரென்று வீட்டில் மின்சாரமே வேலை செய்யவில்லை. என்ன கோளாறு நேர்ந்திருக்கிறது என்று பார்த்துச் சரிப்படுத்துவதற்காக மின்சார மெக்கானிக்கை அழைத்து வந்தார் சாரதி. மெயின் போர்டையும் மற்ற இடங்களையும் பார்த்த மெக்கானிக் ஹாலுக்கு வந்து குருவிக் கூட்டை அண்ணாந்து பார்த்தான்.

"சரிதான்! கோளாறு இங்கேதான் இருக்கு!" என்று கூறிய அவன் சாரதியின் பக்கம் திரும்பி, "ஸார், விசிறிக் கிண்ணத்திலே இருக்கிற அடைசலையெல்லாம் உடனடியா எடுத்துப் போட்டாகணும்!" என்றான் கண்டிப்பாக.

"குருவிக் கூட்டைக் கலைக்கிறதா? கூடவே கூடாது!" என்று கத்தினாள் பூமா.

"வேறே வழியில்லேயம்மா. அந்த இடத்திலேதான் வயரிங் பழுதாயிருக்கு! இதை இப்படியே விட்டு வச்சா கரண்டு வராதுங்கறது மட்டுமில்லே, குருவிகளோட உயிருக்கே ஆபத்தாக முடிஞ்சிடும்!" என்றான் மெக்கானிக்.

இந்தப் பயமுறுத்தலுக்கு மேல் பூமாவுக்கு மறுத்துச் சொல்ல வாயேது! ஆனால் கூட்டைக் கலைத்துப் போடும் யோசனையை அவள் எப்படி ஒப்புக்கொள்ள முடியும்? இந்த இக்கட்டான நிலையில் "கூட்டைக் கலைக்கவே வேண்டாம்! நலுங்காமே அப்படியே எடுத்து விசிறிக் கிண்ணம் மாதிரி வேறொரு கிண்ணத்திலே மாத்தி வைச்சிட்டா?" என்றாள் மைதிலி.

"ஐடியா!" என்று கத்தினார் சாரதி.

"அந்த மாற்றுக் கிண்ணத்தை மாட்டி வைக்கறதுக்கு இடம் தேடணும்!" என்றாள் பூமா, அரை மனத்துடன்.

"என்னோட அறையிலே கொடி கட்டறதுக்காக ரெண்டு வளையங்கள் கூரைத் தளத்திலேயே பொருத்தி வச்சிருக்கே. அதிலே ஒண்ணிலே மாட்டி வச்சிட்டா தொந்தரவே இல்லே!" என்றாள் மைதிலி.

கடைசியில் அந்த யோசனையே ஏகமனதாக நிறைவேறியது. விசிறிக் கிண்ணத்தைப் போன்று அமைப்புள்ள அலுமினியக் கிண்ணமொன்றைத் தேடி எடுப்பது கஷ்டமாக இல்லை. அதன் விளிம்பில் நன்கு துளைகள் செய்து வளையத்தில் மாட்டுவதற்கு வசதியாகக் கம்பிகளைப் பொருத்தி விட்டான் மெக்கானிக். கூட்டை அந்தக் கிண்ணத்தில் மாற்றும் பொறுப்பை அவனிடம் விடச் சம்மதிக்காமல் பூமா தானே ஏற்றுக் கொண்டாள்.

கூட்டில் நான்கு முட்டைகள் இருந்தன. அந்த முட்டைகள் கீழே விழுந்து உடைந்து விடாமல் அந்தக் கூட்டை ஜாக்கிரதையாக விசிறிக் கிண்ணத்திலிருந்து பெயர்த்தெடுத்து அலுமினியக் கிண்ணத்தில் மாற்றி வைப்பதற்குள் பூமா பட்ட பாடு! அதே சமயம் இரண்டு குருவிகளும் அவளைச் சுற்றிச் சுற்றிப் பறந்து கத்திய கத்தல்!

டென்மார்க்கில் புகழ்பெற்ற சிற்பி ஒருவன் இருந்தான். ஒரு நாள் அவன், தான் செதுக்கிய சிலையின் அருகிலே அமர்ந்து மௌனமாகக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தான்.



"இத்தனை அழகிய சிலையைச் செதுக்கிய நீ இப்படி உட்கார்ந்து அழுவானேன்?"—அக் காட்சியைக் கண்ட மக்கள் கேட்டனர்.

"அதுவா? நான் செதுக்கிய சிலையில் என்னாலேயே குற்றம் கண்டு பிடிக்க முடியவில்லையே! அதனால் தான்!" என்றான் அவன்.

மக்கள் அவனைத் தேற்றினர். "உன் கலை உச்ச நிலையை அடைந்து விட்டது. மகிழ்ச்சி அடைவதற்குப் பதிலாக இப்படியா வருத்தப்படுவது?"

"என் கலையின் வளர்ச்சி நின்றுவிட்டதே! இனி என் கலை மேலும் உச்ச நிலை அடையாதே! இதை நினைத்தால் யாருக்குத்தான் வருத்தமாயிராது?" என்றான் சிற்பி.

"தெய்வமே! இந்தக் குருவிகளோட சாபத்துக்கு எங்களை ஆளாக்கி விடாதே! நல்லபடியா அவ்வளவு முட்டைகளும் குஞ்சு பொரிச்சு இந்தக் குருவிகள் சந்தோஷமாயிருக்கணும். எங்க மைதிலியை அதுகள் வாழ்த்தணும்!" என்று கண்களில் நீர் பெருகப் பிரார்த்தித்தவாறே தன் கடமையை நிறைவேற்றினாள் பூமா.

குருவிகள் விரைவிலேயே புதிய கூட்டுக்குப் பழக்கப்பட்டு விட்டன.

நள்ளிரவைத் தாண்டிய நிசி வேளை. இலைகளின் அசைவுகூடத் தென்படாத ஆழ்ந்த அமைதி எங்கும் நிலவியிருந்தது. மெய்ம் மறந்து தூங்கிக் கொண்டிருந்தாள் மைதிலி. அவளுக்குத் துணையாகத் தரையில் ஒரு பக்கமாகப் படுத்து அயர்ந்த தூக்கத்தில் ஆழ்ந்திருந்தாள் பூமா.

திடீரென்று அந்த நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு கிளம்பியது குருவிகளின் கூச்சல். மைதிலி திடுக்கிட்டுக் கண் விழித்தாள். ஜன்னல் விளிம்பிலே அதென்ன! நெருப்புத் தணல்களாக ஜொலிக்கும் இரண்டு கண்கள்!

"அம்மா! அம்மா!"

"என்ன மைதிலி, என்ன?" என்று கேட்டுக் கொண்டே சுருட்டி வாரிக் கொண்டு எழுந்தாள் பூமா. மைதிலி பாய்ந்து சென்று தாயாரைக் கட்டிக் கொண்டாள்.

குருவிகள் முன்னிலும் பீதியுடன் கூச்சலிட்டவாறு சுற்றிச் சுற்றிப் பறந்தன.

பூமாவும் அந்த நெருப்புக் கண்களைப் பார்த்து விட்டாள். "ஐயையோ, பூனை! பூனை!" என்று கத்திக் கொண்டே விளக்கைப் போடுவதற்காக ஸ்விச் போர்டு இருக்கும் பக்கமாக ஓடினாள். அதற்குள் பூனை

ஜன்னல் விளிம்பிலிருந்து குருவிக் கூட்டை நோக்கித் தாவி விட்டது.

பூமா ஸ்விச்சைப் போட்டதும் அறையில் வெளிச்சம் நிரம்பியது. அதே சமயம் சாரதியும் சந்தடி கேட்டு அங்கு ஓடி வந்தார். மறுகணம் பூனை ஜன்னல் வழியே மீண்டும் வெளியே பாய்ந்தோடி விட்டது.

"குருவிக் குஞ்சுகள் என்ன கதியாச்சோ தெரியலையே!" என்று பதைப்புடன் கூறினாள் பூமா.

சாரதி ஜன்னலில் ஏறிக் கூட்டுக்குள் எட்டிப் பார்த்தார். கூடு காலியாயிருந்தது. குருவித் தம்பதிகள் ஈனமாகக் கத்தின.

"பூனையைப் பத்தின நினைவில்லாம ஜன்னலுக்கு எட்டினாப் போல் கூட்டைத் தொங்க விட்டோமே! இவ்வளவு நாள் கட்டிக் காத்ததெல்லாம் வீணாவிடுத்தே!" என்று அங்கலாய்த்தாள் பூமா.

"அம்மா!" — அலறல் எழுந்தது மைதிலியிடமிருந்து. கட்டிலில் சாய்ந்தாள் அவள்.

"மைதிலி!" என்று கத்திக் கொண்டே பதற்றத்துடன் பாய்ந்து சென்று அவளைத் தன் மடியில் தாங்கிக் கொண்டாள் பூமா. "சீக்கிரம் ஆஸ்பத்திரிக்குப் போன் செய்யுங்களேன்!" என்று பதறினாள்.

அதற்குப் பிறகு ஒவ்வொன்றும் புயல் வேகத்தில்தான் நடந்தது. சாரதி ஆஸ்பத்திரிக்குப் போன் செய்து ஆம்புலன்ஸை வரவழைத்தார். மைதிலியை ஏற்றிக் கொண்டு ஆம்புலன்ஸ் ஆஸ்பத்திரியை நோக்கி விரைந்தது. தாமதமில்லாமல் மைதிலியைப் பிரசவ வார்டுக்கு அழைத்துச் சென்று விட்டனர்.

வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு வெளி வராந்தாவில் கணவருடன் நின்றிருந்தாள் பூமா.

"குருவிக் குஞ்சுகளைப் பூனைக்கு இரையாக்கின பாவத்தை நினைச்சா மனசு நடுங்குகிறது. குருவி தம்பதிகளோட துக்கமும் தவிப்பும் நம்ம மைதிலியைப் பாதிக்காம இருக்கணுமேன்னு பயமாயிருக்கு!" என்று பூமா கூறிக் கொண்டிருக்கும் போதே டாக்டர் அவர்களிடம் வந்தார்.

"ரொம்பவும் சிக்கலான கேஸ். இறைவன் அருளால் தாயும் குழந்தையும் உயிரோட மீண்டு வந்தால் உங்க அதிர்ஷ்டம்தான் !"

டாக்டரின் இந்த வார்த்தைகள் பூமாவின் மனத்தைப் புதிய கோணத்தில் திருப்பின. "பார்த்தீர்களா! டாக்டர் சொன்னதும்தான் ஞாபகம் வந்தது. புறப்படும் அவசரத்தில் திருப்பதிப் பெருமாளுக்கு முடிந்து போடாமலே வந்து விட்டேன்!" என்று கணவரைப் பார்த்துக் கூறிய பூமா, "வாருங்கள், இப்போதே வீட்டுக்குப் போய் ஏழுமலையானுக்குப் பிரார்த்தனை செலுத்த வேண்டும்!" என்று அவசரப்படுத்தினாள்.

" நீங்கள் கவலையில்லாமல் போய் வாருங்கள். இங்கே நிலைமையில் ஏதாவது மாறுதல் ஏற்பட்டால் உடனுக்குடன் தெரிவிக்கிறேன்" என்று தைரியம் கூறினார் டாக்டர்.

வீட்டுக்கு வந்ததும் முதல் காரியமாக மஞ்சள் துணியில் திருப்பதிப் பெருமாளுக்கு முடிந்து போட்டு விட்டு ஆயாசத்துடன் ஹாலில் வந்து உட்கார்ந்தாள் பூமா. சாரதி செய்தித் தாளைப் புரட்டியவாறு தம் கவலையை மறக்க முயன்று கொண்டிருந்தார். விர்ரென்று பறந்து வந்து விசிறிக் கட்டின் விளிம்பில் வந்து உட்கார்ந்து கொண்டது பெண் குருவி. குற்ற உணர்ச்சியுடன் ஈனமாக அந்தக் குருவியைப் பார்த்தாள் பூமா. மறுகணம் அவள் பார்வையில் கேள்விக்குறி தோன்றியது. குருவி தன் அலகில் எதையோ கொத்தி வந்திருக்கிறதே; எதற்காக?

அதே சமயம் ஆண் குருவியும் அதன் பக்கத்தில் வந்து உட்கார்ந்தது. அதன் அலகிலும் ஏதோ ஆகாரப் பொருள். இரண்டும் கிகிகி வென்ற தம் மொழியில் எவ்வளவு குதூகலமாகப் பேசிக் கொள்கின்றன!

"பார்த்தாயா பூமா! பெத்த பாசம் கொஞ்சமாவது இருக்கா இந்தக் குருவிகளுக்கு? குஞ்சுகள் பறிபோனதைப் பற்றி அணுவாவது கவலைப்படறதா பாரு!" என்றார் சாரதி.

"வாழ்விலே ஆபத்துக்கள் அதிகமாக அதிகமாக அன்பும் பாசமும் குறைந்து கொண்டே தான் போகுமா?" என்று பெருமூச்செறிந்தாள் பூமா.

பார்த்துக் கொண்டிருக்கும் போதே இரண்டு குருவிகளும் விருட்டென்று பக்கத்து அறைக்குப் பறந்து சென்றன.

"இதுங்களுக்கு இன்னும் அங்கே என்ன வேலையிருக்கு?" என்று கூறிக் கொண்டே எழுந்த பூமா அந்த அறையை நோக்கிச் சென்றாள். சாரதியும் அவளைத் தொடர்ந்தார். அறைக்குள் காலடி வைத்த மறுகணம் அப்படியே ஸ்தம்பித்து நின்று விட்டனர். குருவிகளின் கூட்டை மாட்டி வைத்திருந்த அதே மூலையில் நேர் கீழே அழுக்குத் துணிகளைப் போட்டு வைப்பதற்கான அழுக்குக் கூடை ஒன்று இருந்தது. அந்தக் கூடையின் விளிம்பில் சில கணங்கள் உட்கார்ந்திருந்த இரு குருவிகளும் சட்டென்று கூடைக்குள் மறைவதைப் பார்த்துத்தான் பூமாவும் சாரதியும் வியப்புடன் நின்றுவிட்டனர். இதென்ன! கூடைக்குள்ளிருந்து மெல்லிய கீச்சொலி கேட்கிறதே! அப்படியானால்... அப்படியானால்...

காரிருளில் தோன்றும் மின்னல் போல் அந்த அதிசயத்தைப் பற்றின உண்மை பளிச்சென்று புலனாயிற்று. குஞ்சுகள் பூனைக்கு இரையாகி விட்டன வென்று அவர்கள் நினைத்தது தவறு! பூனை கூட்டை நோக்கித் தாவிய அதிர்ச்சியில் அவ்வளவு குஞ்சுகளும் நேர் கீழே இருந்த பிரம்புக் கூடைக்குள் விழுந்து விட்டிருக்கின்றன. ஆச்சரியமான விதத்தில் தெய்வமும் அந்தக் குருவிக் குடும்பத்துக்குப் புது வாழ்வு அளித்து விட்டது.

அதே சமயம் ஹாலில் டாக்டர் வரும் ஒலி கேட்டது. "மிஸ்டர் சாரதி! மிஸ்டர் சாரதி!" என்று அழைத்துக் கொண்டே மகிழ்ச்சியுடன் அங்கு வந்த டாக்டர், சாரதியின் கையைப்பிடித்துக் குலுக்கினார். "உங்கள் மகள் அதிர்ஷ்டசாலி. இயற்கையாகவே சுகப் பிரசவம் ஆகி விட்டது. உங்களுக்குப் பேரன் பிறந்திருக்கிறான்!" என்று அவர் கூறிய போது பூமாவால் தன் காதுகளையே நம்ப முடியவில்லை.

" குருவிக் குஞ்சுகளைக் காப்பாற்றின தெய்வம்தான் நம் குழந்தைக்கும் உயிர்ப் பிச்சை கொடுத்து நம்மை வாழ வைத்தது" என்று நெஞ்சு தழுதழுக்கக் கூறினாள் பூமா.

பத்தினிக் கோட்டம்

அத்தியாயம் முப்பத்தைந்து

பனி மூட்டம்

ஆந்திர நாட்டின் தலைநகரான வேங்கி அன்று பரபரப்புடனும், பீதி மயமான சுறுசுறுப்புடனும் காணப்பட்டது. வீதிகளில் ஆங்காங்கே, மக்கள் கூட்டம் கூட்டமாக நின்று தமக்குள் ஏதோ இரகசியம் பேசிக் கொண்டனர். நாட்டில் ஒரு பெரும் மாறுதலோ, வியப்புக்குரிய நிகழ்ச்சியோ, பயங்கர நெருக்கடியோ ஏற்படப் போவதை எதிர் பார்ப்பவர்கள் போல் அவர்கள் அரண்மனையை நோக்கிச் சாரி சாரியாகச் சென்று கொண்டிருந்தனர். நகரைச் சுற்றிப் பல்வேறு பாளையங்களில் தங்கியிருந்த படை வீரர்கள் எச்சரிக்கை செய்யப் பெற்றவர்களாக நகர வீதிகளில் மத மதர்ப்புடன் விரைந்து கொண்டிருந்தனர். குதிரைப் படையில் ஒரு பெரும் பகுதி வேங்கி நகருக்குத் தெற்கே ஓடும் கிருஷ்ணையாற்றை நோக்கிச் செல்வதாய்த் தெரிந்தது. அந்த ஆற்றங்கரையோரம் அமைந்த 'கொட்டகாரம்' ஒன்றில், வேற்று நாட்டு மன்னன் ஒருவன் சிறை வைக்கப்பட்டிருக்கிறான் என்றும் அதனால் அந்தக் கொட்டகாரத்தைக் காவல் காக்கவே ஆந்திர நாட்டுக் குதிரைப் படை அங்கு விரைகிறது என்றும் மக்கள் பேசிக் கொண்டனர்.

வேங்கி நகரம் இப்படி விறுவிறுப்புடன் விளங்க அதன் நடுநாயகமாக அமைந்திருந்த அரண்மனைப் பகுதியோ ஆழ்ந்த அமைதி நிலவும் பனிக் குன்றமாகக் காட்சியளித்தது. அதைக் காட்டிலும் அந்த அரண்மனை ஆலோசனை மண்டபத்தில் இன்னும் அதிகமான நிசப்தம் நிலவிக் கிடந்தது.

ஆலோசனை மண்டபத்துக்கு வெளியே ஆந்திர நாட்டின் அமைச்சர் குழுவும், அரசியல் உயர் அதிகாரிகளும் படைத் தலைவர்களும் குழுமி நின்றனர். அவர்கள் ஒவ்வொருவரது முகத்திலும் கலவரக் குறிகள் தென்பட்டன.

மண்டபத்தின் உள்ளே உயரமான மேடை மீது போடப்பட்டிருந்த அழகிய ஆசனத்தில் சுமார் ஐம்பது வயது மதிக்கத் தக்க அதிகாயபாகுவான மனிதர் ஒருவர் கவலையே வடிவாகத் தலையைத் தாங்கிப் பிடித்தவாறு வீற்றிருந்தார். அவரது இடக் கையில் பட்டோலைக் குழல் ஒன்று இறுகிக் கிடந்தது. ஆசனத்துக்குப் பின்னால் சற்றுத் தள்ளி நின்று கவரி வீசிக் கொண்டிருந்தாள் ஒரு பணிப் பெண். மற்றப்படி அந்த விசாலமான மண்டபத்தில் வேறு யாருமே இருப்பதாகத் தெரியவில்லை.

யார் அந்த மனிதர்? விரிந்து பரந்த சளுக்கிய சாம்ராஜ்யத்தின் மகா சக்கரவர்த்தி விக்கிரமாதித்தனின் ஒன்றுவிட்ட தம்பியான ஆந்திர மன்னர் விஷ்ணு வர்த்தனர் தான் அவர்.

ஆழ்ந்த அமைதியில் தோய்ந்த ஒவ்வொரு விநாடியும் ஏதோ ஒரு பூகம்பம் வெடிப்புக்கு நேரத்தை நெருக்கி வைத்துவிட்டு நகர்வது



போல் தோன்றியது. அப்படிப் புழுங்கிக் குமுறிப் புகைந்த சில விநாடிகளுக்குப் பின் "எங்கே அந்தச் சிவிகை தூக்கி? - கொண்டு வாருங்கள் அவனை!" - இடிபோன்ற குரலில் இவ்வாறு கூறிக்கொண்டே சடாரெனத் துள்ளி எழுந்தார் விஷ்ணுவர்த்தனர்.

மறுகணம் அந்த மண்டபத்தின் பக்கவாட்டுக் கதவொன்று



திறக்கப்பட்டது அதன் வழியே ஆந்திர நாட்டு அரசியல் செயலாளர் ஒருவர் முன்னால் வர அவருக்குப் பின்னால் இரு வீரர்களின் ஈட்டி முனைக்கிடையில் கூனிக் குறுகிக் கைகட்டி வந்த நாகோதரன் சிரம் தாழ்த்தி வணங்கி எழுந்து ஒரு புறமாய்ப் போய் ஒதுங்கி நின்றான். வியர்வை வழிந்துகொண்டிருந்த அவனுடல் கிடுகிடுவென நடுங்கியது. மனமோ ஒரேயடியாகக் கலங்கி உதறலெடுத்தது. உத்தமசீலியின் கட்டளைப்படி பல்லவ மன்னன் பரமேசுவரவர்மனை அழைத்துக்கொண்டு வேங்கி நகருக்கு வந்து சேர்ந்த அவன் இப்படி ஒரு நிலைமை ஏற்படுமென என்னளவும் எதிர் பார்க்கவில்லை. ஆந்திர இளவரசியின் ஓலையோடு வந்திருக்கும் தனக்கும் பல்லவ மன்னனுக்கும் பிர

மாத வரவேற்புக் கிடைக்கும் என்று தான் எண்ணியிருந்தான். ஆனால், இங்கு நடந்ததென்ன? பரமேசுவர வர்மன் வேங்கி நகருக்குள் பிரவேசித்திருக்கிறான் என்னும் செய்தி அறிந்ததுமே சினந்து பொங்கின ஆந்திர மன்னர் அவனைக் கிருஷ்ணையாற்றங் கரையருகிலேயே மடக்கி அங்கிருந்த கொட்டகாரம் ஒன்றில் சிறைக் கைதி போல் அடைத்துப் பலத்த காவலும் போடச் செய்து விட்டார். பிறகு ஆந்திர நாட்டு அரசியல் செயலாளரிடம் தான் வந்த விவரத்தைக் கூறி ஓலையைக் கொடுத்தபின் நிலைமை இன்னும் மோசமாகியது. மன்னரின் கட்டளைப் படி இரண்டு நாள் சிறைவாசம் அனுபவித்த அவன் இதோ இன்று விசாரணைக்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிறான். இந்த விசாரணைக்குப் பின் தனக்கு எத்தகைய தண்டனை கிடைத்தாலும் அதைப் பற்றி அவன் கவலைப்படவில்லை. ஆனால் பல்லவ மன்னனின் கதி என்ன ஆகுமோ என்பதை நினைக்கும்போதுதான் அவனுக்கு மூச்சே நின்றுவிடுவது போன்ற மரண வேதனை உண்டாகியது....

சிறிது நேரம் அவனையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த விஷ்ணுவர்த்தனர் சட்டென்று திரும்பித் தம் அரசியல் செயலாளரை நோக்கியவாறு, ''இவன்தான் ஆந்திர இளவரசிக்குச் சிவிகை தூக்கியாகச் சென்ற நாகோதரன் என்பவனோ?'' என்று கடுகடுத்த குரலில் கேட்டார்.

''ஆம், அரசே! தங்கள் அருமைச் செல்வி உத்தமசீலியாரின் தூதுவனாக வந்திருப்பவனும் இவனே!'' என்று பணிவுடன் பதிலிறுத்தார் அரசியல் செயலாளர்.

தலையை மேலும் கீழுமாக ஆட்டிக் கொண்டு ஒரு கணம் மௌனமாக இருந்த விஷ்ணுவர்த்தனர் வெடுக்கென்று தலைதூக்கி, ''என் அருமைச் சகோதரர் விக்கிரமாதித்தரின் ஜன்மப் பகைவனான பல்லவ மன்னனை இங்கே அழைத்து வரத் துணிந்தவனும் இவன் தானோ?'' என்று கண்களை இடுக்கிக் கொண்டு வினவினார்.

''தங்கள் அன்புக் குமாரியின் ஆணையின்படியே அந்தக் காரியத்தை இவன் செய்திருக்கிறான், அரசே!'' என்று அமைதியாகச் சொன்னார் அரசியல் செயலாளர்.

'ஓகோ' என்று வெறுப்புடன் தலையசைத்துக் கொண்ட விஷ்ணுவர்த்தனர், ''அப்படியானால் ஆந்திர இளவரசியின் தூதுவனாக வந்திருக்கும் அவனுக்கு ஓர் இருக்கையைக் கொடுத்து அமரச் சொல்லுங்கள்'' என்றவாறு தம் ஆசனத்தில் கம்பீரமாக நிமிர்ந்து அமர்ந்தார்.


நாகோதரன் இதைக் கேட்டுத் திடுக்குற்றான். ''மன்னியுங்கள் பிரபு! அடியேனுக்கு இவ்வளவு பெரிய தண்டனை அளிக்காதீர்கள் பிரபு!'' என்று கைகூப்பிக் கூறிக் கொண்டே பின்னால் நகர்ந்தான். இதற்குள் அங்கு நின்ற காவல் வீரர்களில் ஒருவன் விரைந்து போய் ஒரு குரிசிலை எடுத்து வந்து அவனுக்குப் பின்னால் போடவே, அதில் தட்டுத் தடுமாறிச் சாய்ந்தான். சாய்ந்த அதே வேகத்தில் எழுந்திருக்க முயன்ற அவனை, அரசியல் செயலாளர் தடுத்து, ''நாகோதரா! நீ இப்போது சிவிகை தூக்கும் பணியாளன் அல்லன். எங்கள் மதிப்புக்குரிய ஆந்திர இளவரசியாரின் தூதுவன். அதை மறந்துவிடாதே!'' என்றார் கனிந்த குரலில்.

நாகோதரனுக்கு ஒரே நடுக்கமாகி விட்டது. அவனால் நிற்கவும் முடியவில்லை; உட்காரவும் இயலவில்லை. முட்டிக் கால்களை மடக்கிக் குரிசிலில் அமர்வது போன்ற பாவனையில் அப்படியே ஒடுங்கி முடங்கி நின்றான் அவன்.

ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியவராய்ச் சிறுபொழுது மௌனமாக இருந்த ஆந்திர மன்னர் திடுமெனத் தலை தூக்கித் தம் கையிலிருந்த ஓலைக் குழலை நாகோதரனுக்கு முன்னால் அலட்சியமாக எறிந்து, ''ஏ, தூதனே! நீ எடுத்து வந்திருக்கும் இந்த ஓலையைப் படித்துப் பார்க்க எனக்கு விருப்பமில்லை. அதற்குரிய பொறுமையும் இப்போது என்னிடம் இல்லை. ஆந்திர இளவரசி உன்னை இங்கு அனுப்பியதன் நோக்கத்தை எனது அரசியல் செயலாளரின் வாயிலாகக் கேள்விப்பட்டது முதலே என் மனம் வெகுவாகக் குழம்பி விட்டிருக்கிறது. எனவே, நான் கேட்கும் கேள்விகளுக்கு உன் இளவரசியின் சார்பில் நீயே பதில் சொல்ல வேண்டும். உன்னுடைய பதில்கள் எனக்குத் திருப்திகரமாக இல்லையென்றால், நீ மட்டுமல்ல; உன்னுடன் வந்திருக்கும் என்னுடைய பகைவனும், அவனை இங்கு அனுப்பி வைத்த ஆந்திர இளவரசியும் உலகத்தில் இனி மூச்சு விடும் உரிமையை இழந்து விடுவீர்கள் — எச்சரிக்கை!'' என்று அடித் தொண்டையில் உறுமினார்.

தன் எதிரே சுழன்று வந்த ஓலைக் குழலைச் சிக்கெனப் பிடித்து மார்பில் அணைத்துக் கொண்ட நாகோதரன், ஆந்திர மன்னர் சொன்னதைக் கேட்டுக் கதிகலங்கித் திணறி விட்டான்.

தினமும் உங்கள் உணவு




அறுசுவை விருந்தாக
அமைய

OK

டபிள் ரிபைன்ட்

எடிபிள் ஆயில்



உபயோகித்து
சமையல் செய்யுங்கள்.

தித்திப்பு, கார வகை உணவுகள்
தயாரிப்பதற்கு மிகவும் சிறந்தது
அது ஆரோக்யத்திற்கு ஏற்றது:
வைட்டமின்கள் A மற்றும் D யுடன் கூடியது
சுத்தமாகப் பாக செய்யப்பட்டு 3 வசதியான
குடும்பத்திற்கேற்ற சைஸ்களில்
கிடைக்கின்றது

OK பரிசுக் கூப்பன்களை சேகரியுங்கள்

**தி ஈஸ்ட் ஏஷியாடிக்
கம்பேனி (இந்தியா)
பிரைவேட் லிமிடெட்.
சென்னை - 1**

EP-EAC 10

முகம் கடுமை ஏறிச் சிவக்க அவனை விழித்து நோக்கிய விஷ்ணுவர்த்தனர், ''ஏ, தூதுவனே! எனக்கும் என் அருமைச் சகோதரர் விக்கிரமாதித்தருக்கும் இடையே பகையையும் பிளவையும் ஏற்படுத்தக் கூடிய இந்த ஓலையை உன் இளவரசி எழுதியனுப்பியதன் நோக்கம் என்ன?'' என்று வினவினர்.

வெடவெடத்த நாகோதரன் தன் கையில் இருந்த ஓலைக் குழலை அப்படியும் இப்படியுமாகத் திருப்பிப் பார்த்தான். பிறகு அதன் மேல் சுற்றப்பட்டிருந்த பட்டுக் கயிற்றை அவிழ்த்துப் பட்டோலையைப் பிரித்து அதிலே தன் பார்வையைப் பரபரப்புடன் ஓட்டினன். கறுத்துக் கிடந்த அவன் முகம் இலேசாக மலர்ந்தது. ''அப்பா! இந்த உலகத்தில் நிரந்தரமானவை மூன்று; தர்மம், சத்தியம், உண்மை என்பவைதாம் அவை! அவற்றை நிலைநாட்ட எந்தத் தனி மனிதனும் எத்தகைய தியாகத்துக்கும் எப்போதும் தயாராக இருக்கவேண்டும் என்று தாங்கள் அடிக்கடி என்னிடம் சொல்லி வந்திருக்கிறீர்கள். அந்தப் புனித போதனையை நினைவில் கொண்டே இவ்வோலையைத் தங்களுக்கு எழுதத் துணிந்தேன்....'' என்று வாய் குழற வார்த்தை வார்த்தையாக நிறுத்திப் படித்தான் அவன்.

விஷ்ணுவர்த்தனரின் புருவங்கள் நெரிந்தன. ''ஹூம்! இந்தப் போதனை தனி மனித வாழ்க்கைக்கு உரியது; அரசியலுக்கு அப்பாற்பட்டது!'' என்றார் கசப்பும் வெறுப்புமாக.

நாகோதரன் தன் பார்வையைப் பதற்றத்துடன் ஓலை மீது ஓட்டினன். ''என் அருமைத் தந்தையே! தனி மனித வாழ்க்கைக்குரிய போதனைகள் அரசியலுக்கு அப்பாற்பட்டவை என்று தாங்கள் கருதலாம். அரசியல் என்பது கல்லுக்கும் மண்ணுக்கும் ஏற்பட்டதல்ல; ஒவ்வொரு மனிதனும் ஒரு கட்டுப்பாடான சமூக நியதிக்குள் நின்று அதிலே அவன் எவ்வித இடையூறுமின்றி இன்பமாக இயங்கி வர வேண்டும் என்பதற்காகவே ஏற்பட்டது. எனவேதான்.....''

ஆந்திர மன்னரின் வாயிலிருந்து சீற்றத்துடன் சொற்கள் புறப்பட்டன. ''அப்படித்தான் இருக்கட்டுமே! ஆந்திரம் என்ற இந்த அழகிய நாட்டையும், அதன் ஆட்சிப் பீடத்தையும், அதற்குரிய அதிகார அந்தஸ்துகளையும் எனக்கு வழங்கி, என்னை ஒரு முடி மன்னனாக வாழ வைத்திருக்கும் என் அன்புச் சகோதரர் விக்கிரமாதித்தருக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபடுவது நன்றி கெட்ட செயல் அல்லவா? வாழ்வளித்த ஒருவருக்கு மனமறியத் துரோகம் செய்வது பாவமல்லவா? தனி மனித வாழ்க்கைத் தர்மத்தையே காற்றில் பறக்க விடுவது போல் ஆகாதா?''

திகிலுடன் பட்டோலையைத் திருதிருவெனப் பார்த்த நாகோதரன் சட்டென்று நிமிர்ந்து படித்தான்: ''.... என்று தாங்கள் சொல்வீர்கள் என்பது எனக்கு நன்ருகத் தெரியும், அப்பா! ஆனால் உங்களுக்கு ஒருவர் வாழ்வளித்தார் என்பதற்காக அவரது அநியாய அக்கிரமங்களுக்கும், அதர்ம வெறியாட்டங்களுக்கும் துணை நிற்பதோ, அல்லது அவற்றை எதிர்க்காமல் ஒதுங்கிப் போவதோதான் தர்மம், நியாயம், நன்றி காட்டும் செயல் என்றெல்லாம் நீங்கள் நினைப்பது தவறல்லவா? வைத்தியக்காரனுக்குப் பாம்பின் விஷம் அநுகுணமாயிருந்தது என்பதற்காக அதைப் பந்தியில் பரிமாற அநுமதிக்கலாமா?''

தொண்டையில் ஏதோ அடைத்துக் கொண்டது போல் சிறிதே திணறவிட்ட விஷ்ணுவர்த்தனர் அவனை வெறித்துப் பார்த்தார். நாகோதரன் தான் படிப்பதை நிறுத்தாமல் மேலும் தொடர்ந்தான்: ''நீங்கள் நினைப்பதுபடியே பார்த்தாலும் அது நியாயம் என்று சொல்ல முடியாது, அப்பா! ஏனென்றல், உங்கள் ஆளுகைக்குட்பட்ட ஆந்திர நாட்டைச் சளுக்கியர்கள் நம் வசம் ஒப்படைத்து வைத்திருப்பது அவர்களுடைய ஆட்சி நிர்வாக சௌகரியத்துக்காகத்தானேயொழிய நமக்கு அதில் பரிபூரண உரிமை இல்லை என்பதையும் நாம் மறந்து விடக் கூடாது!''

''பரிபூரண உரிமை எனக்கு ஏன்? இந்த உரிமையே போதாதோ?'' என்று கடுகடுத்தார் விஷ்ணுவர்த்தனர்.

நாகோதரன் அவசரமாகப் படித்தான்: ''.... என்று நீங்கள் நினைப்பதை அறிந்துதானே என்னவோ, அந்த அரைகுறை உரிமையையும் பறித்துவிட உங்கள் அருமைச் சகோதரர் விக்கிரமாதித்தர் இப்போது திட்டம் போட்டு விட்டார் அப்பா!''

அடிபட்ட வேங்கை போல் ஆசனத்தை விட்டுத் துள்ளியெழுந்த ஆந்திர மன்னர் ''என்ன இது, அபத்தம்!'' என்று சீறினர்.

''ஆம், அப்பா! ஆந்திர நாட்டின் அரச பதவியிலிருந்து தங்களை அகற்றி விட்டு, அதைத் தமது சளுக்கிய சாம்ராஜ்யத்தின் நேர் ஆட்சியிலே வைத்துக் கொள்ள முடிவு செய்து விட்டார் விக்கிரமாதித்தர்!'' என்று நிதானமாகப் படித்து நிறுத்தினன் நாகோதரன்.

''நம்ப முடியாத கட்டுக்கதை!''

நாகோதரன் குரலை உயர்த்தி வாசித்தான்: "இந்தச் சேதியை நீங்கள் நம்ப மறுத்தால், ஒரு விஷயத்தை மட்டும் இங்கு குறிப்பிட்டுக் காட்டுகிறேன், அப்பா! விக்கிரமாதித்தர் பல்லவ நாட்டின் மீது படையெடுக்க ஆயத்தமான போது கங்க மன்னரிடமிருந்துதான் அவர் படையுதவியும் பொருள் உதவியும் பெற்றார்; உங்களிடம் அத்தகைய உதவி எதையும் கோர வில்லை. இதற்குக் காரணம் என்ன என்பதை இப்போது சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்."

குழப்பத்துடன் மெல்லத் தலைதூக்கினார் விஷ்ணுவர்த்தனர்.

"ஆமாம், தந்தையே! தாங்களும் சளுக்கியப் பரம்பரையில் வந்தவர் தாமே? விக்கிரமாதித்தரின் உடலில் ஓடும் வீரக் குருதிதானே தங்கள் உடலிலும் ஓடுகிறது? அப்படியிருக்க, அந்த அநியாயக்காரரின் பேராசைக்கு நாம் ஏன் அடிபணிந்து போக வேண்டும்? இரண்டு தலைமுறைகளாக ஆந்திர நாட்டை ஆண்டு வரும் நாம் அந்த உரிமையை நிலைநாட்டிக் கொள்ள முயற்சி செய்யக்கூடாதா? சளுக்கிய மூத்த பரம்பரைக்கு இளைய பரம்பரையினரான நாம் என்றென்றும் கைகட்டியே சேவகம் செய்ய வேண்டுமா என்ன? மமதை கொண்ட அந்த மூத்த பரம்பரையை மேலைச் சளுக்கியரெனப் பிரித்து ஒதுக்கி விட்டுக் கீழைச் சளுக்கியர் என்னும் ஒரு புதிய பரம்பரையை நாம் ஏன் தோற்றுவிக்கக் கூடாது?"

"விவேகமற்ற யோசனை! சிறுபிள்ளைத்தனமான ஆசை!" என்று சோர்வுடன் முனகினார் விஷ்ணுவர்த்தனர்.

இருக்கையை விட்டுச் சற்றே முன்னால் வந்த நாகோதரன், தன் கையிலிருந்த பட்டோலையைத் தூக்கிப் பிடித்துப் படித்தான்: ".... இவ்வாறு தாங்கள் நினைக்கலாம், அப்பா! ஆனால் உங்கள் வயிற்றில் பிறந்த வீரப் புதல்வியான நான் சொல்கிறேன்; நீங்கள் இந்தக் காரியத்தைச் செய்தே ஆக வேண்டும். செய்யத்தான் வேண்டும், தந்தையே! சளுக்கிய சாம்ராஜ்யத்தின் ஆட்சிப் பொறுப்பை விக்கிரமாதித்தர் தமது இளைய தம்பியான சந்திராதித்தரிடம் ஒப்படைத்து, அவரை மேற்பார்வையிடும் பொறுப்பை உங்களிடம் கொடுத்து விட்டு இந்தப் பல்லவ நாட்டின் மேல் படையெடுத்து வந்து அதைக் கைப்பற்றிக் கொண்டதோடு திருப்தியடையாமல், பாண்டி நாட்டின்மீதும் பாய்ந்து விட்டிருக்கிறார். இந்நிலையில் தாங்கள் அந்த அதிகப்படியான பொறுப்பை உதறியெறிந்துவிட்டு ஆந்திர நாடு இனி சுயாதிக்கமுள்ள ஒரு சுதந்திர நாடு என்பதாகப் பிரகடனப்படுத்தி விடுங்கள். சுக போகப் பிரியரும் முழுக் கோழையுமான சந்திராதித்தர் இதைக் கேட்டுக் குலை நடுங்கி விடுவார். அப்படியே அவர் உங்களை எதிர்த்து அடக்க முயன்றாலும் அது முடியாத காரியமாகி விடும். ஏனென்றால், சளுக்கியப் படை பலம் முழுவதும் இப்போது பாண்டிய நாட்டின் வட எல்லையில் குவிந்து கிடக்கிறது..."

"ஹும்! அரசியல் அறிவற்ற பிள்ளைத்தனமான பேச்சு இது. தென்னகத்தைக் கதிகலங்க அடித்துக் கொண்டிருக்கும் விக்கிரமாதித்தர் இச்சேதி கேட்டுத் தம் பார்வையை என் மீது திருப்பினால் நிலைமை என்ன ஆகும்?"

நாகோதரன் சடாரென்று குரலை உயர்த்திப் படித்தான்: "....என்றால் அச்சப்படுகிறீர்களா, அப்பா? இதற்குத்தான் பல்லவ மாமன்னர் பரமேசுவரவர்மரை உங்களிடம் அனுப்பி வைத்திருக்கிறேன்! அவருக்கு நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் ஒரு சிறு படை கொடுத்து உதவ வேண்டியது; அவ்வளவே! இதைத் தாங்கள் செய்தால், தங்கள் சிரத்திலிருக்கும் ஆந்திர நாட்டின் மணிமுடியை அசைக்க எத்தனை விக்கிரமாதித்தர்களின் வீரக் கரங்களாலும் முடியாது!"

கோபாவேசத்துடன் குமுறி எழுந்த விஷ்ணுவர்த்தனர், "துரோகிப் பெண்! எதிரியின் வஞ்சக வலையிலே வீழ்ந்து விட்ட நாசகாரி! என் அருமைச் சகோதரருக்கு எதிரான அரசியல் சதிகளில் ஈடுபடத்தானா இவளைப் பல்லவ நாட்டுக்கு அனுப்பினேன்? இவள் ஏற்றுக் கொண்டு போன இலட்சியம் என்ன? அதையெல்லாம் மறந்து விட்டுத் தன் சொந்தத் தந்தையின் வாழ்வுக்கே குழி பறிக்கத் துணிந்து விட்டாளே!" என்று இரைந்து கூவினார்.

அத்தியாயம் முப்பத்தாறு

வேதனைச் சேதி!

குலை நடுக்கம் கொண்டு விட்ட நாகோதரன் உடம்பைக் குறுக்கி முடக்கியவாறு பின்னால் நகர்ந்தான். அவன் கையில் இருந்த பட்டோலை வெடவெடத்துத் துடித்தது. ஆயினும் சிறிதளவு தைரியத்தை நெஞ்சில் இழுத்துப்

> அநாதையின் வாய்க்கு அன்னம் ஊட்டாத ஓர் ஆண்டவனை அல்லது மதத்தை, கைம்பெண்ணின் கண்ணீரைத் துடைக்காத ஒரு கடவுளை அல்லது மதத்தை நான் நம்ப முடியாது. கொள்கைகள் எவ்வளவு உன்னதமாயினும், தத்துவங்கள் எவ்வளவு நேர்த்தியாகப் பின்னப்பட்டிருந்தாலும், (மக்களிடம் வாழாமல்) புத்தகங்களில் மட்டும் வாழும்வரை மதத்தை நான் மதமாகக் கருத மாட்டேன். —**ஸ்வாமி விவேகானந்தர்**

பிடித்துக் கொண்டு வாய் குழற வாசித்தான்: ''அப்பா! தங்களுக்கும் விக்கிரமாதித்தருக்கும் இடையே நிரந்தரப் பகையை உண்டுபண்ணத் தக்க இந்த யோசனையைக் கேட்டு என் மீது தாங்கள் அடங்காச் சினம் கொள்வீர்கள் என்பதை நான் அறியாமல் இல்லை. பல்லவ நாட்டுக்கு என்னைத் தாங்கள் அனுப்பியதன் நோக்கத்துக்கு முற்றிலும் மாறான காரியத்தில் நான் ஈடுபட்டிருப்பதை அறிந்து என் மேல் வெறுப்பும் விரோதமும் கொள்வீர்கள் என்பதையும் உணராமல் இல்லை. பல்லவ நாட்டில் பலம் குன்றி விட்ட நமது புனித சமண சமயத்துக்குப் புத்துயிர் அளிக்க வேண்டும் என்னும் தங்களின் உயரிய இலட்சியத்தை என் உயிரைக் கொடுத்தேனும் நிறைவேற்றி வைக்க வேண்டும் என்ற திடவைராக்கியத்தோடுதான் நானும் இங்கு வந்தேன் அப்பா! ஆனால் அந்த இலட்சியப் பணிக்குத் துணை நிற்பதாக வாக்களித்து என்னை இந்நாட்டுக்கு வரப் பண்ணிய விக்கிரமாதித்தரே அதைத் தடுத்து நிறுத்தும் பெரும் பாறையாக நின்றதைக் கண்டு நான் அதிர்ந்து போனேன் அப்பா, அதிர்ந்தே போனேன்!.....''

வியப்பும் துடிப்புமாக நின்ற விஷ்ணுவர்த்தனர், ''என்ன! விக்கிரமாதித்தரே என் இலட்சிய விருப்பப் பணிக்கு விரோதியாக நின்றாரா?'' என்று வினவினார்.

சிறிதே தெம்பு பெற்ற நாகேசுரன் தெளிவான குரலில் தொடர்ந்து படித்தான்: ''ஆம், தந்தையே! நமது இலட்சியத்தின் ஆணி வேரை அசைத்துப் பிடுங்கி எறிந்தவர், உங்கள் அருமைச் சகோதரர் விக்கிரமாதித்தர் தான். இந்தக் கூற்றிலே உங்களுக்கு நம்பிக்கை இல்லையென்றால், உங்களது மதிப்புக்கும் வணக்கத்துக்கும் உரியவரான சிரவணபெள்குளத்துச் சமண சங்கத் தலைவர் அகளங்க அடிகளைச் சந்தித்துக் கேளுங்கள்.''

அதிர்ச்சியுற்ற ஆந்திர மன்னர் ''அகளங்க அடிகளா? அவருக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?'' என்று பதற்றத்துடன் கேட்டார்.

''உண்மைதான் அப்பா! சாம்ராஜ்ய விஸ்தரிப்பு வெறி கொண்ட விக்கிரமாதித்தர் தமது அநியாய அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகச் சமண சமயத்தைப் பயன்படுத்தத் திட்டமிட்டு, நம்முடைய பெயரால் அந்தத் தூய முனிபுங்கவரைப் பல்லவ நாட்டுக்கு வரவழைத்தார். அவருடைய தீய திட்டம் திடீரென்று திசை மாறிப் போகவே, நமது மாபெரும் சமண சமயத் தலைவரான அகளங்க அடிகளைக் கீழான முறையில் கொல்லத் துணிந்தார். விதியின் கருணையால் அவரது கொடிய மரணப் பிடியிலிருந்து தப்பிப் பிழைத்தார் அகளங்கர். நானும் ஒரு பெரும் பழி பாவத்திலிருந்து தப்பினேன். இந்தப் பெரும் காரியத்தை நமக்குச் செய்தவர் வேறு யாருமல்ல; நமது சமண சமயத்தின் எதிரியாக இத்தனை காலமாக நாம் எண்ணியிருந்த பல்லவ மன்னர் பரமேசுவரவர்மர்தான்.''

நெஞ்சிலே நெருஞ்சி முள் பாய்ந்தாற் போல் பதறித் துடித்தார் விஷ்ணுவர்த்தனர்.

நாகேசுரன் தழுதழுத்த குரலில் மேலும் வாசித்தான்: ''ஒரு வேதனைச் செய்தியைக் கேளுங்கள் அப்பா! பால் மணம் மாறாத பச்சிளம் குழந்தைப் பருவத்திலேயே அன்னையை இழந்த என்னைத் தாங்கள் கண்ணின் மணி போல் காத்துப் போற்றி வளர்த்து, எனக்காகவே இன்று வரை உயிர் வாழ்ந்து வருகிறீர்கள்; இதை நன்கு அறிந்தவரான விக்கிரமாதித்தரே தமது தளபதி வில்வேலியின் மூலமாக, ஒரு குற்றமும் செய்யாத என்னை ஒழித்துக் கட்டி உங்களை ஆறாத் துயரில் ஆழ்த்த முயன்றார் அப்பா! அந்த மமதை கொண்ட வில்வேலி மதம் பிடித்த யானை ஒன்றின் மேல் என்னை வஞ்சகமாக ஏற்றி மரண வாசலுக்கே அனுப்பி வைத்தான் அப்பா! அவ்வளவு பெரிய ஆபத்திலிருந்து என்னைக் காப்பாற்றியவர் பரமேசுவரவர்மர்தான் அப்பா!''

ஆந்திர மன்னர் தம் நெஞ்சை அழுத்திப் பிடித்துக் கொண்டு புழுப் போல் நெளிந்தார். இரத்தச் சிவப்பேறிய அவர் கண்கள் அருவியென நீர் வழித்தன. (தொடரும்)

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.



என் அம்மா
எப்பொழுதும்
தேர்ந்தெடுப்பது ....
MAFATLAL GROUP
மபத்லால் க்ரூப்
பிரிண்டெட் பாப்ளின்கள்
நியு ஷொக் (ஷொக்) அஹமதாபாத் • நியு ஷொக், நடியாத் • ஸ்டேண்டர்ட், பம்பாய் • ஸ்டேண்டர்ட், (நியு சைனு) பம்பாய் • ஸ்டேண்டர்ட், தேவாஸ் • ஸாஸுன், பம்பாய் • ஸாஸுன், (நியு யூனியன்) பம்பாய் • ஸுரத் காட்டன், ஸுரத் • மபத்லால் பைன், நவ்ஸாரி,
Aiyars MGP. 345-TM. A



மலரினுள் மலராய்...
பூத்துமலரும் பொலிவு,
பூத்துப் பூரிக்கும் புதுமலர்ச்சி!
Himalaya Bouquet Talcum Powder
Himalaya Bouquet Snow
ஹிமாலயா
புக்கே
ஸ்னோ, டால்கம் & டாய்லெட் பவுடர்கள்